புலமைப் பரிசிற் பரீட்சை

மாணவர்களுக்கு

5ம் வகுப்பு

# பொது உளச்சார்பு பயிற்சிகளும் பரீட்சைகளும்

(ஏழாம் பதிப்பு)

சி.திலகநாதன் B.A.



வீரகேசரி வெளியீடு

# பொது உளச்சார்பு பயிற்சிகளும் பரீட்சைகளும்

கடந்தகால வினாத்தாள்களை உள்ளடக்கியது.

ஐந்தாம் வகுப்பு

புலமைப் பரிசிற் பரீட்சை

மாணவர்களுக்கு உரியது

ஏழாம் பதிப்பு.

சி. திலகநாதன் B.A., A.I.B., I.C.M.A. (Final), M.I.M.

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# General Aptitude Tests & Exercises

by

S. THILAGANATHAN, B.A., A.I.B., I.C.M.A. (Final), M.I.M.

| | | |
|---|---|---|
| First Edition | May, | 1975 |
| Second Edition | December, | 1976 |
| Third Edition | December, | 1977 |
| Fourth Edition | December, | 1978 |
| Fifth Edition | December, | 1979 |
| Sixth Edition | December, | 1980 |
| Seventh Edition | December, | 1981 |

| | | |
|---|---|---|
| First Sinhala Edition | March, | 1977 |
| Second Sinhala Edition | March, | 1978 |
| Second Sinhala Edition 2nd Printing | March, | 1979 |
| Third Sinhala Edition | December, | 1980 |

COPY RIGHTS

RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
VELIYEEDU

**Price Rs. 17/50**

Published by:

VIRAKESARI
P.O. Box: 160, COLOMBO.

Express Newspapers (Cey.) Ltd.
185, Grandpass Road, Colombo - 14.

இலங்கைப் பல்கலைக் கழக கல்வி உளவியல் துறைப் பேராசிரியர்

எஸ். முத்துலிங்கம் B. Sc (Cey.), M. A., Ph. D. (Lond.)

அவர்கள் அளித்த

# மதிப்புரை

கல்வித் துறையிலும் பிற துறைகளிலும் விவேகப் பரீட்சைகளின் முக்கியத்துவம் இன்று அதிகரித்து வருகின்றது. விவேகத்தை அளவிடும் பரீட்சைகள் தமிழில் போதியளவு இதுவரை வெளிவரவில்லை. இக்குறைபாட்டை இந்நூல், கூடிய அளவுக்கு நிவர்த்தி செய்கின்றது எனலாம்.

பொது உளச்சார்புப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவருக்கு வேண்டிய முழுமையான பயிற்சியைப் பெறுவதற்கு இந் நூல் இன்றியமையாதது. பரீட்சை முறைகள் ஒவ்வொன்றும் மாணவருக்கு எளிதில் விளங்கக் கூடிய வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. விடைகளுக்குரிய விளக்கங்கள் மேலும் பரீட்சை நுணுக்கங்களை மாணவர் அறிய உதவுகின்றன.

விவேகப் பரீட்சையில் பொதுவாக எண்புலமை, சொற்புலமை, கட்புலமை ஆதியனவற்றை அளவிடும் பரீட்சைகள் முக்கியமானவை. இவை ஒவ்வொன்றிலும் படிமுறையில் அமைந்த பயிற்சிகள் தனியாக ஒரு பாகத்தில் இடம் பெறுவது இந் நூலின் ஒரு சிறப்பியல்பாகும்.

விவேகப் பரீட்சை பற்றிய பல்வேறு நூல்களையும் கற்ற அனுபவத்துடன் இத் துறையில் இந்நூலாசிரியர் இயல்பான ஆர்வமும் புலமையும் உடையவர். இத் துறையில் இரண்டு வருட காலமாக எடுத்த முயற்சியின் பயனே இந் நூலாகும்.

இத்துறையில் இந் நூல் ஆரம்ப நூலாக எழுதப்பட்ட போதிலும், இது உயர் வகுப்பினருக்கும் வளர்ந்தோருக்கும் பயன்படக் கூடிய வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ச. முத்துலிங்கம்

கல்வி உளவியல் துறை,
கல்விப்பீடம்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
கொழும்பு.

# முதற் பதிப்பின் முன்னுரை

விவேகப் பரீட்சைகள் பற்றிய நூல்கள் பலவற்றைக் கற்றபின், இத்துறையில் திறமை மிக்க பலருடன் ஆலோசித்து இந்நூலிலுள்ள பரீட்சைகளும் பயிற்சிகளும் எழுதப்பட்டன. இவை பின்னர் மாணவர்களுக்கும், பிறருக்கும் கொடுத்துப் பரீட்சித்துத் தேவைக்கேற்ப பெருமளவில் மாற்றியமைக்கப்பட்டன.

இந்நூலை எழுதுவதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எனது சகோதரரான திரு. சி. தில்லைநடேசனும் வீரகேசரி நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பதிகாரியான திரு. எஸ். பாலச்சந்திரனும் காரணமாவர். எழுதுகையில் அவ்வப்போது அபிப்பிராயங்களைத் தந்துதவிய திரு. சு. செல்வேந்திரன், திரு. க. சின்னத்துரை, திரு. கே. இராமச்சந்திரன், திரு. ஜே. எல். நவரத்தினம், திரு. வி. ஞானசூரியம், திரு. பொ. சிவலோகநாதன் ஆகியோருக்கு எமது நன்றி என்றும் உடையதாகும். வினாக்களை ஆக்குவதிலும், விடைகளை எழுதுவதிலும் எனக்கு எனது மனைவி உடனுதவியாக இருந்தார். கல்வித்துறையில் மாணவர்க்குப் பயன்படும் இந்நூலை வெளியிட முன்வந்து, இதனைச் சிறந்த முறையில் அச்சிட்ட வீரகேசரிப் பிரசுர நிலையத்தினருக்கு நாம் மிக்க நன்றி உடையவராக உள்ளோம்.

இந்நூலில் சில குறைபாடுகள் இருக்கக்கூடும். அவற்றை எழுதினால் நூலைத் திருத்தி அமைப்பதற்கு எமக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இந்நூலை மாணவர்கள் பலரும் கற்றுப் பயனடைய வேண்டுமென்பதே எமது பேரவாவாகும்.

சி. தி.

கொழும்பு.

# பதிப்புரை

ஆசிரியர், பெற்றோர், மாணவர் மத்தியில் இந்நூலின் முதல் ஆறு பதிப்புகளுக்குக் கிடைத்த வரவேற்பும், மதிப்பும், திருத்திய இதன் ஏழாவது பதிப்பை வெளியிட எமக்கு உற்சாகத்தை அளித்தன.

அதிக பக்கங்களுடன் புதிய விவேகப் பரீட்சைகளையும், விளக்கங்களையும் கொண்டு அழகாக இப்பதிப்பு அச்சிடப்பட்டுள்ளது.

இந்நாட்டில் தமிழ் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நலம்புரியும் ஒரு சிறந்த சேவையாக இந்நூலை வெளியிடுகின்றோம்.

வீரகேசரி,

31—12—81.

நிர்வாகி,

புத்தக பிரசுர இலாகா.

கல்வி நூல் பிரசுர சபையினரால்

## நான்காம் பதிப்பிற்கு அளிக்கப்பட்ட சான்றிதழ்

1952-ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29-ஆம் திகதி வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன் மொழிப் பாடசாலைகளுக்கும், இருபாஷைப் பாடசாலைகளுக்கும் ஆங்கிலப் பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19 (ஏ)ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப்புத்தகம் நூல் நிலையத்திற்குரிய புத்தகமாக உபயோகிப்பதற்கு மகா வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கல்விநூற் பிரசுர ஆலோசனைச்சபை, மலாய் வீதி, கொழும்பு-2 28-2-1977,

ஒப்பும்: பா. ப. ஆரியவன்ச
செயலாளர்,
கல்வி நூல் பிரசுர ஆலோசனைச்சபை,

## ஏழாம் பதிப்பின் முன்னுரை

விவேகப் பரீட்சைகளின் முக்கியத்துவம் அண்மைக் காலத்தில் பெரிதும் அதிகரித்துள்ளது. பல்வேறு பரீட்சைகளில் இவை இன்று பயன்படுத்தப்படுவதால் பரீட்சார்த்திகளின் தொகையும் கூடியுள்ளது. பல பரீட்சை முறைகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் சொல்சாராத (Non-Verbal) பரீட்சைகளை இங்கு குறிப்பிடலாம். மாறிவரும் தேவைகளைக் கருதி, இரண்டாம் பதிப்பில் புதிய பரீட்சை முறைகள் சில சேர்க்கப்பட்டன. நூலின் பொதுவான அமைப்பு மாறாத வகையில் சில பரீட்சைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் எளிதான புதிய பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் திருத்தங்களைச் செய்வதற்குப் பயனுள்ள கருத்துக்களைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும், பரீட்சைகளைச் செய்து சரிபார்ப்பதற்கு உதவிய மாணவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஏழாம் பதிப்பில் நூலின் ஒரு சில பயிற்சிகள் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றாம் பதிப்பிலிருந்து கடந்த கால வினாப்பத்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றைப் பிரசுரிப்பதற்கு அனுமதி அளித்த இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளருக்கு எமது நன்றியுடைத்தாகும்.

சி. தி.

# பொருளடக்கம்.

அறிமுகம்

பாகம் ஒன்று: பயிற்சிகள்

1. எண் புலமை 11

2. சொற்புலமை 26

1. பொருந்தாச் சொற்கள் 26

2. பொருத்தம் காணல் 28

3. சொற்களை ஒழுங்குபடுத்தல் 33

4. ஒத்த பொருளையுடைய சொற்கள் 34

5. எதிர்ப் பொருளுடைய சொற்கள் 36

6. குறியீடுகள் 38

3. மொழிப்புலமை 40

4. ஆய்ந்தறிதற் புலமை 43

5. தர்க்கப் புலமை 46

6. கணிதப் புலமை 48

7. கட்புலமை 52

8. பணிப்புப் பயிற்சிகள் 59

பாகம் இரண்டு: பரீட்சைகள்

பரீட்சை ஒன்று 61

பரீட்சை இரண்டு 70

பரீட்சை மூன்று 79

பரீட்சை நான்கு 92

பரீட்சை ஐந்து 104

கடந்த காலப் பரீட்சை வினாக்கள் 117

விடைகள் 165

விளக்கங்கள் 171

# அறிமுகம்

இந்நூல் விவேகப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கு உதவும் வகையில் எழுதப்பட்ட ஓர் ஆரம்ப நூலாகும். முதன் முதலில் அல்பிரட் பினே (ALFRED BINET) என்பவரால் ஒழுங்கு முறையில் அமைந்த விவேகப் பரீட்சை அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்பின் இதுபோன்ற பல்வேறு பரீட்சைகள் வெளிவரத் தொடங்கின. இப் பரீட்சைகளில் பயன்படுத்தப்பட்ட பரீட்சை முறைகளும் தற்போது ஆரம்ப வகுப்பினருக்குரிய பரீட்சைகளில் கொடுக்கப்படும் நவீன பரீட்சை முறைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

**விவேகம் என்பது என்ன?**

விவேகம் அல்லது நுண்மதி (INTELLIGENCE) என்பது குறிப்பிட்ட விடயத்தை விரைவாக விளங்கிக் கொள்ளுதல் (COMPREHENSION), அவற்றை நினைவில் வைத்திருத்தல் (RETENTION), இவ்வாறு நினைவில் வைத்திருக்கும் விடயங்களைத் தேவைக்கேற்ப ஆராய்தல் (ANALYSIS), பின், இவ்வாறு ஆராய்ந்த உண்மைகளை விளக்குதல் (INTERPRETATION) ஆகிய நான்கு அம்சங்களையும் உள்ளடக்கிய ஓர் ஆற்றலாகும். விவேகம் அறிவிலிருந்து (KNOWLEDGE) வேறுபட்டது. அறிவியல் நூல்களைக் கற்பதால் ஒருவர் தனது அறிவை விருத்தி செய்யலாம். ஆனால், விவேகத்தை நூல்களைக் கற்பதால் விருத்தி செய்ய முடியாது. கல்வி கற்றோரிலும் கல்லாதவர்கள் விவேகிகளாக இருக்கக் கூடும். விவேகம் என்பது ஒருவரது இயல்பான ஆற்றலாகும் (NATURAL ABILITY) பொதுவாக விவேகத்தை தன்னையும் சுற்றுடலையும் (ENVIRONMENT) பற்றிய முழுமையான விழிப்புணர்ச்சி (TOTAL AWARENESS) எனக் கூறுதல் பொருத்தமுடையது. இதனைச் சூழலுக்கேற்ப அனுசரணையுடன் வாழ்வதற்கு வேண்டிய திறன் என்றும் கூறலாம்.

**விவேகப் பரீட்சைகள்**

உள ஆற்றலை (MENTAL ABILITY) அளவிட விவேகப் பரீட்சைகள் (INTELLIGENCE TESTS) உதவுகின்றன. இந்த ஆற்றலை, பேராசிரியர் ஸ்பியர்மன் (SPEARMAN) என்பவர் சிறப்பான ஆற்றல் (SPECIAL ABILITY) பொதுவான ஆற்றல் (GENERAL ABILITY) என இருவகையாகப் பிரித்துள்ளார். இந்தப் பாகுபாடு விவேகப் பரீட்சைகளை நல்ல முறையில் அமைப்பதற்குப் பெரிதும் உதவியது. விவேகத்தைப் பொறுத்த வரையில் சிறப்பான ஆற்றலிலும் பார்க்கப் பொதுவான ஆற்றலே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், குறித்த ஒரு துறையில் மட்டும் சிறப்பான ஆற்றல் பெற்ற ஒருவர் ஏனைய துறைகளில் குறைவான ஆற்றலுடையவராக இருத்தல் கூடும். இதனால் இவரின் பெறுபேறு, எல்லாத் துறைகளிலும் சாதாரண ஆற்றல் பெற்ற ஒருவரின் பெறுபேற்றிலும் குறைவாக இருக்கக் கூடும். விவேகத்தைப் பொறுத்தவரையில் மொத்தப் (OVERALL) பெறுபேற்றிற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதனால் சிறந்த விவேகப் பரீட்சையில் எல்லாவித ஆற்றல்களையும் அளவிடக்கூடிய பல பரீட்சைகள் இருத்தல் அவசியமானதாகும்.

விவேகப் பயிற்சிகளின் உபயோகங்கள்

மேல் வகுப்புகளுக்கு மாணவர்களைத் தெரிவதற்கு விவேகப் பரீட்சை பயன் படுத்தப்படுவதை இதன் முக்கியமான உபயோகங்களில் ஒன்ருகக் கூறலாம். இப் படியான தெரிவு மாணவர்களின் பாடங்களுக்குக் கிடைத்த பாடப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவதிலும் சிறந்தது. ஏனெனில், அதிக பயிற்சியால் விவேகம் குறைந்த மாணவர்கள் பாடங்களில் அதிக புள்ளிகள் பெறக்கூடும். இவர்கள் உயர் வகுப்புகளில் தேர்ச்சி பெறுவதற்கு ஏற்ற விவேகம் அற்றவர்களாவர். ஆகவே விவே கப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களை இடைநிலை, உயர் நிலை பாடசாலைகளுக்குத் தெரிவது சிறந்தது. இங்கிலாந்தில் 11 வயதில் மாணவரை இடைநிலைப் பாடசாலைக்குத் தெரிவு செய்வதற்கு விவேகப் பரீட்சை பயன்படு கிறது. இலங்கையில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களில் திறமைமிக்கவர்களுக்குப் புல மைப் பரிசில் அளிப்பதற்கு இத்தகைய பரீட்சை கொடுக்கப்படுகிறது. இதுபோல சர்வகலாசாலை, பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தெரிவு செய்வ தற்கும் ஏனைய பரீட்சைகளுடன் விவேகப் பரீட்சையும் பயன்படுத்தப்படலாம்.

பாடசாலைகளில் மாணவர்களைத் திறமைக்கேற்ப தரப்படுத்திக் கல்வி போதிப் பதற்கு விவேகப் பரீட்சை உதவும். திறமையில் வேறுபட்ட எல்லா மாணவர்களையும் ஒரே வகுப்பில் வைத்துக் கற்பிப்பது கடினம். ஆகவே அவர்களின் உள ஆற்றலுக்கு (MENTAL ABILITY) ஏற்ப வெவ்வேறு பிரிவுகளாக்கிக் கற்பிப்பது சிறந்தது. இத ஞல் விவேகம் குறைந்த பிள்ளைகளுக்கு அதிக பயிற்சி அளிக்கும் வாய்ப்பு ஏற்படு கின்றது.

தொழிலுக்கு வழிகாட்டவும் விவேகப் பரீட்சை உதவுகின்றது. ஒவ்வொரு தொழிலையும் நன்கு செய்வதற்கு அதற்குரிய விவேகம் வேண்டும். ஒருவரின் விவேக ஈவைக் கொண்டு முன்கூட்டியே அவர் எத்தகைய தொழிலுக்கு ஏற்றவர் என்று அறிய முடியும். அத்துடன் வெவ்வேறு தொழிலுக்குத் தேவையானவர்களைத் திறமையாகத் தெரிவு செய்வதற்கும் விவேகப் பரீட்சை உதவுகின்றது. இலங்கை யில் நிர்வாக சேவைத் தேர்வில் இத்தகைய பரீட்சை பயன்படுத்தப்படுவது குறிப் பிடத்தக்கது.

உளக் குறைபாடுடைய மாணவர்களின் விவேகத்தை அறிந்து அவர்களுக்கு விசேட கல்வி வசதி அளிப்பதற்கு இத்தகைய பரீட்சை உதவுகின்றது. முடிவாகக் கூறின் இப் பயிற்சிகளால் எல்லா மாணவருக்கும் கல்வியில் ஆர்வமும், திறமையும் ஏற்படும். இது அவர்களின் மேற்படிப்பிற்குச் சிறந்த தூண்டுதலை அளிக்கும் எனலாம்.

விவேக ஈவு

வெப்பமானி மூலம் வெப்பத்தை அளவிடுவதுபோன்று ஒருவரின் விவேகத்தை அளவிடுவது எளிதானதல்ல ஆயினும், இன்று விவேகத்தை அளவிடுவதற்குப் பெரு மளவில் பயன்படுவது விவேக ஈவுப் (INTELLIGENCE QUOTIENT) பரீட்சைகளா கும். இப் பரீட்சைகள் எண், எழுத்து, உருவம் போன்றவற்றிலுள்ள ஆற்றலின்

அடிப்படையில் விவேகத்தை அளவிடுகின்றன. விவேக ஈவைக் கணிப்பதற்கு, முதலில் பல்வேறு தரத்தில் (GRADE) அமைந்த பல பரீட்சைகளின் பெறுபேறுகளை ஆதாரமாக வைத்து ஒவ்வொரு வயதினருக்குமுரிய சராசரிப் பரீட்சை ஒன்று தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு 10 வயதிற்கென அமைக்கப்பட்ட ஒரு பரீட்சையை 8 வயதுடைய ஒரு பிள்ளை செய்ய முடிந்தால் அப் பிள்ளையின் உள வயது (MENTALAGE) 10 எனக் கருதப்படும். கால வயதிற்கும் (CHRONOLOGICAL AGE) உளவயதிற்கும் உள்ள தொடர்பே விவேக ஈவாகும். இது கீழே கொடுக்கப்பட்ட முறையில் கணக்கிடப்படும்.

$$\text{விவேக ஈவு} = \frac{\text{உள வயது}}{\text{கால வயது}} \times 100 = \frac{10}{8} + 100 = 125$$

எனவே இந்த அடிப்படையில் சராசரி ஆற்றலைக் கொண்ட ஒரு பிள்ளையின் விவேக ஈவு 100 ஆக இருக்கும். இந்த விவேக ஈவு ஒவ்வொரு பிள்ளையையும் பொறுத்தவரை பெருமளவிற்கு நிலையான தன்மை கொண்டிருப்பதை (STATIC) உளவியலாளர் கண்டனர். இதன் காரணமாக உளவயதுக் கோட்பாடும் (CONCEPT OF MENTAL AGE) அதன் அடிப்படையில் அமைந்த விவேக ஈவுப் பரீட்சைகளும் இன்று மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. தற்காலத்தில் இந்த விவேக ஈவு நூற்று வீதத்தில் (PERCENTILE) கணிக்கப்படுகின்றது.

## பரீட்சையில் மாணவர்கள் சித்தி பெறுவதைப் பாதிக்கும் காரணிகள்

பரீட்சை நேர மனநிலை: பரீட்சை நேரத்தில் மாணவர்களின் மனநிலை அவர்கள் விவேகப் பரீட்சையில் தேர்ச்சியடைவதைப் பெருமளவிற் பாதிக்கின்றது. சாதாரணமாகச் சோதனைகளில் பயப்படக்கூடிய மாணவர்கள் விவேகச் சோதனையில் மட்டுமன்றி வாழ்க்கையில் வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறே நடந்துகொள்வர். ஏதாவது மனவெழுச்சி அனுபவங்களால் தாக்குண்ட பிள்ளைக்கு விவேகப் பரீட்சையில் சித்தியடைவது கடினமாக இருக்கும்.

ஊக்கமும் ஆர்வமும்: ஊக்கமும் ஆர்வமும் மாணவனின் சித்தியைப் பாதிக்கின்றது என நம்பப்படுகின்றது. மாணவர்களுக்கு விருப்பமான வினாக்களில் அவர்கள் கூடிய ஆர்வம் காட்டுவர்.

குழப்பமற்ற சூழ்நிலை: பரீட்சை நடைபெறும்போது சத்தம், காலநிலை, பரீட்சைக்கூட அமைப்புப் போன்றவை அவர்களின் திறமையைப் பாதிக்கும். இதனால் இத்தகைய பிரதிகூலமான சூழ்நிலைகளைக் கூடிய அளவு தவிர்க்கவேண்டும்.

வாழ்க்கைச் சூழல்: மாணவனின் வாழ்க்கைச் சூழல் விவேகச் சோதனையில் பெரிய பாதிப்பை உண்டுபண்ணுவதாக நம்பப்படுகின்றது. பாடசாலையிலும், வீட்டிலும் உள்ள கல்வியறிவுப் பின்னணி விவேகப் பரீட்சையில் திறமையாகச் செய்வதற்கும் முக்கியமாகச் சொல் சார்ந்த பரீட்சைகளில் தேறுவதற்கும், கல்வியில் முன்னேற்றம் அடைவதற்கும் உதவும்.

பயிற்சியும் பழக்குதலும்: விவேகப் பரீட்சைக்குப் பயிற்சி அளித்தலும் பழக்குதலும் (COACHING) மாணவர் அதிக புள்ளிகள் எடுப்பதற்கு உதவும். வேர்ணன் (VERNON), டெம்ஸ்டர் (DEMPSTER), வைஸ்மன் (WISEMAN) என்பவர்களின் ஆய்வு இதனை உறுதிப்படுத்துகிறது. இத்தகைய பயிற்சிகள் பரீட்சையில் திறமையான சித்தியடைவதற்கு உதவுவது மட்டுமின்றிக் கல்வியில் மாணவருக்கு ஆர்வத்தையும் அளிக்கிறது. பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒருவர் தனது விவேகத்தை மட்டும் நம்பியிருத்தல் போதாது. அதிக பயிற்சிகளைச் செய்தவர்கள் பரீட்சையைத் திறமையாகச் செய்யக்கூடியவராக இருப்பர். இதனால் அதிக பயிற்சி பெற்ற ஒருவருக்குத் தன்னைவிட விவேகம் கூடிய ஒருவரிலும் பார்க்கத் திறமையாகப் பரீட்சையைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படலாம். எவ்வாறாயினும் ஓரளவுக்குத்தான் இவ்வாறு பயிற்சிகள் மூலம் அதிக பலனைப் பெறலாம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். முடிவாகக் கூறினால் ஒவ்வொருவரும் தமது திறமையைப் பரீட்சையில நன்கு வெளிப்படுத்த வேண்டுமாயின் இத்தகைய பரீட்சை நுணுக்கங்களை (EXAMINATION TECHNIQUES) அறிந்திருப்பதும் அவற்றிலே பயிற்சி பெற்றிருப்பதும் அவசியமாகும். இதற்கு உதாரணமாகப் பயிற்சி பெற்றவர்களுக்கும் பயிற்சி பெறாதவர்களுக்கும் வெவ்வேறாக நடத்திய எண் புலமைப் பரீட்சைகளின் பெறுபேறுகளை இங்கு கூறுதல் பொருத்தமுடையதாகும். முதலில் எதுவித பயிற்சியும் பெறாத 30 மாணவர்களுக்கு 'மாதிரிப் பரீட்சை' ஒன்று கொடுக்கப்பட்டது. இவர்கள் 35க்கும் 70க்கும் இடையில் புள்ளிகள் பெற்றார்கள். இவர்களின் சராசரிப் புள்ளிகள் 50 ஆகும். பின் இதே மாணவர்களுக்கு இந் நூலின் முதல் பாகத்திலுள்ள பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதன் பின், மீண்டும் முன் கொடுக்கப்பட்டது போன்ற பரீட்சை ஒன்று இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப் பரீட்சையில் இவர்கள் 55க்கும் 95க்கும் இடைப்பட்ட புள்ளிகள் பெற்றார்கள். இவர்களின் சராசரிப்புள்ளிகள் 74 ஆகும். இப் புள்ளி விபரங்கள் பயிற்சியின் பயனை அறிய உதவுகின்றன.

நேரப் பரீட்சை:

விவேகப் பரீட்சையை ஒரு "நேரப் பரீட்சை" என்று கூறலாம். இப் பரீட்சையில் நேரம் மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவும் சுலபமானதாகவும் எல்லாராலும் செய்யக் கூடியதாகவும் இருக்கும். ஆனால், இவற்றைக் குறிப்பிட்ட நேரத்துள் செய்து முடிக்க இயலாது போகலாம். இதனால் பலர் இப் பரீட்சைகளில் அதிக புள்ளிகள் பெறமுடியாது இருப்பதற்குக் காரணம் விடை தெரியாது இருப்பதிலும் பார்க்க நேரம் போதாமல் இருப்பதேயாகும். இந்நூலில் கடினமான வினாக்களும் உள்ளன. இவற்றிற்கு ஒருவர் விடையளிக்கமுடியாது போனால் அதிகம் கவ

லேப்படத் தேவையில்லே. ஏனெனில் இந்நூல் முக்கியமாகப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலத்திற்காகவே எழுதப்பட்டது. இவற்றிற்கு விடையளித்தால் சாதாரண விவேகப் பரீட்சைகளில் தேர்ச்சியடைவது சுலபமாக இருக்கும்.

நூலேப் பயன்படுத்தும் முறை:

இந்நூல் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படத்தக்க வகையில் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் பாகம் எட்டு அத்தியாயங்களேக் கொண்டுள்ளது. முதல் ஏழு அத்தியாயங்களும் விவேகத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முக்கியமான ஏழு புலமைகளின் அல்லது ஆற்றல்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. அவைகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | எண் புலமை | (NUMERICAL ABILTY) | அத்தியாயம் 1 |
| 2. | சொற்புலமை | (VERBAL ABILITY) | அத்தியாயம் 2 |
| 3. | மொழிப்புலமை | (LANGUAGE ABILITY) | அத்தியாயம் 3 |
| 4. | ஆய்ந்தறிதற் புலமை | (REASONING ABILITY) | அத்தியாயம் 4 |
| 5. | தர்க்கப் புலமை | (LOGICAL ABILITY) | அத்தியாயம் 5 |
| 6. | கணிதப் புலமை | (MATHEMATICAL ABILITY) | அத்தியாயம் 6 |
| 7. | கட் புலமை | (VISUAL ABILITY) | அத்தியாயம் 7 |

இரண்டாம் பாகத்தில் ஐந்து மாதிரிப் பரீட்சைகள் உள்ளன. பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் முதலில் பயிற்சிகளே நன்கு செய்த பின் மாதிரிப் பரீட்சைகளேச் செய்யவேண்டும். தமது விவேகத்தை அறிய விரும்பியவர்கள் நேரடியாக மாதிரிப் பரீட்சைகளேச் செய்து விடைகளேப் பார்த்துத் தமது பெறுபேறுகளே அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பரீட்சைக்கும் முற்றாக விடையளித்தபின்னரே விடைகளேச் சரி பார்க்கவேண்டும். எல்லா வினுக்களுக்கும் விடைகளேப் புத்தகத்தில் குறித்து பயிற்சி பெறுவது பரீட்சை நன்கு செய்வதற்கு வழிவகுக்கும்.

இந்நூலில் தரப்பட்டுள்ள எல்லா வினுக்களும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களால் செய்யக் கூடிய வகையில் அல்லது விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன. கணிதப் புலமையில் அடங்கும் வினுக்களெல்லாம் சாதாரண எண் கணித அறிவுடன் செய்யக் கூடியவை. இவற்றைச் செய்வதற்கு உயர் கணித அறிவின் அவசியம் இல்லே. இதனுல் சமன்பாடுகளேப் பயன்படுத்தாது சாதா

ரணமான எண் கணித முறையில் ஒவ்வொரு வினவையும் அணுகுவதே சிறந்தது. ஒவ்வொரு வினவிற்கும் விடை காணுவதற்குப் பல சுருக்க முறைகள் உள்ளன. ஆசிரியர்கள் சிறந்ததெனக் கருதும் சுருக்க முறையை மாணவர்களுக்குக் கற்பிப்பது அவசியமானதாகும்.

உயர்தர வகுப்பினரும் வளர்ந்தோரும் இந் நூலின் பரீட்சைகளைக் கொடுக்கப்பட்டுள்ள நேரத்திலும் பார்க்க குறைவான நேரத்தில் செய்துமுடிக்க வேண்டும். இந் நூல் முக்கியமாகப் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கு உதவும் ஒரு பயிற்சி நூலாகவே அமைந்திருப்பதால் விவேக ஈவை அளவிட உதவும் அட்டவணை எதுவும் சேர்க்கப்படவில்லை.

## பாகம் ஒன்று

# எண் புலமை

### பயிற்சி - 1

*கீழே கொடுக்கப் பட்ட எண்தொடரைக் கவனமாகப் பார்க்கவும். இது ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளது. இந்த ஒழுங்கு முறையைக் கவனித்து அடுத்து வர* **வேண்டிய எண்ணை எழுதவும்.**

1 3 5 7 9 .........

மேலேயுள்ள எண் தொடரில் ஒவ்வோர் எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணிலும் பார்க்க 2 அதிகமாக உள்ளது. எனவே இந்த எண் தொடரில் அடுத்து வர வேண்டிய எண் 11 ஆகும்.

*இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 4 | 6 | 8 | 10 | ......... |
| 2. | 30 | 32 | 34 | 36 | 38 | ......... |
| 3. | 21 | 23 | 25 | 27 | 29 | ......... |
| 4. | 3 | 6 | 9 | 12 | 15 | ......... |
| 5. | 72 | 75 | 78 | 81 | 84 | ......... |
| 6. | 8 | 12 | 16 | 20 | 24 | ......... |
| 7. | 45 | 50 | 55 | 60 | 65 | ......... |
| 8. | 27 | 33 | 39 | 45 | 51 | ......... |
| 9. | 40 | 50 | 60 | 70 | 80 | ......... |
| 10. | 43 | 54 | 65 | 76 | 87 | ......... |
| 11. | 1 | $1\frac{1}{2}$ | 2 | $2\frac{1}{2}$ | 3 | ......... |
| 12. | 1.5 | 3 | 4.5 | 6 | 7.5 | ......... |
| 13. | 123 | 234 | 345 | 456 | 567 | ......... |
| 14. | 402 | 503 | 604 | 705 | 806 | ......... |
| 15. | 25 | 50 | 75 | 100 | 125 | ......... |

## பயிற்சி - 2

இங்கு வேறோர் எண் தொடர் தரப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 10 | 8 | 6 | 4 | ......... |

இந்த எண் தொடரில் ஒவ்வோர் எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணிலும் பார்க்க 2 குறைவாக உள்ளது. ஆகவே அடுத்து வரவேண்டிய எண் 2 ஆகும்.

இப்போது கீழே உள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 29 | 27 | 25 | 23 | 21 | ......... |
| 2. | 32 | 30 | 28 | 26 | 24 | ......... |
| 3. | 21 | 18 | 15 | 12 | 9 | ......... |
| 4. | 45 | 40 | 35 | 30 | 25 | ......... |
| 5. | 45 | 38 | 31 | 24 | 17 | ......... |
| 6. | 90 | 75 | 60 | 45 | 30 | ......... |
| 7. | 3 | $2\frac{3}{4}$ | $2\frac{1}{2}$ | $2\frac{1}{4}$ | 2 | ......... |
| 8. | 1.63 | 1.54 | 1.45 | 1.36 | 1.27 | ......... |
| 9. | 175 | 150 | 125 | 100 | 75 | ......... |
| 10. | 852 | 753 | 654 | 555 | 456 | ......... |

## பயிற்சி - 3

கீழேயுள்ள எண் தொடரில் ஒவ்வொரு எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணை ஒரு குறிப்பிட்ட தொகையால் பெருக்குவதன் மூலம் அல்லது பிரிப்பதன் மூலம் பெறப் பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | 9 | 27 | 81 | .......... |

இந்த எண் தொடரில் ஒவ்வோர் எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணை 3 ஆல் பெருக்குவதால் பெறப்பட்டது. ஆகவே இங்கு அடுத்து வரவேண்டிய எண் 243 ஆகும். கீழே இன்னுமோர் எண் தொடர் தரப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 64 | 32 | 16 | 8 | 4 | ......... |

இந்த எண் தொடரில் ஒவ்வோர் எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணை 2 ஆல் பிரிப்பதால் பெறப்பட்டது. ஆகவே இத்தொடரில் அடுத்து வரவேண்டிய எண் 2 ஆகும்.

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 4 | 8 | 16 | 32 | ......... |
| 2. | $\frac{1}{8}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{2}$ | 1 | 2 | ......... |
| 3. | 0.001 | 0.01 | 0.1 | 1 | 10 | ......... |
| 4. | 256 | 128 | 64 | 32 | 16 | ......... |
| 5. | 3125 | 625 | 125 | 25 | 5 | ......... |
| 6, | 3 | 6 | 12 | 24 | 48 | ......... |
| 7, | 5 | 15 | 45 | 135 | 405 | ......... |
| 8, | 2 | 6 | 18 | 54 | 162 | ......... |
| 9: | 27 | 9 | 3 | 1 | $\frac{1}{3}$ | ......... |
| 10. | 128 | 32 | 8 | 2 | 0.5 | ......... |

## பயிற்சி - 4

கீழே வேறோர் எண்தொடர் தரப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31 | 24 | 18 | 13 | 9 | ......... |

இங்கு ஒவ்வோர் எண்ணும் ஒரே அளவால் குறையாது 7, 6, 5, 4 என்ற ஒழுங்கில் வேறுபட்ட தொகையால் குறைவதைக் காணலாம்: 31—7=24, 24—6=18.

18—5=13, 13—4=9 9—3=6. எனவே இத்தொடரில் அடுத்து வரவேண்டிய எண் 6 ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | 22 | 24 | 28 | 36 | ......... |

இங்கு தரப்பட்டுள்ள எண்தொடரில் எண்கள் 1, 2, 4, 8 என்ற ஒழுங்கில் கூடுவதைக் காணலாம். 21+1=22, 22+2=24, 24+4=28, 28+8=36, 36+16=52. ஆகவே இத்தொடரில் அடுத்து வரவேண்டிய எண் 52 ஆகும்.

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 4 | 7 | 11 | ......... |
| 2. | 10 | 12 | 16 | 22 | 30 | ......... |
| 3. | 2 | 5 | 11 | 20 | 32 | ......... |
| 4. | 60 | 50 | 42 | 36 | 32 | ......... |
| 5. | 41 | 42 | 44 | 48 | 56 | ......... |
| 6. | 36 | 20 | 12 | 8 | 6 | ......... |
| 7. | 8 | 40 | 56 | 64 | 68 | ......... |
| 8. | 2 | 3 | 5 | 9 | 17 | ......... |
| 9. | 10.5 | 7.5 | 5 | 3 | 1.5 | ......... |
| 10. | 21 | 14 | 8 | 3 | −1 | ......... |

## பயிற்சி - 5

கீழே வேறுரு வகையான எண்தொடர் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொடரிலும் அடுத்து இடம்பெற வேண்டிய இரு எண்களை எழுதவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 6 | 8 | 9 | 16 | ...... | ...... |

இங்கு இரு எண்தொடர்கள் ஒன்றாக அமைந்துள்ளன. 1ஆம், 3ஆம், 5ஆம் எண்கள் ஒருதொடராகவும், 2ஆம், 4ஆம், 6ஆம் எண்கள் வேறொரு தொடராகவும் அமைந்

துள்ளத்தைக் காணலாம். முதலாவது தொடரில் 3, 6, 9 என்ற ஒழுங்கில் எண்கள் வருவதால் அடுத்த எண் 12ஆகும். இரண்டாவது தொடரில் 4, 8, 16 என்ற ஒழுங்கில் எண்கள் வருவதால் அடுத்த எண் 32 ஆகும். ஆகவே அடுத்த இடம் பெறவேண்டிய எண்கள் முறையே 12உம், 32உம் ஆகும்.

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 5 | 6 | 7 | 9 | 9 | 12 | ......... | ......... |
| 2. | 5 | 1 | 10 | 3 | 15 | 5 | ......... | ......... |
| 3. | 2 | 4 | 3 | 9 | 4 | 16 | ......... | ......... |
| 4. | 16 | 15 | 14 | 20 | 12 | 25 | ......... | ......... |
| 5. | 4 | 6 | 6 | 8 | 8 | 10 | ......... | ......... |
| 6. | 12 | 9 | 10 | 7 | 8 | 5 | ......... | ......... |
| 7. | 13 | 14 | 12 | 15 | 11 | 16 | ......... | ......... |
| 8. | 21 | 2 | 28 | 4 | 35 | 6 | ......... | ......... |
| 9. | 80 | 12 | 72 | 24 | 64 | 36 | ......... | ......... |
| 10. | 2 | 81 | 4 | 27 | 8 | 9 | ......... | ......... |
| 11. | 0.1 | 100 | 1 | 10 | 10 | 1 | ......... | ......... |
| 12. | 30 | 11 | 22 | 13 | 16 | 15 | ......... | ......... |
| 13. | 1 | 3 | 4 | 6 | 8 | 10 | ......... | ......... |
| 14. | 2 | 5 | 6 | 10 | 18 | 20 | ......... | ......... |
| 15. | 6 | 8 | 14 | 15 | 21 | 23 | ......... | ......... |

## பயிற்சி - 6

ஐந்தாவது பயிற்சியில் இரு எண் தொடர்கள் ஒன்றாகத் தரப்பட்டன. கீழே இதேபோல மூன்று எண் தொடர்கள் ஒன்றாக வரும் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிலும் அடுத்து வரவேண்டிய மூன்று எண்களையும் கீறிட்ட இடத்தில் குறிப்பிடவும்.

உதாரணம்:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 2 | 6 | 10 | 3 | 9 | 15 |

இந்த உதாரணத்தில் 1, 2, 3 முதலாவது தொடராகவும் 3, 6, 9 இரண்டாவது தொடராகவும் 5, 10, 15 மூன்றுவது தொடராகவும் அமைந்துள்ளதைக் காண லாம். எனவே இந்த ஒழுங்கில் அடுத்து வரவேண்டிய எண்கள் 4, 12, 20 ஆகும்.

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 15 | 16 | 17 | 20 | 21 | 22 | 25 | 26 | 27 | ... ... ... |
| 2. | 5 | 6 | 7 | 10 | 12 | 14 | 15 | 18 | 21 | ... ... ... |
| 3. | 20 | 18 | 21 | 25 | 23 | 26 | 30 | 28 | 31 | ... ... ... |
| 4. | 6 | 5 | 4 | 9 | 10 | 8 | 12 | 15 | 16 | ... ... ... |
| 5. | 3 | 5 | 8 | 6 | 6 | 4 | 9 | 7 | 2 | ... ... ... |
| 6. | 15 | 10 | 5 | 16 | 8 | 6 | 17 | 6 | 7 | ... ... ... |
| 7. | 10 | 12 | 4 | 20 | 18 | 8 | 30 | 24 | 16 | ... ... ... |
| 8. | 32 | 30 | 6 | 16 | 25 | 12 | 8 | 20 | 18 | ... ... ... |
| 9. | 36 | 27 | 18 | 25 | 9 | 12 | 16 | 3 | 6 | ... ... ... |
| 10. | 10 | 15 | 16 | 20 | 25 | 26 | 30 | 35 | 36 | ... ... ... |

## பயிற்சி - 7

இங்கு தரப்பட்ட பயிற்சியில் வேறுவகையான எண்தொடர்கள் சில தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொடரிலும் அடுத்து இடம்பெற வேண்டிய எண்களைக் குறிக்கவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 10 | 5 | 15 | 5 | 20 | 5 | — | — | |
| 2. | 3 | 3 | 5 | 5 | 7 | 7 | — | — | |
| 3. | 10 | 2 | 8 | 2 | 6 | 2 | — | — | |
| 4. | 10 | 12 | 14 | 15 | 16 | 18 | 20 | — | — |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | 20 | 22 | 24 | 27 | 30 | 34 | 38 | — | — | |
| 6. | 15 | 18 | 21 | 20 | 19 | 22 | 25 | — | — | |
| 7. | 35 | 30 | 34 | 38 | 33 | 37 | 41 | — | — | |
| 8. | 17 | 18 | 9 | 10 | 5 | 6 | — | — | | |
| 9. | 15 | 14 | 7 | 6 | 3 | 2 | — | — | | |
| 10. | 4 | 8 | 7 | 14 | 13 | 26 | — | — | | |
| 11. | 5 | 10 | 11 | 22 | 23 | 46 | — | — | | |
| 12. | 2 | 4 | 8 | 10 | 20 | 22 | 44 | — | — | |
| 13. | 4 | 5 | 7 | 10 | 11 | 13 | 16 | 17 | — | — |
| 14. | 40 | 38 | 35 | 31 | 29 | 26 | 22 | — | — | |
| 15. | 9 | 10 | 12 | 15 | 19 | 15 | 12 | — | — | |

## பயிற்சி - 8

கீழே தரப்பட்ட எண் தொடர்களைக் கவனமாகப் பார்த்து, கீறிட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய சரியான எண்ணை எழுதவும்.

உதாரணம்: 40 35 30 — 20 15 10

இந்த உதாரணத்தில் ஒவ்வோர் எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணை காட்டிலும் 5 குறைவாக உள்ளது. ஆகவே கீறிட்ட இடத்தில் இடம் பெற வேண்டிய எண் 25 ஆகும். எனவே 25 ஐக் கீறிட்ட இடத்தில் எழுதவும்.

இனி பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 21 | 18 | — | 12 | 9 | 6 | 3 |
| 2. | 48 | 44 | 40 | 36 | 32 | — | 24 |
| 3. | 3 | 5 | 6 | 10 | — | 15 | 12 |
| 4. | 3 | 5 | — | 12 | 17 | 23 | 30 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | 64 | 56 | 32 | 54 | 16 | — | 8 |
| 6. | — | 4 | 6 | 9 | 13 | 18 | 24 |
| 7. | 85 | 78 | 71 | 64 | 57 | 50 | — |
| 8. | 10 | 11 | 15 | 17 | 20 | 23 | — |
| 9. | 10 | 12 | 8 | 15 | 6 | — | 4 |
| 10. | 36 | 30 | — | 21 | 18 | 16 | 15 |

## பயிற்சி - 9

கீழே இன்னோர் பயிற்சி தரப்பட்டுள்ளது. மேலே தரப்பட்டுள்ள பயிற்சியைப் போல் இப்பயிற்சியிலும் கீறிட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய சரியான எண்ணை எழுதவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 15 | 18 | — | 24 | 27 |
| 2. | 45 | 36 | 27 | — | 9 |
| 3. | 654 | 543 | 432 | 321 | — |
| 4. | 11 | — | 25 | 32 | 39 |
| 5. | — | 55 | 44 | 33 | 22 |
| 6. | 20 | 19 | 17 | — | 10 |
| 7. | 100 | 10 | 1 | 0.1 | — |
| 8. | — | 27 | 20 | 15 | 12 |
| 9. | 10 | 11 | 15 | 16 | — |
| 10. | 243 | 81 | 27 | — | 3 |

## பயிற்சி - 10

இப்பயிற்சியில் ஒவ்வொரு எண் தொடரிலும் ஓர் எண் பிழையானதாகும். அந்த எண்ணின் கீழ் கோடிட்ட பின் எண் தொடரில் பிழையான எண்ணிற்குப் பதிலாக இடம்பெறவேண்டிய சரியான எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுதவும்.

உதாரணம்: 10 20 30 36 50 (.........)

இந்த உதாரணத்தில் ஒவ்வொரு எண்ணும் 10 ஆல் கூடுகின்றது. 36 இந்த ஒழுங்கில் அமையவில்லை. இதனால் இதன் கீழ் கோடிடல் வேண்டும். இத்தொடரில் 36 க்குப் பதிலாக இடம்பெறவேண்டிய எண் 40 ஆகும். ஆகவே 40 ஐஅடைப்புக் குறிக்குள் குறித்தல் வேண்டும்.

இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 6 | 10 | 14 | 20 | (.........) |
| 2. | 15 | 20 | 25 | 31 | 35 | (.........) |
| 3. | 36 | 16 | 8 | 4 | 2 | (.........) |
| 4. | 7 | 14 | 22 | 28 | 35 | (.........) |
| 5. | 82 | 70 | 60 | 52 | 49 | (.........) |

## பயிற்சி - 11

கீழே தரப்பட்ட பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலுமுள்ள எண்களில் ஓர் எண் வேறுபட்டுள்ளது. இதன் கீழ் கோடிடவும்.

உதாரணம்: 10 15 5 6 20

இந்த உதாரணத்தில் 6 ஐத் தவிர்ந்த ஏனைய எண்கள் 5 ஆல் பிரிபடக் கூடியவை. 6 மட்டும் அவ்வாறின்றி வேறுபட்டுள்ளது. எனவே இந்த எண்ணின் கீழ் கோடிடவும்

இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 2 | 12 | 8 | 5 | 6 |
| 2. | 15 | 9 | 12 | 20 | 18 |
| 3. | 7 | 28 | 22 | 35 | 14 |
| 4. | 45 | 30 | 60 | 80 | 15 |
| 5. | 0.25 | 0.75 | 0.45 | 1.25 | 0.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 35 | 30 | 49 | 14 | 70 |
| 7. | 16 | 9 | 25 | 63 | 36 |
| 8. | 243 | 9 | 64 | 81 | 27 |
| 9. | 64 | 80 | 32 | 40 | 48 |
| 10. | 66 | 55 | 45 | 33 | 22 |

## பயிற்சி - 12

கீழேயுள்ள ஒவ்வொரு எண் தொடரையும் நன்கு கவனித்தீர்களாயின் ஒவ்வொரு தொடரிலும் ஓர் எண் மேலதிகமாக இருப்பதைக் காண்பீர்கள், அவ்வெண்ணின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: 2 4 6 8 9 10

இத்தொடர் 2, 4, 6, 10 என 2 ஆல் அதிகரித்துச் செல்கிறது. எனவே, மேலதிக மாகத் தரப்பட்டுள்ள எண் 9 ஆகும்.

இனி பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 18 | 15 | 13 | 12 | 9 | 6 | | |
| 2. | 10 | 15 | 20 | 25 | 26 | 30 | | |
| 3. | 42 | 35 | 29 | 24 | 20 | 19 | 17 | 15 |
| 4. | 2 | 4 | 8 | 12 | 16 | 32 | | |
| 5. | 3 | 6 | 12 | 18 | 24 | 30 | | |

## பயிற்சி - 13

இப்பயிற்சியில் சரியான விடையைப் பெறுவதற்கு +, —, ×, ÷ ஆகிய குறியீடு களைப் பொருத்தமான இடங்களில் எழுதவும்.

கீழேயுள்ள உதாரணத்தைக் கவனியுங்கள்.

8 3 1 = 12

இங்கு 8 + 3 + 1 என குறியீடு இட்டால் 12 ஐ விடையாகப் பெறலாம்.

இன்னுமோர் உதாரணத்தைக் கவனியுங்கள்.

7 7 1 = 50

இங்கு எழுதப்பட வேண்டிய குறியீடுகள்;

7 × 7 + 1 = 50

இனி, பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 12 | 12 | 1 | = | 25 |
| 2. | 100 | 10 | 9 | = | 1 |
| 3. | 18 | 10 | 8 | = | 16 |
| 4. | 5 | 5 | 25 | = | 50 |
| | 16 | 8 | 4 | = | 6 |

## பயிற்சி - 14

கீழே எண்கள் கிடையாகவும் குத்தாகவும் அமைந்துள்ள முறையைக் கவனித்த பின், கீறிட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய எண்ணை எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்: | 5 | 10 | 15 |
| | 15 | 20 | 25 |
| | 25 | — | — |

இந்த உதாரணத்தில் ஒவ்வொரு தொடரும் கிடையாக 5 ஆலும் குத்தாக 10 ஆலும் அதிகரிக்கின்றது. எனவே கிறிட்ட இடத்தில் இடம் பெற வேண்டிய எண்கள் 30உம், 35உம் ஆகும்.

இனி, பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 5 | 13 | 21 | (2) | 2 | 4 | 8 |
| | 8 | 16 | 24 | | 3 | 6 | 12 |
| | 11 | — | — | | 4 | — | — |
| (3) | 54 | 52 | 50 | (4) | 3 | 14 | 25 |
| | 48 | 46 | 44 | | 24 | 35 | 46 |
| | 40 | — | — | | 45 | — | — |

## பயிற்சி - 15

இப்பயிற்சியில் எண்கள் கிடையாக அமைந்துள்ள முறையைக் கவனித்த பின், வினாக் குறியிடப்பட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய பொருத்தமான எண்ணை எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்: | 3 | 3 | 9 |
| | 2 | 5 | 10 |
| | 4 | 3 | ? |

இந்த உதாரணத்தில் ஒவ்வொரு வரிசையிலும் முதல் இரு எண்களையும் பெருக்குவதால் மூன்றுவது எண் பெறப்பட்டது, $3 \times 3 = 9$. $2 \times 5 = 10$. இதேபோல் மூன்றுவது நிரையில் வரவேண்டிய எண் $4 \times 3 = 12$ ஆகும். எனவே, 12ஐ வினாக் குறியிடப்பட்ட இடத்தில் எழுதவும்.

இனி, பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

(1)

| | | |
|---|---|---|
| 15 | 13 | 28 |
| 18 | 15 | 33 |
| 12 | 17 | ? |

(2)

| | | |
|---|---|---|
| 5 | 3 | 15 |
| 4 | 5 | 20 |
| 20 | 15 | ? |

(3)

| | | |
|---|---|---|
| 4 | 2 | 2 |
| 2 | 2 | 1 |
| 2 | 1 | ? |

(4)

| | | |
|---|---|---|
| 22 | 3 | 19 |
| 21 | 15 | 6 |
| 72 | 66 | ? |

(5)

| | | |
|---|---|---|
| 17 | 4 | 34 |
| 23 | 6 | 69 |
| 8 | 9 | ? |

(6)

| | | |
|---|---|---|
| 35 | 2 | 71 |
| 16 | 4 | 65 |
| 7 | 5 | ? |

## பயிற்சி - 16

கீழே யுள்ள பயிற்சியில் ஒவ்வொரு வினவிலும் மேல் வரிசையிலும் கீழ் வரிசையிலும் அடைப்புக் குறிக்குள் காணப்படும் எண் ஒரே விதிமுறையில் பெறப்பட்டது. இவ் விதிமுறையைக் கண்டுபிடித்து ஒவ்வொரு வினவிலும் கேள்விக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்: | 12 | (20) | 8 |
| | 5 | (?) | 10 |

இங்கு தரப்பட்ட உதாரணத்தில் மேல் வரிசையில் அடைப்புக் குறிக்குள் காணப் படும் எண் வெளியேயுள்ள இரு எண்களையும் கூட்டுவதால் பெறப்பட்டது. இதே முறையில் கீழ் வரிசையில் அடைப்புக்குள் வரவேண்டிய எண் 5 + 10 = 15 ஆகும். எனவே, 15ஐ வினக்குறியிடப்பட்ட இடத்தில் எழுதவும்.

இனி, பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 21 | (43) | 22 | 2. | 63 | (9) | 7 |
| | 44 | (?) | 55 | | 84 | (?) | 12 |
| 3. | 7 | (13) | 20 | 4. | 12 | (8) | 96 |
| | 33 | (7) | ? | | 7 | (9) | ? |
| 5. | 19 | (6) | 13 | 6. | 11 | (8) | 88 |
| | 33 | (?) | 23 | | 12 | (?) | 84 |
| 7. | 32 | (10) | 20 | 8. | 31 | (120) | 29 |
| | ? | (25) | 11 | | 13 | (?) | 17 |
| 9. | 7 | (56) | 8 | 10. | 50 | (56) | 62 |
| | 12 | (?) | 6 | | 28 | (?) | 22 |

## பயிற்சி - 17

இப் பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் 3 எண்களைக் கொண்ட மூன்று எண்ணுருக் கோவைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வோர் எண்ணுருக்கோவையிலும் அடைப்புக் குறிக்கு வெளியேயுள்ள எண் அடைப்புக் குறிக்குள் காணப்படும் இரு எண்களுக் குப் பயன்படுத்திய அதே விதிப்படி பெறப்பட்டது. இதனைக் கவனித்து வினாக் குறியிடப்பட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய எண்ணை எழுதவும்.

1. ( 7, 7 ) 49 ( 9, 2 ) 18 ( 8, 5 ) ?
2. ( 7, 6 ) 20 ( 10, 7 ) 34 ( 10, 5 ) ?
3. ( 5, 2 ) 49 ( 2, 8 ) 100 ( 3, 6 ) ?
4. ( 64, 16 ) 4 ( 54, 9 ) 6 ( 75, 15 ) ?
5. ( 45, 15 ) 30 ( 17, 5 ) 11 ( 13, 17 ) ?

## பயிற்சி - 18

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு தொடரிலும் ஆங்கில எழுத்துக்கள் ஓர் ஒழுங்கு முறையில் தரப்பட்டுள்ளன. இந்த ஒழுங்கு முறையைக் கவனித்து ஒவ்வொரு நிரையிலும் அடுத்து வரவேண்டிய ஆங்கில எழுத்தைக் குறிக்கவும். விடையளிப்பதற்கு உதவியாக ஆங்கில எழுத்து வரிசை கீழே தரப்பட்டுள்ளது.

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z

| | | விடைகள் |
|---|---|---|
| 1. | A B C D E. | ............... |
| 2. | Z Y X W V. | ............... |
| 3. | A C E G I. | ............... |
| 4. | Z X V T R P. | ............... |
| 5. | C B A Z Y X. | ............... |
| 6. | A B D G K. | ............... |
| 7. | CC DD EE. | ............... |
| 8. | BC CD DE EF | ............... |
| 9. | AZ BZ CZ. | ............... |
| 10. | AB DE GH. | ............... |
| 11. | ZXZ ZYZ ZZ. | ............... |
| 12. | AXAY BXBY CXCY. | ............... |
| 13. | ZYZ ABC XYZ DEF. | ............... |
| 14. | AY ABY ABCY. | ............... |
| 15. | HIJ GHIJ FGHIJ. | ............... |

# 2, சொற்புலமை

## 1. பொருந்தாச் சொற்கள்

### பயிற்சி - 1

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களில் ஒரு சொல் மற்றச் சொற்களிலிருந்து வேறுபட்டுள்ளது. இச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1) ஆடு, மாடு, கோழி, நாய், பூனை

(2) அமலன், கண்ணன், இராமன், சுமதி, விமலன்

முதலாவது உதாரணத்தில் ஆடு, மாடு, நாய், பூனை என்பன மிருக இனத்தவை. கோழி இவற்றிலிருந்து வேறுபட்டுப் பறவையினத்தைச் சார்ந்திருப்பதால், இதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் அமலன், கண்ணன், இராமன், விமலன் என்பவை ஆண்களின் பெயர்களாகும். சுமதி என்னும் பெயர் இவற்றிலிருந்து வேறுபட்டு, பெண்களுக்குரிய பெயராக இருப்பதால் இதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

1. கல், மணல், ஓடு, மண்வெட்டி, சீமெந்து
2 கோதுமை, நெல், பார்லி, மரவள்ளி, சோளம்
3. ஓடு, ஆடு, நட, இரு, துள்ளு
4. காடு, மலை, ஆறு, நீர்வீழ்ச்சி, கிணறு,
5. பழம், காய்கறி, தானியம், இறைச்சி, கிழங்கு
6. சொல், பேசு, பாடு, ஆடு, கதை ,
7. மேசை, கதிரை, கதவு, கட்டில், தொட்டில்.

8. இந்தியா, ஜப்பான், இலங்கை, இலண்டன், ஜெர்மனி

9. குருகுரு, திருதிரு, திகதி, மதுமது, கமகம

10. கண்டி, காலி, யாழ்ப்பாணம், டில்லி, நுவரெலியா

## பயிற்சி - 2

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் தரப்பட்டுள்ள ஆறு சொற்களில் இரு சொற்கள் வேறுபட்டுள்ளன. அவற்றின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1) ஆடு, மாடு, கிளி, குதிரை, குயில், நாய்

(2) கால், சப்பாத்து, கழுத்து, தொப்பி, தலை, கை

இனி கீழ்வரும் பயிற்சிகளைச் செய்யவும்

1. மேசை, புத்தகம், கதிரை, கட்டில், பேனை, தொட்டில்

2. மரம், வாள், மண், மண்வெட்டி, செங்கட்டி, கல்

3. மணம், கண், காட்சி, காது, சுவை, கேள்வி

4. அம்மா, மாமா, அப்பா, தம்பி, அக்கா, அண்ணா

5. கலன், இறுத்தல், நிறை, நிமிடம், நீளம், அங்குலம்

6. மிருகம், மீன், மனிதன், மரம், செடி, பறவை

7. 35, 42, 45, 54, 55, 65

8. கடல், ஏரி, மலை, மேட்டு நிலம், ஆறு, குளம்

9. காகம், நாகம், மாகன், தாகம், வாகன், பாகம்

10. கமலன், விமலன், கமலா, அமலன், விமலா, ராகுலன்

## 2. பொருத்தம் காணல்

### பயிற்சி - 1

*கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் முதலிரு சொற்களுக்கிடையிலுள்ள பொருத்தத்தைக் கவனித்து, மூன்றாவது சொல்லிற்குப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதவும்.*

உதாரணம்: (1) *தகப்பனுக்கு மகன் போல தாய்க்கு மகள்*

(2) *இருளுக்கு வெளிச்சம் போல உயர்வுக்கு தாழ்வு*

*மேலே முதலாவது உதாரணத்தில் தகப்பன் என்னும் சொல்லுக்கும், மகன் என்னும் சொல்லுக்கும் இடையிலிருக்கும் பொருத்தத்தைக் கவனிக்கவும். இதே போன்று தாய் என்னும் சொல்லுக்குப் பொருத்தமான சொல் மகள் ஆகும். இதனால் இச்சொல் கோடிட்ட இடத்தில் எழுதப்பட்டுள்ளது. இதேபோல், இரண்டாவது உதாரணத்துக்குச் சரியான விடை தாழ்வு ஆகும்.*

*இப்பொழுது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.*

1. நாட்டிற்கு மாகாணம் போல புத்தகத்திற்கு ..........
2. மிளகாய்க்கு உறைப்புப் போல கரும்பிற்கு ..........
3. ஒன்றுக்குப் பத்துப் போல பத்திற்கு ..........
4. மாட்டிற்கு மிருகம் போல காகத்திற்கு ..........
5. அங்குலத்திற்கு நீளம் போல நிமிடத்திற்கு ..........
6. கரும்பலகைக்கு பலகை போல வெண்கட்டிக்கு ..........
7. படிப்பித்தலுக்கு ஆசிரியர் போல நடித்தலுக்கு ..........
8. நட்புக்கு பகை போல செல்வத்திற்கு ..........
9. கதிரைக்கு இருத்தல் போல ஏணிக்கு ..........
10. வாளுக்கு இரும்பு போல மேசைக்கு ..........

## பயிற்சி - 2

இங்கு தரப்பட்ட பயிற்சியில் கீறிட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து கோடிடவும்.

உதாரணம்: வெற்றிக்கு மகிழ்ச்சி போல தோல்விக்கு ............
(களைப்பு, பழிவாங்கல், தற்கொலை, கவலை)

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. கத்திக்கு வெட்டுதல் போல பேனைக்கு ............
(மை, எழுதுதல், படம், கடதாசி)

2. மோட்டார் வண்டிக்கு பெற்றோல் போல மனிதனுக்கு ............
(பசி, உணவு, வயிறு, காய்கறி)

3. கோடை வெப்பத்திற்குப் போல மாரி ............
(மழைக்கு, குளிருக்கு, பனிக்கு, வெள்ளத்திற்கு)

4. கோழி முட்டைக்குப் போல பசு ............
(புல்லிற்கு, பாலிற்கு, தோலிற்கு, எருவிற்கு)

5. பின்வாங்கலுக்கு தோல்விபோல முன்னேறுதலுக்கு ............
(தாக்கம், சீரழிவு, வெற்றி, மகிழ்ச்சி)

## பயிற்சி - 3

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலுமுள்ள முதலிரு சொற்களும் ஏதோ வகையில் பொருத்தமுடையன. இதேபோல மூன்றாவது சொல்லிற்குப் பொருத்தமுடைய ஒருசொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடவும்.

உதாரணம்: கண் : பார்வை : : மூக்கு :
(சுவாசித்தல், தும்முதல், நுகர்தல், நறுமணம்)

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. தோல் : சப்பாத்து : : துணி :
(நூல், புடவை, பருத்தி, காற்சட்டை)

2. வரதன் : பையன் : : நிமலா :
(பெண், சிநேகிதி, சிறுமி, மாணவி)

3. குயில் : கூவுதல் : : நாய் :
(வீட்டைக் காத்தல், கடித்தல், குரைத்தல், மோப்பம் பிடித்தல்)

4. பிராணி : பூனை : : தாவரம் :
(செடி, கொடி, கத்தரி, கிழங்கு வகை)

5. 8 : 7 : : திங்கள் :
(செவ்வாய், புதன், ஞாயிறு, கிழமை)

6. பால் : திரவம் : : இரும்பு :
(உலோகம், திண்மம், இயந்திரம், பொருள்)

7. நண்பன் : சிநேகிதன் : : வீடு :
(இல்லம், கட்டிடம், கோபுரம், பகைவன்)

8. நண்பன் : பகைவன் : : பெரிய :
(உயரமான, மெல்லிய, சிறிய, குறுகிய)

9. நிமிடம் : நேரம் : : இறுத்தல் :
(அவுன்ஸ், நிறை, தராசு, நிறுத்தல்)

10. OXO : XOX : : ABA :
(BAB, AOA, BXB, AOB)

## பயிற்சி - 4

இங்கு தரப்பட்டுள்ள பயிற்சிகளில் ஒவ்வொரு வினாவிலுமுள்ள முதலிரு சொற்களும் ஏதோ வகையில் பொருத்தமுடையன. இதே போன்ற பொருத்தமுடைய இரு சொற்களை அடைப்புக் குறிக்குள் கோடிடவும்.

உதாரணம்: படம்: பார் (கூட்டம், பேச்சு, கேள், கண், காண்)
தாய்: குழந்தை (பசு, எருது, கன்று, மாடு, காளை)

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. அடி : அங்குலம் (யார், புத்தகம், இருத்தல், அத்தியாயம், அவுன்ஸ்)
2. பால் : போத்தல் (கலன், வயல், நெல், விளைச்சல், புசல்)
3. கீழ் : மேல் (நன்மை, குறை, தீமை, பிழை, சிறப்பு)
4. மூன்று : ஒன்று (முப்பது, எட்டு, ஒன்பது, நான்கு, பத்து)
5. மரம் : மேசை (நெருப்பு, களிமண், பானை, சூளை, பாத்திரம்)

## பயிற்சி - 5

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் 4 சொற்கள் உள்ளன. 1 ஆம் 2 ஆம் சொற்கள் எவ்வகையில் தொடர்புடையனவோ அவ்வாறே 3 ஆம் 4 ஆம் சொற்கள் இருக்கும்படியாக அமையும் சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தை நிரப்பவும்:

உதாரணம் மேகம் ............ : : நெல் : பச்சை

(1) மழை (2) நீலம் (3) ஆகாயம் (4) சந்திரன் (5) நிறம்

விடை : நீலம்.

இப்போது கீழேயுள்ள பயிற்சியைச் செய்யவும்.

1. தந்தம்: ............ : : முத்து : சிப்பி
(1) ஆபரணம் (2) காடு (3) யானை (4) மிருகம் (5) சுரங்கம்

2. மரம் : கதிரை : : .............. : ஆணி

(1) இரும்பு (2) தளபாடம் (3) சுத்தியல் (4) பலகை (5) அறைதல்

3. ........... : பறவை : : நாய் : மிருகம்
(1) விலங்கு (2) உயிர் வாழ்வன (3) காகம் (4) மாடு (5) பறத்தல்

4. நிலம் : கண்டம் : : ........... சமுத்திரம்
(1) கடல் (2) தீவு (3) நீர் (4) கப்பல் (5) நாடு

5. ........... : நேரம் : : தராசு : கடிகாரம்
(1) நிறை (2) இருத்தல் (3) நிமிடம் (4) நீளம் (5) பாரம்

6. காது : தோடு : : ........... : மோதிரம்
(1) தங்கம் (2) நகை (3) விரல் (4) வைரம் (5) கை

7. சிறை : ............... : : அரண்மனை : அரசன்
(1) கள்வன் (2) காவலாளி (3) மந்திரி (4) சிறைச்சாலை (5) குற்றவாளி

8. ............... : உயர்ந்த : : அகன்ற : ஒடுங்கிய
(1) நெடிய (2) பருத்த (3) கட்டையான (4) கொழுத்த (5) மெலிந்த

9. 8542 : 4528 : : பரகதி ...............
(1) திகபர (2) கரதிப (3) கரபதி (4) திபகர (5) பகரதி

10. உண் ............... : : அணி : உடை
(1) ஆபரணம் (2) சோறு (3) உணவு (4) நீர் (5) சமைத்தல்

## பயிற்சி - 6

கீழேயுள்ள பயிற்சியில் கேள்விக் குறியிடப்பட்ட இடத்தில் இடம் பெறவேண்டிய பொருத்தமான சொல்லை எழுதவும்.

உதாரணம் : மறதி = மதிற விடையாயின்

சகதி = ? (சதிக)

1. விடுதி = திவிடு ஆயின்

துறவி = ?

2. 3542 = 4532 ஆயின்

6352 = ?

| | | | |
|---|---|---|---|
| 3. | விலங்கு | = | குவிலங் ஆயின் |
| | பரகதி | = | ? |
| 4. | விலங்கு | = | குலவி ஆயின் |
| | இடங்கு | = | ? |
| 5. | கிழக்கு | = | கீழ் ஆயின் |
| | பரப்பு | = | ? |
| 6. | 432 | = | சகநி ஆயின் |
| | திகதி | = | ? |
| 7. | 2364 | = | ரங்கன் ஆயின் |
| | கரன் | = | ? |
| 8. | Z2Z | = | 2Z2 ஆயின் |
| | 3X3 | = | ? |
| 9. | 5233 | = | SELL ஆயின் |
| | LESS | = | ? |
| 10. | 878 | = | 787 |
| | 989 | = | ? |

# 3. சொற்களை ஒழுங்குபடுத்தல்

சொற்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்துவதுடன் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. பொதுவாகப் பொருட்களை எண்ணிக்கை, நிறை, பருமன், அகர வரிசை போன்ற பல அடிப்படைகளில் ஒழுங்கு படுத்தலாம்.

## பயிற்சி 1

இப்பயிற்சியில் பொருத்தமான ஒரு முறையில் சொற்களை ஒழுங்குபடுத்தும்போது நடுவில் வரும் சொல்லைக் கீறிட்டுக் காட்டவும்.

உதாரணம்: பூனை, <u>மாடு</u>, யானை, நாய், குதிரை

இந்த உதாரணத்தில் ஐந்து சொற்கள் உள்ளன. இவற்றைப் பருமனின் அடிப் படையில் ஏறு வரிசையில் அல்லது இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்தினல் நடுவில் வரும் சொல் மாடு ஆகும். இதனுல் மாடு என்னும் சொல்லின் கீழ் கோடிடப்பட்டுள்ளது. இப்போது பின் வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

1. வாலிபன், கைக்குழந்தை, கிழவன், பையன், குழந்தை
2. இருத்தல், தொன், அவுன்ஸ், அந்தர், குவாட்டர்
3. மாலை, அதிகாலை, இரவு, மத்தியானம், காலை
4. மோட்டார் வண்டி, பஸ், மோட்டார் சைக்கிள், புகையிரதம், சைக்கிள்
5. கார்த்திகை, ஆனி, வைகாசி, ஆடி, மார்கழி
6. மாதம், கிழமை, வருடம், நாள், மணித்தியாலம்
7. நூல், துணி, பருத்தி, உடை, பஞ்சு
8. ஏழு, நான்கு, ஒன்பது, ஆறு, ஐந்து
9. இடி, அடி, ஒடி, ஆடி, ஓடி
10. BAT, MAT, CAT, RAT, HAT

## 4. ஒத்த பொருளுடைய சொற்கள்

### பயிற்சி - 1

கீழே தரப்பட்டுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் முதலிலுள்ள சொல் அதே நிரையிலுள்ள ஒரு சொல்லுடன் பெரிதும் ஒத்துள்ளது. அச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1) மகிழ்ச்சி : உற்சாகம், திருப்தி, <u>சந்தோஷம்</u>, வெற்றி

(2) நிலையான : வழமையான, தற்காலிகமான, <u>நிரந்தரமான</u> தொடர்ச்சியான

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. சிறந்த : தெளிவான, திருப்தியான, நல்ல, சுத்தமான
2. அடிக்கடி : இடையிடை, தொடர்பில்லாத, எப்போதும், அருமையாக
3. மெலிந்த : பலவீனமான, களைத்த, நலிந்த, சிறிய
4. அதிகரித்தல் : பரவுதல், முன்னேற்றம், கூடுதல், விரிவு
5. அதிகம் : எல்லாம், பலவகைப்பட்ட, வேறுபட்ட, பல

## பயிற்சி - 2

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களில் இரு சொற்கள் ஒத்த கருத்துடையவை. அவற்றின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1) வலிமை, திறமை, வீரம், ஆற்றல், உறுதி

(2) கவலை, அவமானம், துக்கம், கஷ்டம், அனுதாபம்

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. நெடிய, சிறிய, கொழுத்த, நீண்ட, மெல்லிய
2. எல்லாம், முழுவதும், பெரிய, அதிகம், உயர்வான
3. துணிவு, வெற்றி, யுத்தம், பலம், போர்
4. சிறிய, மிகச்சிறிய, பெரிய, உயர்ந்த, நுண்ணிய
5. மறுத்தல், இணங்குதல், விடுதல், சம்மதித்தல், கட்டுப்படுத்தல்

## பயிற்சி - 3

கீழே யுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் முதலாவது சொல்லை அடுத்து 1 முதல் 4 வரை எண்ணிடப்பட்ட சொற்கள் உள்ளன. இவற்றிலிருந்து முதலாவது சொல்லிற்கு ஒத்த அல்லது கிட்டத்தட்ட ஒத்த ஒரு சொல்லைத் தெரிவு செய்து அச்சொல்லின் எண்ணைக் குறிக்கவும்.

உதாரணம்: சென்ருன் : (1) ஓடினுன் (2) நடந்தான் (3) போனுன் (4) வந்தான்

விடை ; 3

1. அறிவுரை (1) கட்டளை (2) உத்தரவு (3) புத்திமதி (4) ஆலோசனை
2. கதைத்தல் (1) பேசுதல் (2) கூப்பிடல் (3) சத்தமிடல் (4) கூச்சலிடல்
3. சீரான (1) நல்ல (2) மேன்மையான (3) ஒழுங்கான (4) நேரான
4. கவனமான (1) ஊக்கமான (2) உசாரான (3)அவதானமான (4) பாதுகாப்பான
5. உறவினர் (1) உடன் பிறந்தோர் (2) சுற்றத்தார் (3) விருந்தினர் (4) நண்பர்

# 5 எதிர்ப் பொருளுடைய சொற்கள்

## பயிற்சி - 1

கீழே யுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் முதலிலுள்ள சொல்லிற்கு எதிரான பொருளுடைய ஒரு சொல் அதே நிரையிலுள்ள ஏனைய சொற்களுள் இருக்கின்றது. அச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம் : (1) தூரம் : இடைவெளி, <u>அண்மை</u>, நெருங்கிய, பக்கத்தில்

(2) வெறுப்பு : ஒற்றுமை, நட்பு, அன்பு, <u>விருப்பு</u>

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. பெரிய : தாழ்வான, இளைய, சிறிய, குறைவான

2. மெலிந்த : தைரியமான, நோயற்ற, பாரிய, கொழுத்த

3. மாறுபடுகின்ற : சீரான, ஒழுங்கான, வேறுபாடில்லாத, நிலையான

4. மேலான : தாழ்ந்த, கீழான, சிறிய, குறைவான

5. பிழையான : பொருத்தமான, சிறப்பான, சரியான, தவறான

## பயிற்சி - 2

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களுள் இரு சொற்கள் எதிரான பொருளுடையவை. அவற்றின்கீழ் கோடிடவும்.

உதாரணம் : (1) விவேகம், உற்சாகம் வலிமை, சோம்பல், திறமை

(2) உயர்வு, பெரிய, தாழ்வு, கீழ், அற்ப

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. நட்பு, உறவு, துணை, எதிரி, பகை

2. அபாயமான, தைரியமான, துணிகரமான, பாதுகாப்பான, துணையான

3. கட்டுப்படுத்தல், நிறுத்துதல், மறைத்தல், மறுத்தல், சம்மதித்தல்

4. பஞ்சம், கஷ்டம், செழிப்பு, நட்டம், மகிழ்ச்சி

5. மேல், உயர்வு, உச்சி, கீழ், சிறிய

## பயிற்சி - 3

கீழேயுள்ள பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் முதலாவது சொல்லுடன் ஒத்த அல்லது எதிரான பொருளுள்ள ஒரு சொல் இருப்பதைக் காணலாம். இச்சொல்லைக் கண்டு பிடித்து அதன் கீழ் கோடிடவும்.

உதாரணம் : துணிவு : நம்பிக்கை, பயம், பலம், முயற்சி

இப்போது கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1. ஒழுங்கான : நேரிய, பரந்த, மேன்மையான, நிரையான
2. ஆடம்பரமான : புதிய, எளிய, அழகான, தூய்மையான
3. அதிகரித்தல் : வேறுபடல், உயர்தல், குறைந்து செல்லல், பிரிதல்
4. ஒரேமாதிரியான : ஒருங்கான, ஒத்த, இணைந்த, பிரிக்க முடியாத
5 தொடர்ச்சியான : படிப்படியான, திரும்பத் திரும்ப, இடையிடையே மாறுபடாத

## 6, குறியீடுகள்

### பயிற்சி - 1

விலைகளை வாடிக்கையாளர் அறிந்து கொள்ளாது இருக்கத்தக்க வகையில் குறிக்க விரும்பிய ஒரு வியாபாரி 0 இல் இருந்து 9 வரையுள்ள இலக்கங்களுக்கு, 'ஜெகதலப் பிரதாபன்' என்னும் பெயரிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தினான். இம்முறையில் இரகசிய எழுத்துக்களில் தரப்பட்ட விலைகளை இலக்கங்களிலும், இலக்கங்களில் தரப்பட்ட விலைகளை இரகசிய எழுத்துக்களிலும் மாற்றி எழுதவும்.

உதாரணம் (1) பித. தபி 52 . 25

(2) 10 . 00 கஜெ . ஜெஜெ

1. பர . தன் ............ 2. பிக . லபி ..........
3. ரல . ன்ஜெ ............ 4. 12 . 75 ..........
5. 450 . 36 ............

## பயிற்சி - 2

ஒரு வியாபார நிலையத்தில் 18 ரூபா 90 சதம், 34 ரூபா 25 சதம், 76.00 ரூபா ஆகிய விலைகள் முறையே யப.ரவ, மக.டல, றச.வவ என்ற குறியீடுகளால் உணர்த்தப்பட்டிருந்தால் பின்வரும் விலைகள் எவ்வாறு குறிக்கப்பட்டிருக்குமென எழுதவும்.

(1) 74.25 ............ (2) 28.00 ............ (3) 56.45 ............

(4) 9.30 ............ (5) 18.05 ............

மேலே உபயோகிக்கப்பட்ட குறியீட்டு முறையில் பின்வரும் எழுத்துக்கள் என்ன விலையைக் குறிப்பனவாக அமையுமெனக் குறிப்பிடவும்.

(6) றப. மல ............ (7) தக. லய ............ (8) ரவ. பற......

(9) சம. யல ............ (10) டட. பவ ............

## பயிற்சி - 3

கீழே ஒவ்வொரு வினவிலும் தரப்பட்டுள்ள சொல்லிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீட்டு முறையைக் கண்டறிந்த பின் கேட்கப்பட்டிருக்கும் சொல்லிற்குரிய குறியீட்டுச் சொல்லை எழுதவும்.

உதாரணம்: (1) **BAD** என்பது **CBE** ஆயின் **CAB** என்பது ............ஆகும்.

இந்த உதாரணத்தில் **BAD** என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களைக் கவனிக்கவும். அகர வரிசையில் இந்த எழுத்துக்களுக்கு அடுத்ததாக வரும் எழுத்துக்களால்—குறியீட்டுச் சொல் ஆக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதே முறையில் **CAB** என்ற சொல்லிற்குரிய குறியீட்டுச் சொல் **DBC** ஆகும். இதனைக் கோடிட்ட இடத்தில் எழுதவும்.

உதாரணம்: (2) **RAT** என்பது **TAR** ஆயின் **SAW** என்பது............ஆகும்.

இந்த உதாரணத்தில் **RAT** என்ற சொல்லிலுள்ள அதே எழுத்துக்களே வேறு ஒழுங்கில் வந்துள்ளன. எனவே, இதே முறையில் **SAW** என்ற சொல்லுக்குரிய குறியீட்டுச் சொல் **WAS** ஆகும்.

இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

1. **ACE** என்பது **BDF** ஆயின் **AGE** என்பது ................ ஆகும்.
2. **BED** என்பது **ADC** ஆயின் **CEL** என்பது ................ ஆகும்.
3. 753 என்பது 654 ஆயின் 864 என்பது ................ ஆகும்.
4. **DAY** என்பது **CBX** ஆயின் **CAR** என்பது ................ ஆகும்.
5. **DAM** என்பது **EBN** ஆயின் **MET** என்பது ................ ஆகும்.
6. **BAT** என்பது **TAB** ஆயின் **NET** என்பது ................ ஆகும்.
7. **TOO** என்பது **OOT** ஆயின் **ILL** என்பது ................ ஆகும்.
8. **TEA** என்பது **EAT** ஆயின் **DOG** என்பது ................ ஆகும்.
9. **TON** என்பது **OTN** ஆயின் **GAP** என்பது ................ ஆகும்.
10. **BAC** என்பது 213 ஆயின் **DBA** என்பது ................ ஆகும்.

# 3. மொழிப்புலமை

## பயிற்சி - 1

பின்வரும் உரைப் பகுதியை வாசிக்கவும்.

தீவின் தென்மேற்குக் கரையோரப் பகுதியில் மீனவர் வசிக்கும் கிராமம் ஒன்றிற்கு அருகில் இளம் வீரன் ஒருவன் கையில் ஈட்டியுடன் காவல் புரிந்து கொண்டிருந்தான். கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் அவன் மிக்க விழிப்பாக இருந்தான். கொடிய பிராணிகள் அங்கு நடமாடுவதும் அவனுக்குத் தெரிந்திருந்தது. அப்போது ''சர சர'' என்ற சப்தம் எங்கிருந்தோ கேட்பதை அவன் உணர்ந்தான். சப்தம் அண்மித்து வந்ததும் இரு உருவங்கள் தெரிந்தன. உடனே, ''நில், யார் அங்கே'' என உரக்கக் கத்தினன். ஆனல், அது தன் படைத் தளபதியும் அவன் நண்பனும் என்பதை அறிந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டான். ''எங்கே மற்றக் காவல் வீரர்கள்'' என்று கேட்டதற்கு அவன், அவர்கள் இருந்த இடத்தை நோக்

கிக் குழலை ஊதினான். உடனே புதர்களுக்குப் பின்னாலிருந்து பாய்ந்து வந்து வரிசையில் நின்றனர். படைத் தளபதி இதனைப் பாராட்டி, எந்நேரமும் எதிரிகள் வரக் கூடும் என்று சொல்லிவிட்டுச் சென்றான். சிறிது நேரத்தில் பொழுது புலர்ந்ததும் படை வீரர்கள் எல்லோரும் விழித்து எழுந்து தத்தம் கடமைகளைச் செய்யத் தொடங்கினர். நண்பகலானபோது படைத்தளபதி அப் பாசறையிலிருந்து புறப் பட்டுத் தெற்கே மலையடிவாரத்தில் புதிய பாசறை ஒன்று அமைக்க வேண்டும் என் பதைக் கூறினான்.

இப்போது ஒவ்வொரு வினாவிற்கும் கீழே தரப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்த மான விடையின் கீழ் கோடிடவும்.

1. இந்த உரைப் பகுதி கூறும் கதை எதைப் பற்றியது?

   (1) மீனவர்களை (2) ஒரு பயணத்தை (3) யுத்தத்தை

   (4) காவற்படையினரை (5) எதிரிகளை

2. படைத் தளபதி இளைஞனைப் பாராட்டியது ஏன்?

   (1) அவனின் துணிச்சலுக்காக (2) நித்திரையின்றி இருந்ததற்காக

   (3) விழிப்பாகக் காவல் புரிந்ததற்காக (4) ''நில் யார் அங்கே'' எனக் கத்தியதற்காக.

3. அவன் விழிப்புடன் இருந்ததற்குக் காரணம் என்ன?

   (1) கடும் குளிராக இருந்தமையால் (2) நித்திரை செய்தால் படைத் தளபதி தண்டிக்கக் கூடுமாதலால் (3) எதிரிகள் வரக் கூடுமென் பதற்காக (4) கொடிய பிராணிகள் வரக்கூடும் என்றதால் (5) பொழுது புலரப் போகிறது என்பதால்.

4. ''சர சர'' என்ற சத்தம் ஏன் கேட்டது?

   (1) தளபதியும் அவன் நண்பனும் வந்ததால் (2) கொடிய பிராணிகள் நடமாடியதால் (3) காற்று வீசியதால் (4) இலைகள் ஆடியதால்.

5. அவன் மிகவும் விழிப்புடன் காவல் புரிந்தான் என்பதைப் பின்வரும் எச் செயலில் இருந்து அறியலாம்?

(1) குழலை ஊதியதிலிருந்து (2) ''சர சர'' என்ற சத்தம் கேட்டதை உணர்ந்து கொண்டதிலிருந்து (3) ''நில் யார் அங்கே'' என்று கத்தியதிலிருந்து (4) கையில் ஈட்டியுடன் நின்றதிலிருந்து.

6. படைத் தளபதி காவல் வீரனைச் சந்தித்த நேரம்.

(1) மாலை (2) நண்பகல் (3) அதிகாலை (4) நள்ளிரவு.

7. அவன் காவல் புரிந்தது.

(1) படை வீரர் தங்குமிடத்தை (2) கிராமத்தை (3) எதிரிகளை (4) மீனவர்களை.

8. பாசறை என்பது.

(1) மீனவரின் குடிசை (2) மலைப்பாங்கான பகுதி (3) எதிரிகள் வரும் இடம் (4) படை வீரர்கள் தற்காலிகமாகத் தங்கும் இடம்.

9. படை வீரர்கள் தங்கிய இடம்.

(1) பாறைகளைக் கொண்ட மலைச்சாரல் (2) பற்றைக் காடுகளைக் கொண்ட தீவின் தென்பகுதி (3) மணற்பாங்கான கடற்கரைப் பகுதி (4) கரையோரத்தை அடுத்த காட்டுப் பகுதி.

10. ''அண்மித்து வந்தது'' என்பது.

(1) முன்னுக்கு வந்தது (2) அருகில் வந்தது (3) பின்புறமாக வந்தது (4) விரைவில் வந்தது.

11. அவன் காவல் புரிந்த பகுதி ஒரு சன நடமாட்டமில்லாத பகுதி என்பதைப் பின்வரும் கூற்றுக்களில் எது நிலை நாட்டவில்லை?

(1) மீனவர் கிராமத்திற்கு அருகில் காவல் புரிந்தான் என்பதிலிருந்து (2) புதர்களுக்குப் பின்னாலிருந்து வீரர் வந்ததிலிருந்து (3) கொடிய பிராணிகள் நடமாடுவதிலிருந்து (4) ''சர சர'' என்ற சத்தம் கேட்டதில் இருந்து.

12. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான் என்பதன் கருத்து.

(1) தன்னை மறைத்துக்கொள்வது (2) தன்னை அவன் காட்டிக்கொள்ள விரும்பாதது (3) வெட்கப்படுவது (4) தவறுதலாக விளங்கியதை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொள்வது.

## பயிற்சி - 2

பின்வரும் சரித்திரத்தை கருத்துடையதாக்குவதற்கு வேண்டிய சரியான சொல்லை ஒவ்வோர் அடைப்பிற்குள்ளும் கீறிட்டுக் காட்டவும்.

தம்பிமுத்து என்னும் (தொண்டர்/புலவர்/ஊழியர்) (மானிப்பாயிலே/சென்னையிலே/சுன்னுகத்திலே) பிறந்தார். இவர் (பாலனுக/இளைஞனுக/அனுதையாக) இருந்தபோது, இவரின் (குரு/சுற்றத்தார்/தந்தையார்) இறந்துபோனதால் மானிப்பாய்க்குச் சென்று சிறிய தந்தையாருடன் வாழ்ந்து (வியாபாரம் செய்தார்/உயர் கல்வி பெற்ருர்/சமூக சேவை செய்தார்.) இதனுல் இவர் இலங்கையின் நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் பதவிபெற முடிந்தது. (இதனுல்/திரும்பவும்/ஆனுல்) (தமிழுக்கு/சமயத்திற்கு/சமூகத்திற்கு) தொண்டாற்ற விரும்பி இந்தியாவிற்குச் சென்று சில காலம் இருந்து பாடல்கள் பலவற்றை இயற்றினுர்.

(கற்பனை)

# ஆய்ந்தறிதற் புலமை

## பயிற்சி - 1

1. அமலனிடம் பந்தும் கொப்பியும் பேனுவும் இருந்தன. விமலனிடம் புத்தகமும் கொப்பியும் பென்சிலும் இருந்தன. கமலனிடம் பேனுவும் புத்தகமும் கொப்பியும் இருந்தன. மூவரிடம் இருந்த பொதுவான பொருள் என்ன?

...........

A, C, D, F, H என்னும் ஐவர் ஒழுங்கு வரிசையில் நிற்கின்றனர். Fக்கு முன் புறத்தில் H நிற்கிருன். C க்குப் பின் புறத்தில் A நிற்கிருன். F க்கும் A க்கும் இடையில் இருவர் உள்ளனர். ஒழுங்கு வரிசையில் முதலில் நின்றது C ஆகும்.

2. ஒழுங்கு வரிசையில் இறுதியில் நிற்பது யார்? ...........

3. ஒழுங்கு வரிசையில் நடுவில் நிற்பது யார்? ...........

4. ஒரு குடும்பத்தில் A, B, C என்னும் மூன்று பெண் பிள்ளைகளும் F, D, என்னும் இரு ஆண் பிள்ளைகளும் உள்ளனர். A, C, D படிப்பில் திறமையுடையவர்கள். F, C, D அழகுடையவர்கள். படிப்பிலும், அழகிலும் சிறந்து விளங்கும் ஆண்பிள்ளை யார்?

............

5. சரியான நேரத்திலும் 10 நிமிடங்கள் முந்திக் காட்டுகின்ற எனது கடிகாரம் 10 மணி 55 நிமிடங்கள் காட்டியபோது புகையிரதம் வந்தது. இப்புகையிரதம் வழமையாக வரும் நேரத்திலும் 5 நிமிடங்கள் பிந்தி வந்திருந்தால் புகையிரதம் வழமையாக வரும் நேரம் என்ன?

............

6. பரதன் 50 யார் தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் குகன் 80 யார் ஓடுவான். குகன் 40 யார் ஓடும் நேரத்தில் விஜயன் 30 யார் ஓடுவான். இவர்களில் மிக மெதுவாக ஓடுபவன் யார்?

............

7. காஞ்சனு சுமதியிலும் 10 ரூபா குறைவாகவும், துளசி கௌரியிலும் 25 ரூபா கூடுதலாகவும் வைத்திருந்தனர். கௌரி காஞ்சனுவிலும் 10 ரூபா குறைவாக வைத்திருந்தாள். நால்வருள்ளும் மிகக் கூடுதலான பணம் வைத்திருந்தது யார்?

............

8. கணிதத்தில் தவராசா 80 க்கும் 50 க்கும் இடையில் புள்ளிகள் பெற்றுன். சிவராசா தவராசாவிலும் அதிக புள்ளிகள் பெற்றுலும் 60 க்குக் குறைவாகவே பெற்றுன். தேவராசா சிவராசாவிலும் அதிக புள்ளிகள் பெற்றுலும் 75 க்குக் குறைவாகவே பெற்றுன். மூவரில் மிகக் குறைவான புள்ளிகள் பெற்றது யார்?

............

கோவில், பாலத்திற்கு 50 யார் வடக்கில் உள்ளது. குளம், கோவிலுக்கு 100 யார் கிழக்கில் உள்ளது. பாடசாலை, குளத்திற்கு 50 யார் தெற்கில் உள்ளது. இவ்வாறுயின்,

9. பாலம், பாடசாலைக்கு எத்திசையில் உள்ளது? ............

10. பாடசாலைக்கும் பாலத்திற்கும் இடையிலுள்ள இடைத் தூரம் என்ன?

............

11. நான் பாடசாலேயிலிருந்து வட கிழக்கே 100 யார் சென்று குளத்தை அடைந்தேன். அப்போது எனது நண்பன் கோவிலில் இருந்து 100 யார் தென் கிழக்கேயுள்ள அக்குளத்திற்கு வந்திருந்தான். கோவிலுக்குப் பாடசாலே எத்திசையிலுள்ளது?

............

12. ஒரு நிரையில் சில கம்பங்கள் உள்ளன. ஒவ்வொரு கம்பத்திற்கும் இடையிலுள்ள இடைத் தூரம் 10 அடியாகும். முதலாம் கம்பத்திலிருந்து இறுதிக் கம்பம்வரை இடைத் தூரம் 90 அடியாகும். அந்நிரையில் நாட்டப்பட்டிருந்த கம்பங்கள் எத்தனே?

............

## பயிற்சி - 2

கீழேயுள்ள பயிற்சிகளில் கேள்விகளுக்குரிய சரியான விடையை அடைப்புக்குள் உள்ள விடைகளிலிருந்து தெரிந்து கோடிட்டுக் காட்டவும்.

1. வசந்தா, வசந்திக்கு இடது புறத்தில் இருந்தாள். வசந்தி சுகந்திக்கு இடது புறத்திலிருந்தாள். மத்தியில் இருந்தது யார்?

(வசந்தா, வசந்தி, சுகந்தி)

2. குணபாலன் வந்த பின் சிவபாலன் வந்தான். சிவபாலன் வரமுன் சோமபாலன் வந்தான். முதலில் வந்தவன் யார்?

(குணபாலன், சிவபாலன், சோமபாலன், கூறமுடியாது)

3. அமலன் அழகனிலும் கூடிய புள்ளிகளேப் பெற்றாலும் அமுதனிலும் கூடுதலாகப் பெறவில்லே. மூவரில் மிகக் கூடிய புள்ளிகளேப் பெற்றது யார்?

(அமலன், அழகன், அமுதன், கூறமுடியாது)

4. சுகுமார், மாரனிலும் உயரமானவன். குமார், சுகுமாரிலும் உயரமானவன். மூவரிலும் உயரம் குறைந்தவன் யார்?

(சுகுமார், மாரன், குமார், கூறமுடியாது)

5. ஓட்டப் பந்தயத்தில் குமாரசாமி கந்தசாமியிலும் விரைவாக ஓடுவான். இராமசாமி கந்தசாமியைவிட வேகமாக ஓடக் கூடியவனல்ல. இப்பந்தயத்தில் மத்தியில் வருபவன் யார்?

(கந்தசாமி, குமாரசாமி, இராமசாமி, கூறமுடியாது)

மாலா, கீதாவிலும் உயர்ந்தவளாயினும் வனிதா அளவு உயர்ந்தவளல்ல. ராதா, கீதாவிலும் உயரம் குறைந்தவளாயினும் பிரியாவுடன் ஒப்பிடுகையில் அவ்வாறில்லை.

6. ஐவரில் உயரம் கூடியவள் யார்?
(மாலா, கீதா, வனிதா, ராதா, பிரியா)

7. ஐவரில் உயரம் குறைந்தவள் யார்?
(மாலா, கீதா, வனிதா, ராதா, பிரியா)

8. ஐவரில் இரண்டாவது உயரமானவள் யார்?
(மாலா, கீதா, வனிதா, ராதா, பிரியா, கூறமுடியாது)

ஓர் ஓட்டப் பந்தயத்தில் நிமலா, கமலாவிலும் வேகமாகவும், விமலா, அமலாவிலும் வேகம் குறைவாகவும் ஓடுகின்றனர். குறிப்பிட்ட தூரத்தை ஓட கமலா எடுத்த நேரம், அதே தூரத்தை ஓட அமலா எடுத்த நேரத்திலும் குறைவாகும்.

9. இந்த ஓட்டப் பந்தயத்தில் முதலில் வருபவள் யார்?
(நிமலா, கமலா, விமலா, அமலா, சரியாகக் கூற முடியாது)

10. இந்த ஓட்டப் பந்தயத்தில் இறுதியில் வருபவள் யார்?
(நிமலா, கமலா, விமலா, அமலா, சரியாகக் கூற முடியாது)

# 5. தர்க்கப் புலமை

## பயிற்சி - 1

கீழே தடித்த எழுத்தில் தரப்பட்ட கூற்றுக்களை நாம் உண்மையென எடுத்துக் கொண்டால், அவற்றை அடுத்துத் தரப்பட்ட மூன்று கூற்றுக்களில் ஒன்று உண்மையானதாக இருக்கும். அக் கூற்றின் கீழ் கோடிடவும்.

உதாரணம் : **பறவைகள் எல்லாம் பறக்கும். காகம் ஒரு பறவை.**

ஆகவே,

(1) பறவைகள் எல்லாம் காகங்கள்.

(2) காகங்களில் சில பறக்கும்.

(3) காகங்கள் எல்லாம் பறக்கும்.

இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

1. உயர்ந்த இன மாடுகளின் பிரதான உணவு வைக்கோல் ஆகும்.

ஆகவே,

(1) உயர்ந்த இன மாடுகள் வைக்கோலை மட்டுமே உண்ணும்.

(2) வைக்கோலை உண்ணும் மாடுகள் உயர்ந்த இனத்தவை.

(3) உயர்ந்த இன மாடுகள் வைக்கோலைவிட வேறு உணவுகளையும் உண்ணும்.

2. குரைக்கிற நாய் ஒருபோதும் கடிக்காது. ''வீமா'' என்ற நாய் கடிக்கும்.

ஆகவே,

(1) வீமா குரைக்காது.

(2) வீமா சில சமயம் குரைக்கும்.

(3) வீமா குரைத்துக் கொண்டு கடிக்கும்.

3. நான்கு காலுள்ள பிராணிகள் எல்லாம் மிருகங்கள். மாடுகள் எல்லாவற்றிற்கும் நான்கு கால்கள் உள்ளன.

ஆகவே,

(1) மிருகங்களில் சில பிராணிகள்.

(2) சில மிருகங்களுக்கு நான்கு கால்கள் உள்ளன.

(3) மாடுகள் எல்லாம் மிருகங்கள்.

4. சந்தைக்கு வடக்கே கோவில் உள்ளது. பாடசாலைக்கு வடக்கே சந்தை உள்ளது.

ஆகவே,

(1) பாடசாலைக்குத் தெற்கே கோவில் உள்ளது.

(2) கோவிலுக்குத் தெற்கே பாடசாலை உள்ளது.

(3) கோவிலுக்கு வடக்கே பாடசாலை உள்ளது.

5. பறவைகள் ஒன்றும் குட்டி போடுவதில்லை. கயினுக்கள் எல்லாம் குட்டிபோடுபவை.

ஆகவே,

(1) கயிஞுக்கள் எவையும் பறவைகள் அல்ல.

(2) சில பறவைகள் குட்டி போடும்.

(3) கயிஞு ஒரு பறவை.

# 6. கணிதப் புலமை

## பயிற்சி - 1

1. என்னிடம் 12 ரூபா இருந்தது. எனது சகோதரனிடம் நான் 4 ரூபா கொடுத்தால் இருவரிடமும் இருக்கும் பணமும் சமஞகும். எனது சகோதரனிடம் முன்னர் இருந்த பணம் எவ்வளவு?

............

2. Aயிடம் 24 ரூபாவும், B யிடம் 16 ரூபாவும் இருந்தன. இருவரும் சமஞன பணம் வைத்திருக்க வேண்டுமாயின் A எத்தனை ரூபாவை B க்குக் கொடுக்க வேண்டும்?

............

3. சீதாவிடம் 10 பூக்கள் இருந்தன. கீதாவிடம் இதனிலும் 8 பூக்கள் கூடுதலாக இருந்தன. ராதாவிடம் கீதாவிலும் 5 பூக்கள் குறைவாக இருந்தன. மூவரிடமும் உள்ள பூக்கள் எத்தனை?

............

4. குமாரைவிட மோகன் 20 ரூபா குறைவாக வைத்திருக்கிறுன். இருவரிடமும் மொத்தம் 80 ரூபா இருந்தால் மோகனிடம் இருக்கும் பணம் எவ்வளவு?

............

5. மாலதி, சுமதி, தேவதி ஆகிய மூவருக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 130 ஆகும். சுமதி, தேவதியிலும் 20 வாக்குகள் அதிகமாகவும், தேவதி, மாலதியிலும் 10 வாக்குகள் அதிகமாகவும் பெற்றனர். மாலதி பெற்ற வாக்குகள் எத்தனை?

............

மஞ்சுளாவிடம் 56 ரூபாவும், கமலாவிடம் 65 ரூபாவும், நிமலாவிடம் 79 ரூபாவும் இருந்தது. இப்போது மஞ்சுளா தன்னிடமிருந்த பணத்தில் 15 ரூபாவை

கமலாவிற்கும், 11 ரூபாவை நிமலாவுக்கும் கொடுத்தாள். நிமலா அதன் பின் தன்னிடமிருந்த பணத்தில் 12 ரூபாவை மஞ்சுளாவிற்கும், 8 ரூபாவைக் கமலா விற்கும் கொடுத்தாள். பின் கமலா தன்னிடமிருந்த பணத்தில் 10 ரூபாவை நிமலாவிற்கும், 8 ரூபாவை மஞ்சுளாவிற்கும் கொடுத்தாள்.

6. இக்கொடுக்கல் வாங்கலின் பின் யாரிடம் அதிக பணம் இருந்தது? ...............

7. யாரிடம் பணம் குறைவாக இருந்தது? ...............

8. இரு சிறுவர்களிடம் இருந்த மாபிள்கள் 48 ஆகும். அவற்றுள் ஒரு சிறுவன் பெற்றது, அவனுக்கும் மற்றச் சிறுவனுக்கும் கிடைத்த மாபிள்களின் வித்தியாசத்திற்கு சமனுயின் அவன் பெற்ற மாபிள்கள் எத்தனை?

...............

9. கமலனும், விமலனும் 240 பழங்களை வைத்திருந்தனர். கமலனிடம் இருக்கும் பழங்களிலும் இரு மடங்கு விமலனிடம் இருந்தன, விமலனிடம் உள்ள பழங்கள் எத்தனை?

...............

10. அப்பிள் பழங்களைப் போல் இருமடங்கு தோடம் பழங்களும், தோடம் பழங்களைப்போல் மூன்று மடங்கு மாம்பழங்களும் ஒரு பெட்டியில் இருந்தன. அப்பெட்டியில் எல்லாமாக 30 மாம்பழங்கள் இருந்தன. பெட்டியில் இருந்த அப்பிள் பழங்கள் எத்தனை?

...............

## பயிற்சி - 2

கண்ணன் 5 கவிதைகளைக் கற்கும் நேரத்தில் வரதன் 6 கவிதைகளைக் கற்கிறுன். வரதன் 3 கவிதைகளைக் கற்கும் நேரத்தில் இராமன் 2 கவிதைகளைக் கற்கிறுன்.

1. கவிதை கற்பதற்கு மிக அதிக நேரம் எடுப்பவன் யார்? ...............

2. மிகக் குறைந்த நேரத்தில் கவிதை கற்பவன் யார்? ...............

ஒரு குடும்பத்தில் 5 பிள்ளைகள் உள்ளனர். முதல் மூன்று பிள்ளைகளினதும் வயது வித்தியாசம் இவ்விரண்டாகும். கடைசி இரண்டு பிள்ளைகளினதும் வயது வித்தியாசம் ஒவ்வொன்றாகும். 5வருடத்திற்கு முன் முதலாம் பிள்ளையினதும் கடைசிப் பிள்ளையினதும் வயதின் கூட்டுத்தொகை 10 ஆகும். அவ்வாறாயின்,

3. இரண்டாவது பிள்ளையின் தற்போதைய வயது என்ன? ...............

4. கடைசிப் பிள்ளையின் தற்போதைய வயது என்ன? ...............

5. இப்போது தாயின் வயது மகளின் வயதின் இருமடங்காகும். 30 வருடங்களுக்கு முன் தாயின் வயதும் மகளின் இப்போதைய வயதும் ஒன்றாயின் தாயின் இப்போதைய வயதென்ன?

...............

6. A யும் B யும் சகோதரிகள் A யின் வயது 20. B யின் வயது 8. இன்னும் எத்தனை வருடங்களின் பின் A யின் வயது B யின் வயதின் இரு மடங்காக இருக்கும்?

...............

நான் ஒரு ரூபாவிற்கு 5 சத முத்திரைகளிலும் 10 சத முத்திரைகளிலும் மொத்தமாக 16 முத்திரைகளை வாங்கினேன். அவ்வாறாயின்,

7. நான் வாங்கிய 5 சத முத்திரைகள் எத்தனை? ...............

8. நான் வாங்கிய 10 சத முத்திரைகள் எத்தனை? ...............

ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் 30 ரூபா கொடுத்தபோது 10 ரூபா போதாமல் இருந்தது. பதிலாக ஒவ்வொரு பிள்ளைக்கும் 25 ரூபா கொடுத்தபோது 10 ரூபா எஞ்சியது. அவ்வாறாயின்,

9. அவனிடம் இருந்த பணம் எவ்வளவு? ...............

10. அவனுக்கு எத்தனை பிள்ளைகள் உளர்? ...............

## பயிற்சி . 3

1. 100 யார் நீளம் 100 யார் அகலமான ஒரு சற்சதுரமான தோட்டத்தைச் சுற்றி வேலியடைக்க 10 யாருக்கொன்றாகத் தூண்கள் நடப்படவேண்டும்.

முழுத் தோட்டத்தையும் சுற்றி வேலியடைக்க எத்தனை தூண்கள் தேவைப் படும்? சரியான விடையின் எதிரே புள்ளடி ( X ) இடவும்.

(1) 44 தூண்கள் (2) 40 தூண்கள்

(3) 22 தூண்கள் (4) 41 தூண்கள்

2. அகலத்திலும்பார்க்க நீளம் இரு மடங்காக உள்ள ஓர் அறையின் பரப்பு 450 சதுர அடியாகும், இவ்வறையின் சுற்றளவு என்ன?

..................

3. அரை மைல் சதுரமான (அரை மைல் நீளம், அரை மைல் அகலம்) வயலை உழுவதற்கு 800 ரூபா செலவானால் கால் மைல் சதுரமான வயலை உழுவதற்கு எவ்வளவு செலவாகும்?

..................

4. உமது வகுப்பிலுள்ள மாணவர்கள் ஒரு நிரையில் நிற்கின்றனர். அந்நிரையில் நீர் தொடக்கத்திலிருந்து 15 வது ஆளாகவும் முடிவிலிருந்து 10வது ஆளாகவும் இருப்பின் உமது வகுப்பிலுள்ள மாணவர்கள் தொகை என்ன?

..................

ஒரு தோட்டத்தில் கத்தரிச் செடியும் தக்காளிச் செடியும் ஒரு நிரையில் நடப்பட்டன. ஒவ்வொரு கத்தரிச் செடியையும் அடுத்து இவ்விரண்டு தக்காளிச் செடிகள் காணப்பட்டன. எல்லாமாக 25 செடிகள் அங்கு காணப்பட்டன. நிரையில் இறுதியாக இருந்த செடி கத்தரிச் செடியாகும். ஆயின்,

5. நிரையில் முதலில் காணப்பட்ட செடி எது? ..................

6. எல்லாமாக அங்கு எத்தனை தக்காளிச் செடிகள் உள்ளன? ..................

ஒரு மரக்கறித் தோட்டத்தில் கத்தரிச் செடிகளினதும் வெண்டிச் செடிகளினதும் தொகை 70க்குக் குறைவாக இருந்தது. கத்தரிச்செடி ஒவ்வொன்றும் 8 செடிகளைக் கொண்ட பாத்திகளில் உள்ளன. வெண்டிச் செடிகள் ஒவ்வொன்றும் 7 செடிகளைக் கொண்ட பாத்திகளில் உள்ளன. வெண்டிச் செடிகளிலும் பார்க்க கத்தரிச்செடிகள் 12 அதிகமாகும். ஆயின்,

7. தோட்டத்திலுள்ள கத்தரிச் செடிகள் எத்தனை? ..................

8. தோட்டத்திலுள்ள வெண்டிச் செடிகள் எத்தனை? ..................

9. 3 ரூபாவுக்கு ஒரு அன்னுசிப் பழமும் ஒரு மாம்பழமும் வாங்கலாம். 5 ரூபாவுக்கு ஒரு அன்னுசிப்பழம், ஒரு மாம்பழம், ஒரு தோடம்பழம், ஒரு மாதுளம் பழம் ஆகியன வாங்கலாம். ஒரு அன்னுசிப்பழம் ஒரு மாம்பழத்தைப்போல் இரு மடங்கு விலையுடையதாகவும் ஒரு தோடம் பழத்தைப் போல் நான்கு மடங்கு விலையுடையதாகவும் உள்ளது. ஆயின், ஒரு மாதுளம் பழத்தின் விலை என்ன?

.................

10. A என்னும் குழாயில் வரும் நீர், ஒரு நீர்த் தொட்டியை 2 மணித்தியாலங்களில் நிரப்பும். B என்னும் குழாய், தொட்டியிலுள்ள நீரை 3 மணித்தியாலங்களில் வெளியேற்றும். இந்த இரு குழாய்களையும் ஒரே நேரத்தில் திறந்துவிட்டால் தொட்டி எத்தனை மணித்தியாலங்களில் நிரம்பும்?

...............

# 7 கட்புலமை

## பயிற்சி . 1

கீழே தரப்பட்ட பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலுமுள்ள ஐந்து உருவங்களில் நான்கு உருவங்கள் ஏதாவது ஒரு வகையில் தம்முள் ஒத்திருக்க, ஓர் உருவம் மட்டும் இவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. இதன் கீழ் கோடிடவும்.

உதாரணம் (1)



உதாரணம் (2)



இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.



## பயிற்சி - 2

கீழே ஒவ்வொரு நிரையிலும் இடது பக்கத்திலுள்ள முதல் நான்கு உருவங்களும் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளன. இந்த ஒழுங்கில் ஐந்தாவதாக அமையக் கூடிய ஓர் உருவத்தை அதே நிரையில் வலது பக்கத்தில் தரப்பட்டுள்ள ஐந்து உருவங்களில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1)



இந்த உதாரணத்தில் ஒவ்வொரு சதுரத்துள்ளும் காணப்படும் புள்ளிகள் 1,2,3,4 என்ற ஒழுங்கில் அதிகரிப்பதால் ஐந்தாவதாக அமைய வேண்டிய உருவம் 5 புள்ளிகள் கொண்ட இரண்டாவது உருவமாகும். இதனால் இதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

உதாரணம்: (2)



இந்த உதாரணத்தில் ஒவ்வொரு சதுரத்துள்ளும் காணப்படும் ஆறு சிறு உருவங்களுள் வட்டங்கள் குறித்த ஓர் ஒழுங்கில் அதிகரித்திருக்கின்றதை அவதானிக்கலாம். எனவே இந்த ஒழுங்கில் ஐந்தாவதாக அமைய வேண்டிய உருவம் 2 வது உருவமாகும்.

இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

1 2 3 4 5

1. 

2. 

3. 

4. 

5. 

6. 

7. 

8. 

9. 

10. 

11. 

## பயிற்சி - 3

ஒவ்வொரு நிரையிலும் குறித்தவொரு ஒழுங்கு முறையில் அமையவேண்டிய 5 உருவங்களில் 2 உருவங்கள் இடம்மாறி அமைந்துள்ளன. அவற்றின் கீழ் கோடிடவும்.

உதா:




இந்த உதாரணத்தில் 5 வது உருவத்தை 3 வது இடத்திற்கும் 3 வது உருவத்தை 5 வது இடத்திற்கும் மாற்றியமைத்தால் இந் நிரையிலுள்ள 5 உருவங்களும் ஓர் ஒழுங்கு முறையில் அமையும். ஆகவே, சரியான விடை 3 வது உருவமும் 5வது உருவமும் ஆகும். இனி. கீழேயுள்ள பயிற்சிகளைச் செய்யவும்.

1.




2.




3.




4.




5.



## பயிற்சி . 4

கீழே தரப்பட்ட பயிற்சியில் ஒவ்வொரு நிரையிலும் 1வது உருவத்திற்கு 2வது உருவம் பொருத்தமுடையதாக உள்ளது. அதுபோல 3 வது உருவத்திற்குப் பொருத்தமான ஓர் உருவம் அதே நிரையில் 4 தொடக்கம் 7 வரை உள்ளது. அதன் கீழ் கோடிடவும்.

உதா:




இப்போது பின்வரும் பயிற்சிகளைச் செய்யவும்.

1.




2.




3.




4.




5.



## பயிற்சி . 5

ஒவ்வொரு நிரையிலும் முதலிரு உருவங்களுக்கிடையில் உள்ள பொருத்தத்தைக் கவனித்து இதேபோல் 3 வது உருவத்திற்குப் பொருத்தமான ஓர் உருவத்தை வலது புறத்தில் தரப்பட்ட 4 உருவங்களில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடவும்.



# பணிப்புப் பயிற்சிகள்

## பயிற்சி 1

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z

மேலே தரப்பட்டுள்ள ஆங்கில அகர வரிசையைக் கவனித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை காணவும்.

1. H இற்கும் K க்கும் இடையில் 3 எழுத்துக்கள் இருப்பின் கீறிட்ட இடத்தில் "X" எனக் குறிக்கவும். அல்லாவிடின் "Y" எனக் குறிக்கவும். ..............

2. D க்கும் I க்கும் இடையில் 4 எழுத்துக்களிருப்பின் கீறிட்ட இடத்தில் "A" எனக் குறிக்கவும். அல்லாவிடின் "O" எனக் குறிக்கவும். ..............

3. முதல் மூன்று எழுத்துக்களையும் இறுதி நான்கு எழுத்துக்களையும் நீக்கிய பின் வரிசையில் நடுவில் வரும் எழுத்து யாது? ..............

4. 15 குருவிகளில் 8 பறந்தால் மிகுதியாக இருப்பது 7 ஆயின் A யிலிருந்து 8வது எழுத்தையும் பிழையாயின் A யின் பின்வரும் 7வது எழுத்தையும் குறிக்கவும். ..............

5. D க்கும் J க்கும் இடைப்பட்ட எழுத்து எது? ..............

## பயிற்சி 2

1. பூனை எலியிலும் பார்க்கப் பெரிதல்லவாயின் "M" என்று எழுதவும். பெரிதாயின் "N" என்று எழுதுக. எது பெரிதென்று கூறமுடியாதாயின் "O" என்று எழுதுக. ..............

2. போராட்டம், கவனம், கோலாகலம், பயங்கரம், தேவாரம் என்பவற்றுள் அதிக எழுத்துக்களைக் குறிக்கும் சொல்லின் இரண்டாம் எழுத்தை எழுதுக ..............

3. கீழே தரப்பட்ட இலக்கங்களில் இரண்டாவது பெரிய இலக்கம் எது? 6785 5875, 7685, 6587, 7865, 5875. ..............

4. 74 இற்கும் 58 இற்கும் இடையிலுள்ள வித்தியாசம் 24 இற்கும் 40 இற்கும் இடையிலுள்ள வித்தியாசத்திலும் குறைவாயின், கீறிட்ட இடத்தில் 10 என்று எழுதுக. கூடவாயின் O என்று எழுதுக. சமமாயின் I என்று எழுதுக, ..............

5. பின்வரும் எழுத்துக்களில் "க" என்னும் எழுத்தைத் தவிர வேறு எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

க த த ட ந ழ மு ற ல் ன வ ன ப வ ல ய ர ழ ட ந

## பாகம் இரண்டு

# பொது உளச் சார்புப் பரீட்சைகள்

## APTITUDE TESTS

இப் பாகத்தில் மாதிரிப் பரீட்சைகள் ஐந்து தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பரீட்சையும் குறிக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் செய்து முடிக்கப்படல்வேண்டும். எனவே, நேரத்தைத் திடமாக வரையறை செய்துகொண்டபின் விடையளிக்கத் தொடங்கவும். விடைகளைப் புத்தகத்திலேயே குறித்துக்கொள்ளலாம்.

**விடையளிக்கும்போது கவனிக்கவேண்டியவை:**

1. தரப்பட்ட எல்லா வினுக்களுக்கும் விடையளிக்கவேண்டும்.
2. ஒவ்வொரு பரீட்சையிலுமுள்ள வினுக்களை நன்கு புரிந்துகொண்ட பின்னரே அவற்றிற்கு விடையளிக்கத் தொடங்கவேண்டும்.
3. எந்தவொரு வினுவிலும் அதிக நேரத்தைச் செலவிடவேண்டாம். கடினமான வினுக்கள் இருப்பின் விட்டுச் செல்லவும். பின்னர் நேரம் இருப்பின் அவற்றைச் செய்யக்கூடியதாக இருக்கும்.
4. விடையளிக்கும்போது ஊகிக்கும் பண்பைத் தவிர்க்கவேண்டும்.
5. அநேகமான வினுக்கள் எளிதானவை. ஆயினும் தரப்பட்ட நேரத்திற்குள் நீங்கள் எல்லா வினுக்களுக்கும் விடையளிக்க முடியாது போகலாம். ஆதலால் இயலுமானவரையில் விரைவாக விடையளிக்க முயலவும்.
6. விடைகளைப் புத்தகத்திலேயே குறிக்கவும்.
7. குறிக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததும் விடையளிப்பதை நிறுத்திக்கொள்ளல் வேண்டும்.

# பரீட்சை ஒன்று

*நேரம் 1½ மணி*

***எல்லா விஞக்களுக்கும் விடையளிக்கவும்***

## பிரிவு — 1

**கீழே தரப்பட்டுள்ள எண் தொடர்களைக் கவனமாகப் பார்த்து, ஒவ்வொரு தொடரிலும் அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதவும்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உதாரணம்: | 30 | 29 | 27 | 24 | 20 | 15 | ............ |

மேலே தரப்பட்ட தொடரிலுள்ள எண்கள் 1, 2, 3, 4, 5 என்னும் எண்களால் குறைந்து செல்வதைக் காணலாம். 30—1=29, 29—2=27, 27—3=24, 24—4=20, 20—5=15. ஆகவே இத் தொடரில் அடுத்து வரவேண்டிய எண் 15—6=9 ஆகும். எனவே 9ஐக் கீறிட்ட இடத்தில் எழுதவும்.

*இனி பின்வரும் விஞக்களுக்கு விடையளிக்கவும்.*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 12 | 15 | 18 | 21 | 24 | 27 | .......... |
| 2. | 10 | 11 | 13 | 16 | 20 | 25 | ......... |
| 3. | 8 | 9 | 6 | 7 | 4 | 5 | ......... |
| 4. | 52 | 40 | 30 | 22 | 16 | 12 | ......... |
| 5. | 35 | 30 | 29 | 24 | 23 | 18 | .......... |
| 6. | 27 | 30 | 35 | 42 | 51 | 62 | ......... |
| 7. | 28 | 15 | 30 | 20 | 32 | 25 | ......... |
| 8. | 22 | 21 | 19 | 16 | 12 | 7 | ......... |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9. | 10 | 12 | 16 | 22 | 30 | 40 | ......... |
| 10. | 18 | 20 | 22 | 23 | 26 | 26 | ......... |

## பிரிவு — II

ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களில் இருசொற்கள்எதிர்க் கருத்துடையவை. அவற்றின் கீழ் கோடிடுக.

உதாரணம்:

இருள், இரவு, ஒளி, நிலா, வெயில்

11. குறுகிய, சிறிய, பரந்த, விரிந்த, பெரிய
12. புதிய, பெறுமதியான, மலிவான, பழைய, நாகரிகமான
13. பிழை, தீமை, நீளம், அகலம், நன்மை
14. பிரி, அழி, சேர், அளி, கழி
15. வருமானம், பொருள், வறுமை, செலவு, பணம்
16. நோயுற்ற, களைத்த, சோம்பலான, வலிமையான, சுறுசுறுப்பான
17. நட்பு, வெறுப்பு, கோபம், விருப்பு, எதிர்ப்பு
18. முடிவு, மத்தி, கரை, இடை, தொடக்கம்
19. நிலையான, தனித்த, பிரிந்த, ஒற்றுமையற்ற, இணைந்த
20. வசதியான, பிரயோசனமான, பயனற்ற, தேவையான, பொருத்தமற்ற

## பிரிவு — III

ஒவ்வொரு நிரையிலுமுள்ள ஆறு சொற்களில் நான்கு சொற்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்துள்ளன. மற்றைய இரு சொற்களும் இவற்றிலிருந்து வேறுபட்டுள்ளன. இச் சொற்களைக் கோடிட்டுக் காட்டவும்.

உதாரணம்: மாடு, ஆடு, கிளி, குதிரை, எருமை, கோழி

21. கத்தரி, புரவள்ளி, தக்காளி, பூசனி, முள்ளங்கி, பாகல்

22. புலி, கரடி, சிங்கம், மாடு, ஓநாய், ஆடு

23. கோதுமை, சோளம், பருப்பு, பயறு, நெல், குரக்கன்

24. தமையன், மாமன், மாமி, தாய், தந்தை, மைத்துனன்

25. மணம், மூக்கு, கண், காட்சி, சத்தம், சுவை

26. மேசை, கதிரை, புத்தகம், பென்சில், அலுமாரி, கட்டில்

27. பால், கொக்கு, வெண்கட்டி, காகம், முல்லைப் பூ, கரிக்குருவி

28. ஏழு, எட்டு, ஆறு, ஒன்பது, பத்து, நான்கு

29. உடைத்தல், கட்டுதல், அமைத்தல், அழித்தல், நிறுவுதல், திருத்துதல்

30. இந்தியா, சீனு, கனடா, இரஷ்யா, இலண்டன், மாஸ்கோ

## பிரிவு—IV

ஒவ்வொரு வினுவிலும் கீறிடப்பட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

உதாரணம்: பறவைக்கு பறத்தல் போல மீனுக்கு நீந்துதல்

31. 3 இற்கு 5 போல வைகாசிக்கு ________

32. கப்பலுக்கு கடல் போல விமானத்திற்கு ________

33. வீட்டிற்கு மனிதன் போல கூட்டிற்கு ________

34. தொப்பிக்கு, சப்பாத்து போல தலைக்கு ________

35. உயர்வுக்கு தாழ்வு போல நண்பனுக்கு ________

36. காகத்திற்குப் பறவைபோல நரிக்கு ________

37. 'அ' விற்கு 'இ' போல ஒன்றிற்கு ________

38. கரும்பலகைக்கு கருமைபோல வெண்கட்டிக்கு ________

39. துவக்கிற்கு குண்டுபோல வில்லிற்கு ________

40. நான்கிற்கு சதுரம்போல மூன்றிற்கு ________

## பிரிவு—V

கீழே சில பழமொழிகள் தரப்பட்டுள்ளன. இப் பழமொழிகளின் கருத்துக்கள் அவற்றின் கீழுள்ள வாக்கியங்களினால் உணர்த்தப்படுகின்றன. ஒவ்வொரு பழமொழியினதும் கருத்தை உணர்த்தும் சரியான வாக்கியத்தைக் கண்டுபிடித்தபின், அவ்வாக்கியத்தின் இலக்கத்தை ஒவ்வொரு பழமொழிக்கும் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதவும்.

உதாரணம்: (1) தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் இ ............

(2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல ஆ ............

(அ) எல்லா உலோகங்களும் பொன்னைப்போல் மின்னுவதில்லை

(ஆ) வெளித் தோற்றத்தை மாத்திரம் பார்த்து எதனையும் மதிப்பிட முடியாது.

(இ) இளம் வயதிற் பழகிய பழக்கம் வாழ்நாள் முழுவதும் காணப்படும்.

இனி, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

41. நிறை குடம் தளம்பாது ............

42. வெள்ளம் வருமுன் அணைபோடவேண்டும் ............

43. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் ............

44. ஆனைக்கும் அடி சறுக்கும் ............

45. ஆழமறியாது காலை விடாதே ............

(1) சிலர் தம்மைப்பற்றி உயர்வாகக் கருதுவர்.

(2) வலியானும் ஒருநாள் மெலியானிடம் தோற்க நேரிடலாம்.

(3) அறிவு நிரம்பியவர்கள் அதிகம் உளறமாட்டார்கள்.

(4) ஒரு விடயத்தை நன்கு ஆராயாது அதனில் ஈடுபடலாகாது.

(5) எதற்கும் கவலைப்படாதிருத்தல் மேலானது.

(6) பிரச்சினைகள் வருமுன் அவற்றை வராது பார்த்தல் சிறந்தது.

(7) சிலர் தாம் நினைத்ததையே என்றும் சரியென வாதிப்பர்.

## பிரிவு—VI

கீழே நான்கு வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் எந்த இரு வாக்கியங்களைச் சேர்த்தால் ''நேற்று தபாற்காரன் வந்தான்'' என்ற கருத்தை தெரிவிக்கலாம் எனக் கண்டுபிடித்து அவ் வாக்கியங்களினது இலக்கங்களை 46 ஆம், 47 ஆம் வினாக்களுக்கு எதிரே குறிக்கவும்.

(1) இன்று புதன்கிழமை.

(2) இன்று தபாற்காரன் வந்தான்.

(3) செவ்வாய்க்கிழமை தபாற்காரன் வந்தான்.

(4) நேற்று முன்தினம் தபாற்காரன் வந்தான்.

46. ..................

47. ..................

48. குமார், நாதனிலும் இளையவன். இராமன், சுகுமாரிலும் மூத்தவன். குமாரிலும் இராமன் இளையவன். நால்வரில் வயதில் மூத்தவன் யார்? ............

குளத்திற்கு 100 யார் வடக்கே பாலம் உள்ளது. பாலத்திற்கு 50 யார் கிழக்கே பாடசாலே உள்ளது. பாடசாலேக்கு 100 யார் தெற்கே கோவில் உள்ளது.

49. கோவிலுக்கு எத்திசையில் குளம் உள்ளது? ............

50. குளத்திற்கும் கோவிலுக்கும் இடையிலுள்ள தூரம் எவ்வளவு? ............

அமுதனும் அழகனும் உயரமானவர்கள். அழகனும் அருணனும் விவேகிகள். அருணனும் அமலனும் அழகுடையவர்கள் இவ்வாருயின்,

51. விவேகமும் உயரமும் உள்ளவர் யார்?

52. அழகும் விவேகமும் உள்ளவர் யார்?

53. நேற்றுப் புதன்கிழமை,. நாளேமறுதினம் இம்மாதத்தின் 10 ஆந் திகதி. மாதத்தின் 14 ஆந் திகதி என்ன கிழமை? ............

54. குகன், குமார், சுகுமார், இராமன், நாதன், பாலன் ஆகிய ஆறு சிறுவர்கள் ஒரு வட்ட வடிவமான மேசையைச் சுற்றி அமர்ந்திருக்கின்றனர். இராமனுக்கு நேர் எதிராக இருக்கும் சிறுவன் யார்? ............

55. ஒருவன் காலேயில் கடற்கரையில் சூரியனேப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு பின் இடதுபுறம் திரும்பி கடற்கரை ஓரமாக நடந்து சென்ருன். அவன் எத்திசையை நோக்கி நடந்து சென்ருன்? ............

## பிரிவு—VII

நாதன் 5 கணக்குகள் செய்யும் நேரத்தில் குமார் 6 கணக்குகள் செய்வான். குமார் 3 கணக்குகள் செய்யும் நேரத்தில் வரதன் 4 கணக்குகள் செய்வான் ஆயின்,

56. இவர்களில் அதிக விரைவாக கணக்குகள் செய்யக் கூடியவன் யார்? ............

57. நாதன் 10 கணக்குகள் செய்யும் நேரத்தில் வரதன் எத்தனே கணக்குகள் செய்வான்? ............

ஒரு தோட்டத்தில் கத்தரிச் செடிகளும், வெண்டிச் செடிகளும் ஒரு வரிசையில் நடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கத்தரிச் செடியையும் அடுத்து இரண்டு வெண்டிச் செடிகள் உள்ளன. வரிசையில் முதலில் காணப்படுவது கத்தரிச் செடியாகும். தோட்டத்தில் எல்லாமாக 16 செடிகள் உள்ளன. ஆயின்,

58. வரிசையில் இறுதியாக உள்ள செடி எது? …………

59. அங்கு எத்தனை வெண்டிச் செடிகள் உள்ளன? …………

60. 24 ரூபாவை நாதனும், கரனும் பகிர்ந்தனர். நாதனிலும் கரன் மூன்று மடங்கு பணம் பெற்றுனுயின் நாதன் பெற்ற பணம் எவ்வளவு? …………

61. நீள் சதுரமான காணி ஒன்றின் சுற்றளவு 60 யாராகும். அகலத்திலும் நீளம் 2 மடங்காயின் காணியின் பரப்பென்ன?

62. என்னிடம் இருந்த பணத்தைப்போல மூன்று மடங்கு பணம் என் சகோதரியிடமும், சகோதரியிடம் இருக்கும் பணத்தைப் போல இரு மடங்கு பணம் எனது நண்பனிடமும் இருந்தது. மூவரிடமும் இருந்த பணம் 100 ரூபாவாகும். எனது நண்பனிடம் இருந்த பணம் எவ்வளவு? …………

தோடம்பழம் ஒன்று 25 சதத்துக்கும், மாம்பழம் ஒன்று 50 சதத்துக்கும் விற்கப் பட்டது. ஒருவன் 5 ரூபாவுக்கு இவ்விரண்டிலும் மொத்தம் 12 பழங்களை வாங்கினுன். ஆயின்,

63. அவன் வாங்கிய தோடம் பழங்கள் எத்தனை? …………

64. அவன் வாங்கிய மாம்பழங்கள் எத்தனை? …………

## பிரிவு—VIII

ஒவ்வொரு வரிசையிலும் இடது பக்கத்திலுள்ள முதல் மூன்று உருவங்களும் ஏதோ வகையில் தம்முள் ஒத்துள்ளன. அதே வகையைச் சேர்ந்த இன்னெரு உருவத்தை அதே நிரையில் வலது பக்கத்திலுள்ள ஐந்து உருவங்களில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1)



இந்த உதாரணத்தில் இடது பக்கத்திலுள்ள மூன்று உருவங்களிலும் மத்தியில் புள்ளி இருப்பதைக் காணலாம். இதே போல வலது பக்கத்திலுள்ள ஐந்து உருவங்களின் மத்தியில் புள்ளியிடப்பட்ட ஓர் உருவம் 4ஆவது உருவமாகும். இதனுல் இதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

உதாரணம்: (2)



இந்த உதாரணத்தில் முதல் 3 உருவங்களைப் போன்ற உருவம் 5ஆவது உருவமாகும். இப்போது பின்வரும் வினுக்களுக்கு விடையளிக்கவும்.

65.
66.
67.
68.
69.
70.
71.
72.
73.
74.
75.
76.
77.




1 2 3 4 5
78.
79.
80.
81.
82.
83.
84.
85.
86.
87.
88.
89.
90.

# பரீட்சை இரண்டு

*நேரம் 1½ மணி*

*எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்*

## பிரிவு — I

ஒவ்வொரு நிரையிலுமுள்ள எண் தொடரைக் கவனமாகப் பார்த்து, அடுத்து வரவேண்டிய இரு எண்களைக் கீறிட்ட இடத்தில் எழுதவும்.

உதாரணம்: 2 4 8 16 32 <u>64</u> <u>128</u>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 34 | 27 | 21 | 16 | 12 | 9 | —— | —— |
| 2. | 12 | 14 | 15 | 16 | 18 | 18 | —— | —— |
| 3. | 15 | 21 | 28 | 36 | 45 | 55 | —— | —— |
| 4. | 10 | 15 | 20 | 18 | 30 | 21 | —— | —— |
| 5. | 30 | 33 | 39 | 48 | 60 | 75 | —— | —— |
| 6. | 625 | 128 | 125 | 64 | 25 | 32 | —— | —— |
| 7. | 49 | 40 | 36 | 30 | 25 | 20 | —— | —— |
| 8. | 82 | 78 | 74 | 70 | 66 | 62 | —— | —— |
| 9. | 20 | 21 | 24 | 25 | 28 | 29 | —— | —— |
| 10. | 2 | 3 | 5 | 8 | 13 | 21 | —— | —— |

## பிரிவு—II

ஒவ்வொரு வினாவிலும் கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சரியான எண்ணை எழுதவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11. | 704 | 605 | 506 | 407 | 308 | ——— |
| 12. | 25 | 36 | 49 | 64 | 81 | ——— |
| 13. | 30 | 28 | 40 | 38 | 50 | ——— |
| 14. | 20 | 24 | 32 | 44 | 60 | ——— |
| 15. | 125 | 100 | 80 | 65 | 55 | ——— |
| 16. | 1 | 3 | 9 | 27 | 81 | ——— |
| 17. | 81 | 80 | 78 | 74 | 66 | ——— |
| 18. | 10 | 11 | 13 | 16 | 20 | ——— |
| 19. | 486 | 162 | 54 | 18 | 6 | ——— |
| 20. | 1 | 2 | 6 | 24 | 120 | ——— |

## பிரிவு—III

ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களில் ஒரு சொல் பொருத்தமில்லாது இருக்கின்றது. அச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம் : ஆடு, மாடு, *கிளி*, குதிரை, எருமை

21. நாய், பூனை, ஓநாய், ஆடு, மாடு

22. தென்னை, பனை, வாழை, கமுகு, கித்துல்

23. பென்சில், கத்தி, புத்தகம், கொப்பி, கரும்பலகை

24. எருது, எருமை, குதிரை, கழுதை, மாடு

25. நெல், கோதுமை, குரக்கன், சாமி, தானியம்

26 காகம், கொக்கு, வெளவால், ஆந்தை, பருந்து

27. தவளை, ஆமை, முதலை, மீன், நண்டு

28 கரும்பு, சீனி, இனிமை, தேன், சர்க்கரை

29. இலக்கு, துவக்கு, கலக்கு, வழக்கு, விலக்கு

30. **DEF, JKL, ONM, ABC, XYZ**

பிரிவு—IV

கீழே ஒவ்வொரு நிரையிலும் ஒப்புமையைப் பூர்த்தி செய்யக் கூடிய பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து, அதன் கீழ் கோடிடவும்,

31. குளிர் என்பதற்கு நீர் போல (புகை, வெப்பம், அபாயம், சூரியன்) என்பதற்கு நீ அமையும்,

32. களிமண் என்பதற்கு பானை போல (வாள், மரம், கதிரை, பாத்திரம்) என்பதற்கு மேசை அமையும்.

33. நெல் என்பதற்கு புசல் போல (பால், நீர், திரவம், மருந்து) என்பதற்கு போத்தல் அமையும்.

34. 253 என்பதற்கு 352 போல (837, 387, 378, 738) என்பதற்கு 873 அமையும்.

35. **C D** என்பதற்கு **A B** போல (**H I**, **G H**, **I J**, **J K**) என்பதற்கு **G H** அமையும்.

36. உழுதல் என்பதற்கு கலப்பை போல (வெட்டுதல், கொத்துதல், வயல், மண்) என்பதற்கு மண்வெட்டி அமையும்.

37 துணி என்பதற்கு கத்தரிக்கோல் போல (மரம், விறகு, வாள், வெட்டுதல்) என்பதற்கு கோடரி அமையும்.

38. கடதாசி என்பதற்கு பேனை போல (எழுதுதல், வரைதல், கரும்பலகை, சிலேற்) என்பதற்கு வெண்கட்டி அமையும்.

39. மணித்தியாலம் என்பதற்கு நிமிடம் போல (அந்தர், தொன், இருத்தல், நிறை) என்பதற்கு அவுன்ஸ் அமையும்.

40. வைத்தியசாலை என்பதற்கு நோயாளி போல (மனோ வைத்தியம், குடிகாரன், மறியற்சாலை, தண்டனை) என்பதற்கு குற்றவாளி அமையும்.

## பிரிவு—V

ஒவ்வொரு நிரையிலுமுள்ள முதலாவது சொல்லைக் கவனிக்கவும். பின் இச்சொல்லிற்கு ஒத்த அல்லது கிட்டத்தட்ட ஒத்த கருத்துடைய ஒரு சொல்லை அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து கோடிட்டுக் காட்டவும்.

உதாரணம்: *புகழ்: (மகிழ்ச்சி. சித்தி, பாராட்டு, வெற்றி)*

41. *பயம்; (விபத்து, அபாயம், பீதி, ஆபத்து)*

42. *எதிர்பாராத: (சடுதியான, துரதிஷ்டமான, நினைத்திராத, ஏமாற்றமான)*

43. *மகிழ்ச்சி; (உற்சாகம், வெற்றி, சந்தோஷம், பெருமிதம்)*

44. *நிலையான; (பழமையான, வழமையான, நிரந்தரமான, தொடர்பான)*

45. *ஏற்ற: (வேண்டிய, அவசியமான, தகுந்த, தேவையான)*

## பிரிவு—VI

ஒவ்வொரு நிரையிலும் தடித்த எழுத்திலுள்ள முதல் மூன்று சொற்களும் ஏதோ வகையில் ஒத்துள்ளன. இவற்றிற்கு நேரே அடைப்புக் குறிக்குள் உள்ள மற்ற மூன்று சொற்களில் ஒன்று தடித்த எழுத்திலுள்ள சொற்களுடன் ஒத்துள்ளதைக் காணலாம். அச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: (1) வரதன், நாதன், குமரன்; *(பையன், வரதா, பரதன்)*
(2) காகம், கரி, தார்: *(கொக்கு, பறவை, கரும்பலகை)*

46. இரும்பு, செம்பு, வெள்ளி: *(உலோகம், தங்கம், பாத்திரம்)*

47. ஆடு, நாய், பூனை: *(காகம், மாடு, கோழி)*

48. இருத்தல், அங்குலம், கலன் : (நிறை, நீளம், நிமிடம்)

49. பயம், கோபம், மகிழ்ச்சி : (கவலை, நோய், விபத்து)

50. கரம், சுரம், மரம் : (காரணம், சரம், வாரம்)

## பிரிவு—VII.

ஒரு நிரையில் அமுதன், அழகன், அருணன், அமலன், அகிலன் ஆகிய ஐந்து சிறுவர்கள் இருந்தனர். ஒரு கரையில் அருணனும் மறு கரையில் அமலனும் இருந்தார்கள். அகிலனுக்கு அருகில் அமலன் இருந்தான். அழகனுக்கு அருகில் அருணன் இருந்தான். இப்பொழுது கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

51. அழகனுக்கும் அமலனுக்கும் இடையில் எத்தனை சிறுவர்கள் இருந்தனர்? ..........

52. அமுதனுக்கும் அருணனுக்கும் இடையில் இருந்தது யார்? ..........

53. மத்தியில் இருந்தது யார்? ..........

54. அமுதனுக்கும் அமலனுக்கும் இடையில் இருந்தது யார்? ..........

55. ஜானகி ஜயந்தியிலும் மூத்தவள். வனஜா ஜயந்தியிலும் இளையவள். கிரிஜா ஜானகியிலும் மூத்தவள். நால்வருள் இளையவள் யார்? ..........

கீழேயுள்ள நான்கு வாக்கியங்களையும் வாசிக்கவும்.

(1) கோவிலுக்கு வடக்கே குளம் உள்ளது.

(2) பாலத்திற்குத் தெற்கே பாடசாலை உள்ளது.

(3) கோவிலுக்கு வடக்கே பாலம் உள்ளது.

(4) பாடசாலைக்கு வடக்கே கோவில் உள்ளது.

''குளத்திற்குத் தெற்கே பாடசாலை உள்ளது'' என்பதைத் தெரிவிக்க மேலேயுள்ள நான்கு வாக்கியங்களில் எந்த இரு வாக்கியங்களைத் தெரிவு செய்ய வேண்டும்? அவற்றின் இலக்கத்தை 56ஆம், 57ஆம் வினாக்களுக்கு எதிரே குறிக்கவும்.

56. ..........

57. ..........

58. குமாருக்கு மாம்பழம் விருப்பம். வாழைப்பழம் விருப்பமில்லை. நாதனுக்கு அன்னாசிப் பழமும் பலாப் பழமும் மட்டும் விருப்பமில்லை. மோகனுக்கு எல்லாப் பழங்களும் விருப்பம். ஒரு விருந்திற்கு அழைக்கப்பட்டால் மாம்பழம், பலாப்பழம், அன்னாசிப்பழம், வாழைப்பழம் ஆகிய பழங்களில் எந்த ஒரு பழத்தை மூவருக்கும் கொடுக்க முடியும்?

............

59. A C யிலும் குறைவான புள்ளிகள் பெற்றாலும் E யிலும் குறைவாகப் பெறவில்லை, C பெற்ற புள்ளிகள் H இலும் கூடவாயினும் G இலும் குறைவாகும். ஐவருள் மிகக் கூடுதலான புள்ளிகள் பெற்றது யார்?

............

60. மாலை நேரத்தில் ஒருவன் சூரியனைப் பார்த்த வண்ணம் தலைகீழாக நிற்கிறான். இவனது இடது தோள் எத் திசையை நோக்கி நிற்கும்?

............

## பிரிவு—VIII

61. என்னிடம் 4 ரூபா 80 சதம் இருந்தது. என் நண்பனிடம் இருந்த பணத்தில் இருந்து 1 ரூபா 60 சதத்தை நான் வாங்கினால் இப்போது இருவரிடமும் இருக்கும் பணம் சமனாகும். நண்பனிடம் இருந்த பணம் எவ்வளவு?

............

தோடம்பழங்களைப் போல மூன்று மடங்கு மாம்பழங்களும் மாம்பழங்களைப் போல இரு மடங்கு அப்பிள் பழங்களும் ஒரு பெட்டியுள் இருந்தன. அப் பெட்டியில் எல்லாமாக 60 அப்பிள் பழங்கள் இருந்தன. அவ்வாறாயின்,

62. அப் பெட்டியுள் இருந்த தோடம் பழங்கள் எத்தனை? ............

63. அப் பெட்டியுள் இருந்த மொத்தப் பழங்கள் எத்தனை? ............

நான்கு சிறுவர்கள் செய்யும் வேலையை 3 பெண்கள் செய்வார்கள். 6 பெண்கள் செய்யும் வேலையை 4 ஆண்கள் செய்வார்கள்.

64. இவர்களில் நன்கு வேலை செய்யக் கூடியவர் யார்? ............

65. ஒரு ஆண் செய்யும் வேலையை எத்தனை சிறுவர்கள் செய்து முடிப்பர்? ............

66. மையும் போத்தலும் 1 ரூபா 10 சதம் ஆகும். போத்தலின் விலையிலும் பார்க்க மையின் விலை 1 ரூபா அதிகம் ஆயின் போத்தலின் விலை என்ன?

............

67. ஒரு மைல் சதுர (ஒரு மைல் நீளம், ஒரு மைல் அகலம்) வயலை உழுவதற்கு 800 ரூபா செலவானால் கால் மைல் சதுர வயலை உழுவதற்கு எவ்வளவு செலவாகும்?

............

68. ஒரு கடிகாரத்தில் ஒரு நாளில் மணிக் கம்பியை நிமிடக் கம்பி எத்தனை தடவை முந்தும்?

............

69. நேற்று திங்கட்கிழமை, நாளை மாதத்தின் 22 ஆம் திகதி. இம் மாதத்தின் 13 ஆம் திகதி என்ன கிழமை?

............

70. மூன்று எண்கள் உண்டு. இம் மூன்று எண்களைக் கூட்டினாலும், பெருக்கினாலும் வரும் விடை ஒரே எண்ணாகும். இம் மூன்று எண்களும் எவை?

............

## பிரிவு—IX

கீழே ஒவ்வொரு நிரையிலும் முதலாவது உருவத்துடன் இரண்டாவது உருவம் ஏதோ வகையில் பொருந்தியுள்ளது. இதுபோல மூன்றாவது உருவத்துடன் பொருந்தும் ஓர் உருவத்தை அதே நிரையில் வலது புறத்திலுள்ள 5 உருவங்களிலிருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடவும்.

உதாரணம்: *(1)*



இந்த உதாரணத்தில் முதலாவது உருவத்துடன் இரண்டாவது உருவம் பொருந்தியுள்ளதுபோல மூன்றாவது உருவத்துடன் பொருந்தும் உருவம் 4ஆவது உருவமாகும். இதனால் இதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

உதாரணம்: **(2)**



இந்த உதாரணத்தில் சரியான விடை 5 ஆவது உருவமாகும்.

இனி, கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1 2 3 4 5

71. 

72. 

73. 

74. 

75. 

76. 

77. 

78. 

79. 

80. 

1 2 3 4 5

81. 

82. 

83. 

84. 

85. 

86. 

87. 

88. 

89. 

90. 

## பரீட்சை மூன்று

நேரம் 1½

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

### பிரிவு—I

கீழே தரப்பட்டிருக்கும் கதைப் பகுதியைக் கவனமாக வாசித்த பின், அதன் கீழ் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குரிய சரியான விடைக் கெதிரே புள்ளடி (X) இடவும்,

துப்பாக்கியை எடுத்துக்கொண்டு ஆற்றங்கரை ஓரமாக புதிய பாதை ஒன்றால் சென்றுகொண்டிருந்தேன். சுற்றுப் புறங்களின் இயற்கை அழகை என்னால் ரசிக்க முடிந்தது. கிழக்குத் திசையின் சூரியக் கதிர்கள் கண்களைக் கூசச் செய்தன. புதிய பாதையால் சென்றதால் விரைவாகக் காட்டின் நடுப் பகுதியை அடைந்துவிட்டேன். ஆனால், எதிர்பார்த்ததுபோல் வந்த பாதையில் மிருகங்கள் காணப்படவில்லை. பல மைல் தூரம் மிருகங்களைத் தேடி அலைந்தேன். மிகவும் களைப்படைந்தேன். நண்பகலாகிவிட்டது. அதிர்ஷ்டம் இல்லாததால் வீட்டிற்குத் திரும்பலாமா என எண்ணினேன். இவ்வாறு எண்ணியவாறு பத்து யார் நடந்திருப்பேன். ஏதோ நடமாடும் சத்தம் ஒன்று கேட்டது. திரும்பிப் பார்த்தேன். புலி ஒன்று எனக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தது. நான் திரும்பியதைக் கண்டதும் அது சடுதியாக நின்றது. புலிக்கு என்னைப் பார்ப்பது புதுமையாக இருந்தது. எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. புலியைக் கொல்லலாம் என நினைத்தேன். குறி தப்பிய புலி மனிதரைத் தாக்கிய கதைகளை அறிந்திருந்தேன். ஆயினும் சுடுவதென்றே தீர்மானித்தேன். துப்பாக்கியை எடுத்துக் குறிவைத்தேன். அதற்கு முன் புலி திகைப்பு நீங்கி அவ்விடத்தில் இருந்து மறைந்துவிட்டது. அது நன்கு மறைந்த பின்னும் நான் அங்கு சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தேன்.

1. இக்கதை கூறப்படுவது யாரால்?
   - (1) வழிப்போக்கனால்
   - (2) வேடனால்
   - (3) பிராணியால்
   - (4) வேட்டையாடுபவனால்

2. அவன் எங்கு சென்றான்?

(1) ஆற்றங்கரைக்கு
(2) மலையுச்சிக்கு
(3) காட்டிற்கு
(4) வீட்டிற்கு

3. அவன் எப்போது புறப்பட்டான்?

(1) நண்பகலில்
(2) மாலையில்
(3) பகல் 12 மணியளவில்
(4) காலையில்

4. புதிய பாதையால் அவன் சென்றதன் காரணம்?

(1) அதிக மிருகங்களைக் காணலாம் என்பதற்காக
(2) இயற்கைக் காட்சிகளைக் காண்பதற்காக
(3) விரைவாகச் செல்வதற்காக
(4) ஒரு மாற்றத்திற்காக

5. "எதிர்பார்த்தது போல" என்பதன் கருத்து

(1) ஏமாற்றமில்லாத
(2) நம்பிக்கையான
(3) எண்ணியது போல
(4) எதிர்நோக்குதல்

6. பின்வருவனவற்றுள் எது அவன் மனதைக் கவர்ந்தது.

(1) இயற்கைக் காட்சிகள்
(2) ஆற்றங்கரை
(3) மிருகங்கள்
(4) புலியின் பார்வை

7. புலிபற்றி அவன் வைத்திருந்த நம்பிக்கை என்ன?

(1) அது ஒரு சாதுவான மிருகம்

(2) அது ஒரு பயங்கர மிருகம்

(3) அது ஒரு பயந்த மிருகம்

(4) புதுமைகளைக் காண விரும்பும் மிருகம்

8. புலி எப்போது அவ்விடத்தைவிட்டு மறைந்தது?

(1) 10 மணியளவில்

(2) காலையில்

(3) மத்தியானம் 12 மணியளவில்

(4) பிற்பகலில்

9. துப்பாக்கி அவனிடம் இல்லாதிருந்திருப்பின் பின்வருவனவற்றுள் எது நடந்திருக்கும்?

(1) புலி அவனைக் கொன்றிருக்கும்

(2) அவன் ஓடித் தப்பியிருப்பான்

(3) புலி திரும்பிச் சென்றிராது

(4) இவற்றுள் எதுவும் பொருத்தமான விடையன்று

10. இக் கதைக்குப் பொருத்தமான தலையங்கம்

(1) மனிதனும் புலியும்

(2) புலியின் தந்திரம்

(3) புலி வேட்டை

(4) இயற்கை வனப்பு

## பிரிவு—II

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் கோடிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமாக அமையக் கூடிய ஒரு சொல்லை அடைப்புக் குறிக்குள் கோடிட்டுக் காட்டவும்.

உதாரணம்: மணித்தியாலத்திற்கு நேரம் போல இறுத்தலிற்கு .........
(அவுன்ஸ், <u>நிறை</u>, நிறுத்தல், தராசு)

11. சமுத்திரத்திற்கு வாவி போல கண்டத்திற்கு …………
(குடா, தீவு, தீபகற்பம், நாடு)

12. காலைக்கு மாலை போல சிறுவனுக்கு …………
(வயோதிபன், பையன், முதுமை, மனிதன், வாலிபன்)

13. கண்ணுக்கு பார்வை போல செவிக்கு …………
(பேச்சு, சத்தம், கேள்வி, ஒளி)

14. கதிரைக்கு தளபாடம் போல பானைக்கு …………
(குயவன், மட்பாண்டம், களிமண், சமைத்தல்)

15. கடலில் மீன் போல விானத்தில் …………
(முகில், நட்சத்திரம், விமானம், பறவை)

16. நேற்று என்பதற்கு நாளை போல வைகாசிக்கு …………
(ஆவணி, பங்குனி, சித்திரை, ஆனி, ஆடி)

17. குழவி என்பதற்கு விழகு போல குருவி என்பதற்கு …………
(விருகு, விதிரு, குவிரு, விகுரு, ருவிகு)

18. நூலுக்கு புத்தகசாலை போல மருந்திற்கு …………
(நோயாளி, ஆஸ்பத்திரி, வைத்தியர், மருந்துச்சாலை)

19. நன்மைக்கு தண்டனை போல தீமைக்கு …………
(நன்மதிப்புக்கு, அவமானம், எதிர்ப்பு, குற்றம்)

20. தோட்டிற்கு காது போல வளையலுக்கு …………
(காப்பு, கால், கை, விரல், நகை)

## பிரிவு—III

ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களைப் பொருத்தமான ஒரு முறையில் வரிசைப்படுத்தும் போது, நடுவில் வரும் சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: அடி, அங்குலம், மைல், யார், பெர்லாங்கு

21. நிமிடம், மணித்தியாலம், நாள், வினாடி, கிழமை

22. ஆடு, எலி, யானை, மாடு, பூனை.

23. கோழி, புறா, குயில், வாத்து, சிட்டுக்குருவி.

24. பந்தி, நூல், சொல், வாக்கியம், அத்தியாயம்.

25. ஒன்று, எல்லாம், அநேகம், ஒன்றுமில்லை, சில.

26. மார்கழி, சித்திரை, கார்த்திகை, ஆனி, வைகாசி.

27. எழுபது, நாற்பது, முப்பது, அறுபது, இருபது.

28. நாடு, தோட்டம், கிராமம், உலகம், மாகாணம்.

29. அறுவடை, நீர்ப்பாய்ச்சல், விற்றல், விதைத்தல், உழுதல்.

30. ஆடு, ஓடு, ஏடு, எடு, ஊடு.

## பிரிவு—IV

ஒவ்வொரு எண் தொடரிலும் கீறிட்ட இடத்தில் இடம்பெற வேண்டிய எண்ணை எழுதவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உதாரணம்: | 12 | 15 | <u>18</u> | 21 | 24 | 27 | |
| 31. | 82 | 74 | 66 | 58 | —— | 42 | 34 |
| 32. | 6 | 9 | 15 | 24 | —— | 51 | 69 |
| 33. | 84 | 80 | 72 | 60 | 44 | —— | |
| 34. | 48 | 35 | 24 | 15 | 8 | —— | |
| 35. | 46 | 59 | 70 | 79 | 86 | —— | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 36. | 4 | 8 | 7 | 11 | 10 | —— | |
| 37. | 5 | 8 | 10 | 13 | 15 | —— | |
| 38 | —— | 40 | 30 | 32 | 42 | 26 | 51 |
| 39 | —— | 15 | 8 | 24 | 15 | 36 | 24 |
| 40. | —— | 70 | 64 | 58 | 52 | 46 | 40 |

## பிரிவு—V

இங்கே தமிழ் மரபு வழக்கில் கூறப்படும் சில சொற்றொடர்கள் தரப்பட்டுள்ளன. இதனை அடுத்து அவற்றின் கருத்துக்களை உணர்த்தும் வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு மரபு வழக்குச் சொற்றொடருக்கும் எதிரே அதன் கருத்தை நன்கு விளக்கும் வாக்கியத்தின் எண்ணை எழுதவும்.

41. வேலி பயிரை மேய்ந்தாற்போல ——————

42. பசுமரத்தாணி போல ——————

43. நகமும் தசையும் போல ——————

44. குரங்கின் கைப் பூமாலை போல ——————

45. அத்தி பூத்தாற் போல ——————

(1) வெளிப்படையாக அமைந்திருத்தல்.

(2) அறியாதாரிடம் பொறுப்பளித்தல்.

(3) மிகவும் சுலபமாக இருத்தல்.

(4) ஆபத்து நேரத்தில் உதவி செய்யாதிருத்தல்.

(5) நம்பியோரே தீங்கிழைத்தல்.

(6) இணை பிரியாதிருத்தல்.

பிரிவு VI

கீழே தடித்த எழுத்திலுள்ள கூற்றுக்களை நாம் உண்மையானவை என எடுத்துக் கொண்டால், அவற்றை அடுத்துத் தரப்பட்டுள்ள மூன்று கூற்றுக்களில் ஒன்று உண்மையானதாக இருக்கும். அதன் கீழ் கோடிடவும்.

உதாரணம்: விருந்திற்கு வந்தவர்களில் அநேகர் பெண்கள்.

ஆகவே,

(1) விருந்திற்கு ஆண்கள் வரவில்லை.

(2) விருந்திற்குப் பெண்கள் மட்டும் வந்தனர்.

(3) விருந்திற்கு ஆண்களும் வந்தனர்.

46. நோர்வீஜியர்கள் எல்லோரும் உயரமானவர்கள். ஒசுலோ ஒரு நோர்வீஜியன்.

ஆகவே,

(1) ஒசுலோ உயரமானவன்.

(2) ஒசுலோ உயரமில்லாதவனாக இருக்கக் கூடும்.

(3) ஒசுலோ மிக மெல்லியவன்.

47. பாடசாலையில் விளையாட்டில் திறமையுள்ளவர்களில் பலர் ஐந்தாம் வகுப்பில் உளர்.

ஆகவே,

(1) ஐந்தாம் வகுப்பில் உள்ள எல்லோரும் விளையாட்டில் திறமை உள்ளவர்கள்.

(2) ஏனைய வகுப்புகளில் விளையாட்டில் திறமை மிக்கவர் இல்லை.

(3) ஏனைய வகுப்புகளில் விளையாட்டில் திறமையுள்ளவர்கள் விளையாட்டில் திறமையற்றவர்களிலும் குறைவு.

48. அறிவாளிகள் பெரும்பாலும் அதிகம் பேசுவதில்லை.

ஆகவே,

(1) பேசுபவர்கள் எல்லோரும் அறிவற்றவர்கள்.

(2) அறிவாளிகள் மிக அருமையாகவே பேசுவர்.

(3) பேசாதவர்கள் எல்லோரும் அறிவாளிகள்.

49. உரேனியர் மட்டும் கடுமையாக வேலைசெய்வர். எமது தோட்டத்தில் வேலை செய்பவர்களில் பலர் உரேனியர்கள்.

ஆகவே,

(1) தோட்டத்தில் கடுமையாக உழைப்பவர்கள் எல்லோரும் உரேனியர் ஆவர்.

(2) தோட்டத்தில் உள்ளவர்களில் சிலர் கடுமையாக உழைப்பர்.

(3) தோட்டத்தில் கடுமையாக உழைப்பவர்களில் ஒரு பகுதியினர் உரேனியர்.

50. மாலா, நிமலாவிலும் விவேகி; விமலா மாலாவிலும் விவேகி.

ஆகவே,

(1) நிமலா விமலாவிலும் விவேகி.

(2) மூவருள்ளும் விவேகி மாலா ஆகும்.

(3) மூவருள்ளும் விவேகம் குறைந்தவள் நிமலாவாகும்.

## பிரிவு—VII

51. இராகுலன் கிழக்கு நோக்கி நிற்க அவனுக்கு முன் நிற்கும் நகுலன் இராகுலனை நோக்கி நிற்கிறான். பின் இருவரும் தத்தமது வலது பக்கம் திரும்புகின்றனர். இப்போது நகுலன் எத்திசையை நோக்கி நிற்கிறான்? ............

இப்போது மாலதியின் வயது 10 வருடங்களுக்கு முன் அவளது வயதிலும் இரு மடங்காகும். அப்போது அவளின் தாயின் வயது அவளின் வயதின் மூன்று மடங்காகும். இவ்வாறாயின்,

52. இப்போது மாலதியின் தாயின் வயதென்ன? ............

53. மாலதி பிறந்தபோது அவள் தாயின் வயதென்ன? ............

A யின் கடிகாரம் D யின் கடிகாரத்தைவிட 5 நிமிடம் முந்திக் காட்டுகின்றது. B யின் கடிகாரம் C யின் கடிகாரத்திலும் 5 நிமிடம் பிந்திக் காட்டுகின்றது. D யின் கடிகாரம் C யின் கடிகாரத்திலும் 5 நிமிடம் முந்திக் காட்டு

கின்றது. இவற்றுள் சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரம் D யின் கடிகாரமாகும். ஆயின்,

54. B யின் கடிகாரம் 7.10 காட்டும்போது A யின் கடிகாரம் என்ன நேரம் காட்டும்? .........

55. காலை எட்டு மணிக்குத் தொடங்கும் கூட்டமொன்றிற்கு ஒவ்வொருவரும் தத்தம் கடிகாரங்களின்படி 8 மணி காட்டும் சமயம் வந்திருந்தார்களாயின் அவர்களில் யார் யார் கூட்டத்திற்குப் பிந்தியிருப்பார்கள்? .........

56. 3 அடி நீளம் 3 அடி அகலம் 3 அடி உயரமுள்ள ஒரு மரக் குற்றியை 1 அடி நீளம் 1 அடி அகலம் 1 அடி உயரமுள்ள சிறிய குற்றிகளாக அறுக்கவேண்டும். மிகக் குறைந்த எத்தனை அறுவைகளில் (வெட்டுகளில்) இவற்றை அறுக்க முடியும்?

1. 9 அறுவைகளில் ( ) 3. 6 அறுவைகளில் ( )

2. 4 அறுவைகளில் ( ) 4. 5 அறுவைகளில் ( )

57. மாலை வேளையில் நகரின் வீதியொன்றால் சென்றுகொண்டிருந்தபோது, எனக்குப் பின் என் நிழல் தொடர்ந்து வந்தது. நான் எத்திசையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன்? .........

58. கமலா, விமலா, நிமலா ஆகிய மூவரும் சகோதரிகள். இவர்களில் மூத்தவள் மணமானவள். கமலா விமலாவிலும் இளையவள். விமலா நிமலாவிலும் மூத்தவள். மூவரில் மணமானவள் யார்? .........

59. நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமையாகும். சென்ற வியாழக்கிழமை தனது பிறந்த தினம் நேற்று என்று சுந்தரம் கூறினான். அவனின் பிறந்த திகதி என்ன? .........

ஒருவன் A யில் இருந்து 50 யார் கிழக்கே சென்று அங்கிருந்து 100 யார் வடக்கே சென்றான். பின் இடது புறம் திரும்பி 100 யார் சென்று அங்கு நின்று இடது புறம் திரும்பி 100 யார் சென்றான்.

60. தற்போது அவன் A க்கு எத்திசையில் நிற்கிறான்? .........

51. தற்போது அவன் நிற்கும் இடத்திற்கும் புறப்பட்ட இடத்திற்கும் இடைத்தூரம் எவ்வளவு? .........

## பிரிவு—VIII

62. A யிடம் இருந்ததுபோல் இரு மடங்கு பணம் B யிடமும், B யிடம் இருந்தது போல் இரு மடங்கு பணம் C யிடமும் இருந்தது. மூவரிடமும் இருந்த மொத்தப் பணம் 350 ரூபாவாகும். A யிடம் இருந்த பணம் எவ்வளவு? …………

ஒரு சற்சதுரமான வயலின் நாற்புற வேலிகளுக்கும் 20 யாருக்கு ஒன்றாக மொத்தமாக 20 கட்டைகள் நடப்பட்டன.

63. இவ்வயலின் சுற்றளவு என்ன? …………

64. இவ்வயலின் பரப்பு என்ன? …………

65. நாதன் மோகனைவிட 30 ரூபா அதிகமாக வைத்திருந்தான். இவர்கள் இருவரிடமும் மொத்தமாக 100 ரூபா இருந்தால் நாதன் வைத்திருந்த பணம் எவ்வளவு? …………

ஒருவன் தன்னிடமிருந்த பழங்களைத் தனது பிள்ளைகளுக்கு மும்மூன்றாகக் கொடுத்தபோது ஒரு பழம் எஞ்சியது. இதற்குப் பதிலாக இவ்விரண்டாகக் கொடுத்தபோது 10 பழங்கள் எஞ்சின. ஆயின்,

66. அவனிடம் இருந்த பழங்கள் எத்தனை? …………

67. அவனுக்கு எத்தனை பிள்ளைகள் உளர்? …………

68. எனது சகோதரனுக்கு என்னிலும் இரண்டு வயது அதிகம். எனது சகோதரி சகோதரனைவிட 4 வயது மூத்தவள். எனது தாயாருக்கு 32 வயதாக இருக்கும்போது நான் பிறந்தேன். நால்வரினதும் மொத்த வயது 100 ஆயின், எனது வயது என்ன?

…………

ஒரு நிரையில் ஒவ்வொரு ஆண் பிள்ளையை அடுத்து ஒவ்வொரு பெண் பிள்ளையும், ஒவ்வொரு பெண் பிள்ளையை அடுத்து ஒவ்வொரு ஆண் பிள்ளையும் மாறி மாறி நின்றனர். இந்த நிரையில் முதலில் நின்றது ஆண் பிள்ளையாகும்.

69. எல்லாமாக 25 பிள்ளைகள் நின்றனராயின் அந்நிரையில் நின்ற ஆண் பிள்ளைகள் எத்தனை?

…………

70. அந்நிரையில் இறுதியாக நின்றது ஆண் பிள்ளையா? பெண் பிள்ளையா?

…………

## பிரிவு—VII

ஒவ்வொரு நிரையிலும் உள்ள முதலாவது உருவம் இரண்டாவது உருவத்துடன் ஏதோ வகையில் தொடர்புள்ளதைக் காணலாம். இதே போன்று மூன்றாவது உருவம் இதனை அடுத்து வலது புறத்தில் உள்ள A, B, C, D எனப் பெயரிடப் பட்ட நான்கு உருவங்களில் ஒன்றுடன் தொடர்புடையது. அந்த உருவத்தின் கீழ் கோடிடவும்.

உதாரணம்:




இங்கே உதாரணத்தில் தரப்பட்ட வினாவில் முதலாவது உருவத்திற்கு இரண்டாவது உருவம் அமைந்துள்ளது போல் மூன்றாவது உருவத்திற்குப் பொருத்தமாக அமைவது C உருவம் ஆகும். இதனால் அதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

இனி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1 : 2 :: 3 A B C D

71. 

72. 

73. 

74. 

75. 

76. 

77. 

78. 

79. 

80. 

## பிரிவு—VIII

ஒவ்வொரு நிரையிலும் இடது பக்கத்திலுள்ள நான்கு உருவங்கள் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளன. இந்த ஒழுங்கில் ஐந்தாவதாக அமையக்கூடிய ஓர் உருவத்தை அதே நிரையில் வலது பக்கத்தில் தரப்பட்டுள்ள 4 உருவங்களிலிருந்து தெரிந்து கோடிட்டுக் காட்டவும்.

1 2 3 4

81.



82.



83.



84.



85.



86.



87.



88.



89.



90.



## பிரிவு — II

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் +, —, ÷, × ஆகிய குறியீடுகளில் பொருத்தமான குறியீடுகளை எழுதிச் சமன்பாட்டைப் பூர்த்தி செய்யவும்.

உதாரணம்: 4 5 1 = 21

இங்கு சரியான குறியீடுகள் எழுதப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்

$$4 \times 5 + 1 = 21$$

இதே போன்று பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | 7 | 7 | 1 | = | 50 |
| 12. | 19 | 21 | 2 | = | 20 |
| 13. | 100 | 6 | 7 | = | 58 |
| 14. | 12 | 2 | 8 | = | 16 |
| 15. | 8 | 9 | 12 | = | 60 |

## பிரிவு — III

ஒவ்வொரு நிரையிலுமுள்ள ஐந்து சொற்களில் நான்கு சொற்கள் ஏதோ வகையில் தம்முள் ஒத்திருக்க, ஒரு சொல் மாத்திரம் இவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. இச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: ஆறு, கடல் குளம் மலை, ஏரி.

16 நீலம், பச்சை, வெள்ளை, நிறம், மஞ்சள்.

17. பால், வெண்ணெய், மோர், எண்ணெய், தயிர்.

18. பேசு, சிரி, ஓடு, பாடு, அழு.

19. தேன், கற்கண்டு, பனங்கட்டி, சர்க்கரை, சீனி.

20. காப்பு, சப்பாத்து, தோடு, சங்கிலி, அட்டியல்.

21. கத்தி, வாள், சுத்தியல், அரிவாள், கோடரி.

22. CAD, BAD, DAC, EAD, FAD.

23. வருமானம், லாபம், நட்டம், கவலை, செலவு.

24. மகிழ்ச்சி, கோபம், தண்டனை, பயம், பொறுமை.

25 இலண்டன். மாஸ்கோ, பீக்கிங், பம்பாய், பாரிஸ்.

## பிரிவு — IV

ஒவ்வொரு வினாவிலும் கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமாக அமையும் ஒரு சொல்லை அடைப்புக் குறிக்குள் கோடிட்டுக் காட்டவும்.

26. விளக்கு ஒளிக்குப்போல நெருப்பு.........

(பிரகாசத்திற்கு, சூட்டிற்கு, புகைக்கு சுவாலைக்கு, சாம்பருக்கு)

27. கன வடிவம் சதுரத்துக்குப் போல கோள வடிவம்.........

(வட்டத்திற்கு. உருளைக்கு, முக்கோணிக்கு, பிரமிட் வடிவத்திற்கு நீள் வட்டத்திற்கு)

28. பாம்பு கீரிக்குப் போல பூனை.........

(பகைக்கு. புலிக்கு எலிக்கு, நாய்க்கு, மயிலுக்கு)

29. புத்தகத்தில் அத்தியாயம் போல வாழ்வில்.........

(இளமை, சம்பவம், பருவம், இன்ப துன்பம், போராட்டம்)

30. ஆசியாவிற்கு ஜப்பான் போல ஐரோப்பாவிற்கு.........

(பின்லாந்து, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி)

31. சோறு பசிக்குப்போல தேநீர்.........

(சுகத்திற்கு, தாகத்திற்கு, உருசிக்கு, பலத்திற்கு, உற்சாகத்திற்கு)

32. நேற்று நாளைக்குப் போல புதன்.........

(நாளைக்கு, திங்களுக்கு, வியாழனுக்கு, வெள்ளிக்கு, செவ்வாய்க்கு)

33. நோய்க்கு அசுத்தம் போல விபத்திற்கு.........

(காயம், வாகனம், இயந்திரம், கவலையீனம், இடநெருக்கம்)

34. பசுவிற்குப் பேடு போல எருத்திற்கு.........

(மாடு, மிருகம், பசு, சேவல், எருமை)

35. நூறிற்கு இலக்கம் போல அன்பிற்கு.........

(உணர்ச்சி, கோபம், விருப்பம், ஆதரவு, அவா)

## பிரிவு — V

ஒவ்வொரு வரிசையிலும் ஒத்த கருத்துடைய அல்லது கிட்டத்தட்ட ஒத்த கருத்துடைய இரு சொற்களைக் கீறிட்டுக் காட்டவும்.

உதாரணம்: சீரற்ற, <u>நெருக்கமான</u>, பரவலான, ஐதான, <u>அடர்த்தியான</u>

வெறுமையான.

36. பீதி, சண்டை, எதிரி, அச்சம், நண்பன், அமைதி.

37. ஊக்கம், உற்சாகம், ஆர்வம், ஆற்றல், அமைதி, வலிமை.

38. ஆரம்பம், முதலாவது, தொடக்கம், தற்காலிகமான, இறுதி, நிலையற்ற.

39. கலப்பற்ற, ஒற்றுமையான, பொதுவான, வேறுபாடில்லாத, சமாதான மான, போட்டியில்லாத.

40. ஆர்வமுள்ள, தைரியமான, களைத்த, பலவீனமான, இளைத்த, சுறுசுறுப்பான.

41. உடல், மனம், மெய், பொய், சூதற்ற, நம்பக்கூடிய.

42. செய்யுள், காவியம், சிறுகதை, இலக்கியம், பாடல், நாவல்.

43. பெரிய, எல்லாம், பிரமாண்டமான, சில, பல, சிறிய.

44. உண்மை, பிரதி, போலி, வாய்மை, தூய்மை, நேர்மை.

45. அறிவு, விவேகம், திறமை, பரீட்சை, ஆய்வு, சோதனை.

## பிரிவு — VI

46. கமலன் 100 யார் ஓட எடுத்த நேரம், நிமலன் 100 யார் ஓட எடுத்த நேரத்திலும் குறைவாகும். அமலன் 100 யார் ஓட எடுத்த நேரம் நிமலன் 100 யார் ஓட எடுத்த நேரத்திலும் கூடவாகும். மூவருள்ளும் மிக வேகமாக ஓடக் கூடியவன் யார்? ............

47. இராமன் 3 வளையல்கள் செய்யும் நேரத்தில், நாதன் 4 வளையல்கள் செய்கிறான். கண்ணன் 5 வளையல்கள் செய்யும் நேரத்தில் இராமன் 6 வளையல்கள் செய்கிறான். மூவரில் விரைவாக வளையல்கள் செய்யக்கூடியவன் யார்? ............

பாலன் 80க்கும் 60க்குமிடையில் புள்ளிகள் பெற்றான். குமார் 70க்கும் 50க்குமிடையில் புள்ளிகள் பெற்றான். மாகன் பெற்ற புள்ளிகள் 60க்குக் குறைவாகும் குமார் பாலனைவிட அதிக புள்ளிகள் பெற்றான்.

48. இவர்களில் அதிக புள்ளிகள் பெற்றது யார்?
(பாலன், குமார், மாகன், கூறமுடியாது)

49. இவர்களில் மிகக் குறைந்த புள்ளிகள் பெற்றது யார்?
(மாகன், பாலன், குமார், கூறமுடியாது)

மூன்று அங்குலக் கனக் குற்றி (மூன்று அங்குல நீளம், மூன்று அங்குல அகலம், மூன்று அங்குல உயரமுள்ள குற்றி) ஒன்றிற்கு எல்லாப் பக்கங்களிலும் மை பூசப்பட்டுள்ளது. பின், இம் மரக் குற்றி 27 சிறு சிறு ஓர் அங்குலக் குற்றிகளாக வெட்டப்பட்டது. இவ்வாறாயின்,

50. இப்போது எத்தனை குற்றிகள் அதன் மூன்று பக்கங்களில் மை பூசப்பட்டுள் ளனவாக இருக்கும்? ............

51. எத்தனை குற்றிகள் அதன் இரு பக்கங்களில் மை பூசப்பட்டுள்ளனவாக இருக்கும்? ............

52. எத்தனை குற்றிகள் அதன் ஒரு பக்கத்தில் மாத்திரம் மை பூசப்பட்டுள்ளன வாக இருக்கும்? ............

53. அன்பன், அழகன், அமுதன், அருணன், அமலன் ஆகிய ஐந்து சிறுவர்கள் ஒரு நிரையில் ஒழுங்காக இருந்தனர். முதலில் அமலனும், அழகனும் இடம் மாறினர். இதன் பின் அன்பனும், அமுதனும் இடம் மாறினர். இப்போது அன்பனுக்கும், அழகனுக்கும் இடையில் இருப்பது யார்? ............

54. விமலாவும், கமலாவும், நிமலாவும் இசையிலும், அமலாவும், நிமலாவும், கமலாவும் நடனத்திலும், விமலாவும், அமலாவும், கமலாவும் பேச்சிலும் திறமை மிக்கவர்கள். மூன்றிலும் திறமை மிக்கவள் யார்? ............

55. A, B, C ஆகிய மூன்று சிறுவர்களும் தம்மிடம் இருந்த பழங்களை பங்கிட்டுக் கொண்டனர். Aயும், Bயும், பெற்றது Bயும், Cயும் பெற்றதிலும் குறைவு, Bயும், Cயும் பெற்றது Cயும், Aயும் பெற்றதிலும் குறைவு. மூவரில் அதிக பழங்கள் பெற்ற சிறுவன் யார்? ............

## பிரிவு — VII

56. எனது கடிகாரம் 10 நிமிடம் முந்தி ஓடியது. ஆனால், நான் 10 நிமிடம் பிந்தி ஓடுவதாக எண்ணியிருந்தேன். நான் நேரம் 7.20 என எண்ணியிருந்த போது தபாற்காரன் வந்தான். அப்போதைய நேரம் என்ன? சரியான விடையின் எதிரே புள்ளடி (×) இடவும்.

(1) 7.40 ( ) (2) 6.50 ( ) (3) 7.00 ( )

(4) 7.20 ( ) (5) 7.30 ( ) (6) 7.10 ( )

57. வனிதா மூன்று கணக்குகள் செய்யும் நேரத்தில் சுகந்தி 5 கணக்குகள் செய்வாள். இருவரும் மொத்தமாக 120 செய்தனராயின் வனிதா செய்த கணக்குகள் எத்தனை? ............

58. A க்குக் கிடைக்கும் பழங்களைப் போல இரு மடங்கு பழங்கள் B க்கும், மூன்று மடங்கு பழங்கள் C க்கும் கிடைக்கத்தக்கதாக 36 பழங்கள் பங்கிடப்பட்டன. இதில் C பெற்ற பழங்கள் எத்தனை? ............

59. A யின் கடிகாரம் மணித்தியாலத்திற்கு 3 நிமிடம் முந்தியும், B யின் கடிகாரம் 3 நிமிடம் பிந்தியும் ஓடுகின்றது. காலை 8 மணிக்கு இருவரினது கடிகாரங்களும் சரியான நேரம் காட்டின. எப்பொழுது இரு கடிகாரங்களும் ஒரு மணித்தியாலம் வித்தியாசமான நேரத்தைக் காட்டும்? சரியான விடைக்கு எதிரே புள்ளடி) (X) இடவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இரவு 8 மணிக்கு | ( ) | 4. | மாலை 4 மணிக்கு | ( ) |
| 2. | இரவு 6 மணிக்கு | ( ) | 5. | மாலை 3 மணிக்கு | ( ) |
| 3. | இரவு 12 மணிக்கு | ( ) | 6. | பகல் 12 மணிக்கு | ( ) |

A யிடமும் B யிடமும் 25 பழங்கள் இருந்தன. B யிடமும் C யிடமும் 40 பழங்கள் இருந்தன. A யிடமும் C யிடமும் 45 பழங்கள் இருந்தன.

60. A யிடம் இருந்த பழங்கள் எத்தனை? ............

61. C யிடம் இருந்த பழங்கள் எத்தனை? ............

62. ஒருவன் கொண்டுவந்த பணத்தில் ½ பங்கினைப் பிரயாணத்தில் செலவு செய்த பின் 50 சதத்துக்குப் பத்திரிகை வாங்கினான். மிகுதியில் ½ பங்கினை உணவிற் செலவு செய்த பின் அவனிடம் 50 சதம் எஞ்சியிருந்தது. அவன் கொண்டுவந்த பணம் எவ்வளவு? .........

63. தாயினதும் மகளினதும் வயதின் கூட்டுத்தொகை 22 ஆகும். மகளிலும் தாய் 20 வயது மூத்தவள். மகளின் வயதென்ன? ............

மாலதியிடமும் தேவதியிடமும் இருந்த பணம் விமலாவிடமும் நிமலாவிடமும் இருந்த பணத்திற்குச் சமனாகும். நிமலாவிடம் இருந்த பணம் மாலதியிடம் இருந்ததிலும் 20 ரூபா அதிகமாகவும் விமலாவிடம் இருந்ததிலும் 30 ரூபா குறைவாகவும் காணப்பட்டது. நால்வரும் மொத்தமாக 200 ரூபா வைத்திருந்தனர். இவ்வாறாயின்,

64. தேவதியிடம் இருந்த பணம் எவ்வளவு? ............

65. நிமலாவிடம் இருந்த பணம் எவ்வளவு? ............

## பிரிவு — VIII

ஒவ்வொரு நிரையிலும் உள்ள முதல் நான்கு உருவங்களும் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளன. இந்த ஒழுங்கில் அடுத்து இடம்பெறும் உருவத்தை அதே நிரையில் 1 தொடக்கம் 5 வரை இலக்கமிடப்பட்டுள்ள 5 உருவங்களில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடவும்.

66.




67.



68.



69.



70.



## பிரிவு — IX

ஒவ்வொரு நிரையிலும் முதலாவது உருவம் இரண்டாவது உருவத்துடன் ஏதோ வகையில் தொடர்புற்றுள்ளது, அதேபோல மூன்றாவது உருவத்துடன் தொடர்புற்றுள்ள

ஓர் உருவம் அதே நிரையில் 4, 5, 6, 7 என இலக்கமிடப்பட்ட உருவங்களுள் உள்ளது. அதன் கீழ் கோடிடவும்.

71. 


72. 


73. 


74. 


75. 


## பிரிவு —X

ஒவ்வொரு நிரையிலும் உள்ள உருவங்களில் ஓர் உருவம் மற்றைய உருவங்களில் இருந்து வேறுபட்டுள்ளது. இந்த உருவத்தின் கீழ் கோடிடவும்.

1 2 3 4 5

76. 

77. 

78. 

79. 

80. 

## பிரிவு—X1

ஒவ்வொரு வினாவிலும் வெற்றுச் சதுரத்துள் பொருந்தக்கூடிய ஓர் உருவத்தை 1 தொடக்கம் 4 வரை எண்ணிடப்பட்ட உருவங்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடவும்.

81.




82.




83.




84.




85.




## பிரிவு—XII

ஒவ்வொரு நிரையிலும் தரப்பட்டுள்ள 5 உருவங்களையும் பொருத்தமான ஒரு முறையில் ஒழுங்குபடுத்தும்போது நடுவில் வரும் உருவத்தின் கீழ் கோடிடவும்.

முதல் நிரையில் உதாரணத்தில் தரப்பட்டுள்ள உருவங்களைப் பருமனைப் பொறுத்த வரையில் ஒழுங்குபடுத்தும்போது நடுவில் வரும் உருவம் 1ஆவது உருவமாகும்.

இதுபோல ஏனைய வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1 2 3 4 5

உதாரணம் :

86.

87.

88.

89.

90.



# பரீட்சை ஐந்து

நேரம் $1\frac{1}{4}$ மணி

எல்லா வினுக்களுக்கும் விடையளிக்கவும்

பிரிவு—I

கீழேயுள்ள கதைப் பகுதியைக் கவனமாக வாசிக்கவும்.

சூரியன் மறையும் அழகை ரசித்துக் கொண்டு கூடாரம் அடிக்கும் வேலையை மேற்பார்வை செய்து கொண்டிருந்தேன். அங்குமிங்கும் ஓடும் பறவையினங்களின் ஒலியும், அருகே ஓடும் ஆற்றின் இரைச்சலும், சுற்றியுள்ள மலைச் சிகரங்களின் அழகும் தனி இன்பத்தைத் தந்தன. அவ்வேளை, எமது குழுவில் ஒருவன் ஓடிவந்து கரடிகளின் உறுமல் சத்தம் கேட்டதாகவும், கரடிக் கூட்டம் தொலைவில் வருகின்றது என்றும் கூறினுன். அப்போது எதிர்பாராதவிதமாகப் பெரிய முழக்கச் சத்தங்கள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து இக்கூட்டம் அங்கிருந்து திரும்பிச் சென்று விட்டது. சிறிது நேரத்தின் பின் விநோத உடை அணிந்திருந்த காட்டு வாசிகள் மேளங்களை அடித்து முழக்கம் செய்து கொண்டு எங்கள் கூடாரத்தை நோக்கி வந்தனர். அவர்கள் கைகளில் ஈட்டிபோன்ற ஆயுதங்களும், தீப்பந்தங்களும் காணப்பட்டன. எமது குழுவினர் இதைக் கண்டு திகிலடைந்தனர். எங்கள் கூடாரத்தினுள் துப்பாக்கி, கோடரி போன்ற ஆயுதங்களும், தடிகளும் இருந்தன. இவர்கள் கூடாரத்திற்கு அருகில் வந்து கைதட்டி ஆரவாரம் போட்டனர். பின்னர் அவர்களில் சிலர் எங்கோ சென்று எமக்குப் பழங்கள், கிழங்கு, தேன் போன்ற உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து தந்தனர். ஆடிப்பாடி எம்முடன் உணவருந்தினர். விவாகமாகாதிருந்த எமது குழுவினரில் பலர், தம்மை மறந்து அங்கு வந்திருந்த காட்டுப் பெண்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவ்விடயத்தைப் பற்றியும், மலையுச்சியை அடையும் பாதைகளில் ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றியும் கூறிய இவர்கள், நடுநிசிக்கு முன் அங்கிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டனர். மறுநாள் அதிகாலையில் எமது குழு மலையடிவாரத்திற்கு வந்தது. ஆனுல், பலத்த புயலும் மழையும் ஏற்பட்டது. இது எங்களுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

இப்போது கீழேயுள்ள கூற்றுக்களைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் கோடிட்டுக் காட்டவும்.

1. இக்கதை (குழுத் தலைவனால், மலைவாசியால், காட்டு வாசியால், போர்வீரனால்) கூறப்படுகின்றது.

2. குழுவினர் (மாலையில், காலையில், நண்பகலில், நள்ளிரவில்) கூடாரம் அமைத்தனர்.

3. இக்குழுவில் பெரும்பாலோர் (போர் வீரர்கள், இளைஞர்கள், மாணவர்கள், காட்டு வாசிகள்) ஆவர்.

4. இவர்கள் (மலை உச்சியில், மலை அடிவாரத்தில், ஆற்றுக்கருகில், சுதேசிகள் வாழுமிடத்தில்) கூடாரம் அமைத்தனர்.

5. கூடாரம் என்பது (கோடரி போன்ற பொருட்கள் வைக்கும் இடத்தை, காட்டு வாசிகள் வாழும் இடத்தை, உயரமான இடத்தை, தற்காலிக வசிப்பிடத்தை) குறிக்கும்.

6. இங்கு கூட்டம் என்பது (குழுவினரை, கரடிகளை, காட்டு வாசிகளை, மலை ஏறுபவர்களை) குறிக்கும்.

7. 'திகில்' என்ற சொல்லின் பொருள் (திடமற்ற, அவசரமான, ஆபத்தான, ஆச்சரியமான, பயமான) என்பதாகும்.

8. இக்கதையில் குழுவினரின் நோக்கம் (இருட்டியதால், மழையால், காட்டு வாசிகளின் புத்திமதியால், கரடிகளின் வருகையால்) தடைப்பட்டது.

9. இக்கதையிலிருந்து காட்டு வாசிகள் முன்னர் கண்டிராதவரைக் கண்டால் (ஆவேசம் கொள்வர், மகிழ்ச்சியடைவர், எள்ளிநகையாடுவர், சண்டையிடுவர்.)

10. குழுவினரில் பெரும்பாலோர் மனதைக் கவர்ந்தது (மலைச் சிகரங்கள், காட்டு வாசிகளின் உடை, இயற்கைக் காட்சிகள், காட்டுப் பெண்களின் அழகு) ஆகும்.

## பிரிவு—II

கீழே ஒவ்வொரு நிரையிலும் முதலாவது சொல்லுக்கு ஒத்த அல்லது கிட்டத்தட்ட ஒத்த ஒரு சொல் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. அச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம் : *திறமை — (விவேகம், வீரம், ஆற்றல், துணிவு, வலிமை)*

11. *தடுத்தல் — (கட்டுப்படுத்தல், மறுத்தல், மறித்தல், அடைத்தல், அடக்குதல்)*

12. *திருத்துதல் — (மாற்றுதல், வேறுபடுத்தல், ஒழுங்குபடுத்தல், சரிப்படுத்தல், நகர்த்தல்)*

13. *பாரமான — (பூரணமான, நிறையான, பருமனான, கொழுத்த, மொத்தமான)*

14. *சேவை — (கருமம், உதவி, நன்மை, பணி, உழைப்)*

15. *அழிவு — அபாயம், பயம், தீமை, நாசம், கவலை)*

## பிரிவு—III

கீழே ஒவ்வொரு நிரையிலும் முதலாவது சொல்லிற்கு எதிரான அல்லது கிட்டத்தட்ட எதிரான ஒரு சொல் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது, அச்சொல்லின் கீழ் கோடிடவும்.

உதாரணம் : *முடிவு — (முதலாவது, தொடக்கம், அழிவற்ற, அந்தம், புராதன)*

16. *பின்னைய — (எதிர்காலம், அடுத்த, முன்னைய, காலங்கடந்த, வேளைக்கு)*

17. *அமைத்தல் — (குழப்புதல், அசைத்தல், அழித்தல், நிறுவுதல், உடைத்தல்)*

18. குறையுள்ள — (குற்றமற்ற, பிழையற்ற, நிறைவுள்ள, சரியான, முழுமை யுள்ள)

19. வலிமையான — (தைரியமான, பலவீனமான, மென்மையான, நிலையான)

20. மறதி — (மனனம் செய்தல், யோசனை, நினைவு, எண்ணம், சிந்தனை)

## பிரிவு—IV

ஒவ்வொரு நிரையிலும் முதலிரு சொற்களுக்கு இடையிலுள்ள பொருத்தத்தைப் போன்ற பொருத்தமுடைய இரு சொற்களை அடைப்புக் குறிக்குள் கோடிட்டுக் காட்டவும்.

உதாரணம் : மகன் : மகள் (பையன், தகப்பன், பெண், தாய்)

21. அன்பு : விருப்பம் (துக்கம், வெறுப்பு, பெருமை, கோபம்)
22. கண் ; பார்வை (காது, விடை, கேள்வி, பேசுதல்)
23. உயர்வு ; தாழ்வு (பரவலான, வெறுமை, முழுமை, நெருக்கமான)
24. மேசை : கதிரை (பேணி, பாத்திரம், சட்டி, தட்டம்)
25. பணம் : வறுமை (மழை, வரட்சி, மாரி, வெப்ப நிலை)
26. சப்பாத்து ; மாடு (சட்டை, பருத்தி, நூல், புடவை)
27. வட்டம் ; கோளம் (சதுரம், திண்மம், புள்ளி, கனம்)
28. தாய் ; சிறுமி (மனிதன், தகப்பன், ஆண், சிறுவன்)
29. புகையிரதம் : இரும்பு (காடு, மரம், வாள், மேசை)
30. வாள் ; போர்வீரன் (நூல், பேனை, எழுத்தாளன், ஆசிரியன்)

## பிரிவு—V

ஒவ்வொரு நிரையிலுமுள்ள சொற்களுள் பொருந்தாத இரு சொற்களின் கீழ் கோடிடவும்.

உதாரணம்: பையன், சிறுவன், <u>சிறுமி</u>, வாலிபன், <u>நங்கை</u>.

31. மாடு, ஓநாய், ஆடு, புலி, கரடி, நரி.

32. மாடு, குதிரை, யானை, பூனை, ஆடு, நாய்.

33. தைரியம், கோபம், களைப்பு. நம்பிக்கை, பயம், சுறுசுறுப்பு.

34. பாய்க் கப்பல், நீராவிக் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல், கட்டு மரம், மோட்டார் படகு.

35. வைத்தியன், சோதிடன், பொறியியலாளர், கட்டடக் கலைஞன், சாரதி.

36. பாண், சோறு, அரிசி, குரக்கன், சோளம், கோதுமை.

37. பால், முட்டை, காய்கறி, பழம், தானியம், கிழங்கு.

38. பலவீனமான, சந்தேகமான, கோபமான, பயமான, நோயுற்ற.

39. பஸ், ரிக்ஷா, துவிச்சக்கர வண்டி, கார், புகைவண்டி, லொறி.

40. நாகம், காகம், வாகன், பாகம், தாகம், மாகன்.

## பிரிவு—VI

கீழே கொடுக்கப்பட்ட எண் தொடர்களைக் கவனமாகப் பார்த்து அடுத்து வரவேண்டிய இரு எண்களைக் குறிக்கவும்.

41. 18 20 50 35 66 55 ——

42. 56 50 44 38 32 26 ——

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 43. | 20 | 36 | 23 | 30 | 28 | 26 | —— | —— |
| 44. | 1.9 | 2.6 | 3.3 | 4.0 | 4.7 | 5.4 | —— | —— |
| 45. | 16 | 15 | 8 | 7 | 4 | 3 | —— | —— |
| 46. | 99 | 80 | 63 | 48 | 35 | 24 | —— | —— |
| 47. | ½ | 2 | 5 | 11 | 23 | 47 | —— | —— |
| 48. | 0.5 | 48 | 1.5 | 36 | 4.5 | 24 | —— | —— |
| 49. | 94 | 90 | 83 | 73 | 60 | 44 | —— | —— |
| 50. | 80 | 70 | 60 | 52 | 44 | 38 | —— | —— |

## பிரிவு—VII

கீழே ஒவ்வொரு தொடரிலும் எண்கள் கிடையாகவோ குத்தாகவோ அமைந்துள்ள முறையைக் கவனிக்கவும். பின் கோடிட்ட இடத்தில் சரியான எண்ணை எழுதவும்.

| உதாரணம்: | | | |
|---|---|---|---|
| | 10 | 12 | 14 |
| | 15 | 17 | 19 |
| | 20 | —— | —— |

இங்கு கிடையாக எண்கள் 2 ஆலும், குத்தாக எண்கள் 5 ஆலும் அதிகரிக்கின்றன. ஆகவே சரியான விடை 22 உம் 24 உம் ஆகும்.

இனி, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 51. | 28 | 21 | 14 | 52. | 3 | 6 | 9 |
| | 22 | 15 | 8 | | 6 | 12 | 18 |
| | 16 | —— | —— | | 12 | —— | —— |

53.

| | | |
|---|---|---|
| 36 | 45 | 54 |
| 25 | 34 | 43 |
| 14 | —— | —— |

54.

| | | |
|---|---|---|
| 68 | 60 | 50 |
| 76 | 68 | 58 |
| 86 | —— | —— |

55.

| | | |
|---|---|---|
| 81 | 75 | 72 |
| 57 | 51 | 48 |
| 33 | —— | —— |

56.

| | | |
|---|---|---|
| 72 | 83 | 94 |
| 51 | 62 | 73 |
| 30 | —— | —— |

## பிரிவு—VIII

57. நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வடகிழக்குத் திசையை நோக்கி 100 யார் சென்று பின் அங்கிருந்து வடமேற்கு நோக்கி 100 யார் சென்று நின்றேன் நான் தற்போது நிற்குமிடத்திற்கு வீடு எத்திசையில் அமைந்துள்ளது?

.............

58. விஞ்ஞானப் பாடத்தில் மாகன் 80 க்கும் 40 க்குமிடையிலும், வாமன் 60 க்கு குறைவாகவும், வாகன் 30 க்கும் 60 க்கும் இடையிலும் புள்ளிகள் பெற்றனர். இவர்களில் கூடிய புள்ளிகள் பெற்றது யார்?

*(மாகன், வாமன், வாகன், கூறமுடியாது)*

.............

59. ஒரு குடும்பத்தில் 7 பிள்ளைகள் உளர். C யின் வயது B யிலும் கூடவாகும். B க்கு முன்னர் மூன்று பிள்ளைகள் உளர். B, E க்கு நேரே அடுத்த பிள்ளையாகும். F குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையாகும். இக்குடும்பத்தில் E எத்தனையாவது பிள்ளை?

.............

60. ஒரு மேசையின் 4 பக்கங்களிலும் வைக்கப்பட்ட கதிரைகளில் சுந்தர், சங்கர், சேகர், மூர்த்தி ஆகிய நால்வரும் இருந்து சீட்டாடுகிறார்கள். சுந்தருக்கு இடது பக்கமாக சேகர் இருக்கிறான். சேகருக்கு எதிர்ப்புறமாகச் சங்கர் இருக்கிறான். மூர்த்திக்கு இடது பக்கத்தில் இருப்பவன் யார்?

.............

61. A, B, C, D, E என்னும் ஐந்து மாணவர்கள் ஒரு நிரையில் உள்ளனர். இவர்களில் B, A க்கு இடது புறத்திலும், A, C க்கு இடது புறத்திலும் இருந்தனர். E, C க்கு வலது புறத்திலும் D க்கு இடது புறத்திலும் இருந்தான். மத்தியில் இருந்தது யார்? .........

## பிரிவு—IX

ஒரு படமாளிகையில் இரண்டு ஆண்களுக்கும் ஒரு பெண்ணுக்கும் 4 ரூபாவிற்கும், ஒரு ஆணுக்கும் இரண்டு பெண்களுக்கும் 3 ரூபா 50 சதத்திற்கும் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன. இங்ஙனமாயின்,

62. ஆண்களுக்குரிய சீட்டின் விலை என்ன? ............

63. பெண்களுக்குரிய சீட்டின் விலை என்ன? ............

ஒரு தோட்டத்தில் கத்தரிச் செடியும் தக்காளிச் செடியும் ஒரு நிரையில் நடப்பட்டுள்ளன. இந்நிரையில் ஒவ்வொரு கத்தரிச் செடியையும் அடுத்து மும் மூன்று தக்காளிச் செடிகள் நடப்பட்டிருந்தன. எல்லாமாக இந்நிரையில் 25 செடிகள் காணப்பட்டன. நிரையில் முதலில் காணப்பட்டது கத்தரிச் செடியாகும். ஆயின்,

64. அந்நிரையில் எத்தனை கத்தரிச் செடிகள் காணப்பட்டன? ............

65. அந்நிரையில் இறுதியாக உள்ளது என்ன செடி? ............

66. அகலம் நீளத்தின் அரைப்பங்காக உள்ள ஒரு நீள் சதுரமான மேசையின் சுற்றளவு 12 அடியாகும். இந்த மேசையின் பரப்பு என்ன? ............

67. ஒரு கடிகாரத்தின் மணிக் கம்பியும் நிமிடக் கம்பியும் 12 மணிக்கு ஒன்றை ஒன்று சந்தித்த பின் மீண்டும் எவ்வளவு நேரத்தில் மறுமுறை சந்திக்கும்? சரியான விடைக்கு எதிரே புள்ளடி (×) இடவும்.

1. 1 மணி 5 நிமிடத்தில் ( ) 2. 1 மணி 6 நிமிடத்தில் ( )

3. 1 மணி 55/11 நிமிடத்தில் ( ) 4. 1 மணித்தியாலத்தில் ( )

68. 2 ரூபாவிற்கு ஒரு மாம்பழமும் ஒரு அன்னுசிப் பழமும் வாங்க முடியும். 3 ரூபா 25 சதத்திற்கு ஒரு மாம்பழமும் ஒரு அன்னுசிப் பழமும் ஒரு தோடம்பழமும் ஒரு மாதுளம் பழமும் வாங்கலாம். ஒரு அன்னுசிப்பழம் ஒரு மாம்பழத்தைப் போல மும்மடங்கு விலையுடையது. ஒரு மாம்பழம் ஒரு தோடம்பழத்தைப் போல இரு மடங்கு விலையுடையது. ஆயின், ஒரு மாதுளம்பழத்தின் விலை என்ன? ............

69. ஒரு சந்தையில் ஒரு வியாபாரி நிரைக்கு 5 ஆக 25 தோடம்பழங்களைச் சற் சதுரமாக அடுக்கிறுன். பின் இவற்றின் மேல் தோடம்பழங்களை அடுக்கடுக் காக வைத்து இறுதியில் ஒரு தோடம்பழம் வரும்வரை பிரமிட் போன்ற உருவத்தை அமைத்தான். இவ்வாறு அமைக்கப்பட்ட குவியலில் மொத்தம் எத்தனை தோடம்பழங்கள் காணப்படும்? ............

70. கணக்கு ஒன்றைச் செய்ய குமார் எடுத்துக்கொள்வதைப்போல் இரு மடங்கு நேரத்தைச் சுகுமார் எடுத்துக்கொள்வான். சுகுமார் செய்ய எடுத்துக்கொள்ளும் நேரத்தில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தில் இராமன் செய்துகொள்வான். மிகக் குறைந்த நேரத்தில் கணக்குச் செய்யக்கூடியவன் யார்? ............

## பிரிவு—X

ஒவ்வொரு நிரையிலும் 'அ' பிரிவிலுள்ள உருவங்கள் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளன. ஆயினும் இப்பிரிவிலே ஒவ்வொரு நிரையிலும் ஒரு சதுரம் வெறுமையாக உள்ளது. இந்த வெற்றுச் சதுரத்தை நிரப்ப அதே நிரையில் 'ஆ' பிரிவில் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்ட உருவங்களிலிருந்து சரியான ஓர் உருவத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடவும்.

(அ) (ஆ)

உதா:




இங்கு தரப்பட்டுள்ள உதாரணத்தில் வெற்றுச் சதுரத்திற்குப் பொருந்தக்கூடிய உருவம் 2 ஆவது உருவமாகும். இதனால் இதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

இனி, கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) (ஆ)

71. 

72. 

73. 

74. 

75. 

## பிரிவு—XI

ஒவ்வொரு நிரையிலுமுள்ள உருவங்களில் ஓர் உருவம் மற்றைய உருவங்களில் இருந்து வேறுபட்டுள்ளது. இந்த உருவத்தின் கீழ் கோடிடவும்.

76. 


77. 


78. 


79. 


80. 


## பிரிவு—XII

ஒவ்வொரு நிரையிலும் முதலாவது உருவம் இரண்டாவது உருவத்துடன் ஏதோ வகையில் தொடர்புற்றுள்ளதைக் காணலாம். அதுபோல மூன்றாவது உருவத்துடன் தொடர்புற்றுள்ள ஓர் உருவம் அதே நிரையில் 4, 5, 6, 7 என இலக்கம் இடப்பட்டுள்ள உருவங்களுள் இருப்பதைக் காணலாம். அந்த உருவத்தின் கீழ் கோடிடவும்.

81. 


82. 


83. 


84. 


85. 


## பிரிவு—XIII

ஒவ்வொரு நிரையிலும் முதலாவது சதுரத்துள் ஓர் உருவம் உள்ளது. அதனை அடுத்து 1 தொடக்கம் 5 வரை இலக்கமிடப்பட்ட வேறு 5 உருவங்கள் உள்ளதைக் காணலாம். இந்த 5 உருவங்களில் இரண்டு உருவங்கள் முதலாவது சதுரத்தில் உள்ள உருவம் சுழன்று திரும்பியதால் ஏற்பட்டது. அவ்விரு உருவங்களையும் கண்டுபிடித்து அவற்றின் கீழ் கோடிடவும்.




86.
87.
88.
89.
90.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

புலமைப் பரிசிற் பரீட்சை யூன், 1977

## (ஐந்தாம் தரம்)

**உளச்சார்புச் சோதனை 1¼ மணி**

சுட்டெண்.........

**பின்வரும் உரைப் பகுதியை வாசிக்க.**

ஏதாயினும் உண்பதற்காக நாள் முழுவதும் அலைந்து திரிந்து, நடப்பதற்கே முடியாது இளைத்துப்போன நிலையில் அவன் தனது மரத்தின் கீழ்ப் படுத்துத் துயின்றுவிட்டான். அவன் நித்திரையினின்றும் விழித்துத் தனது அவயவங்களை நீட்டி எழுந்தான். உடனே அவன் ஏதோ தன் காலடியில் ஊர்வதாக உணர்ந்து அவ்விடத்தினின்றும் அப்பாலே பாய்ந்தான். அவன் தனக்கு அப்பாலே ஏறத்தாழ ஒரு யார் தூரத்தில் பெரிய பாம்பு ஒன்று படம் எடுத்த வண்ணம் தன்னைத் தீண்டுவதற்கு நிற்பதைக் கண்டான். ஒரு சிறிது அசைந்தாலும் அந்த நச்சுப் பற்கள் தன்மேல் தவறாது பாயுமென உணர்ந்து அவன் அசைவற்ற நிலையில் நின்றான். அதே நேரத்தில் அவனுக்கு மெல்லிய டிக்டிக் என்னும் சத்தம் ஒன்றும் கேட்டது. அவனது கீரி அதன் பொந்திலிருந்து வெளியே வந்தது. பாம்பின் கவனம் இப்போது கீரியின் சத்தம் காரணமாக, அவனைக் காட்டிலும் மிகுந்த எதிரியாகிய கீரியை நோக்கியே திரும்பியது. அந்தக் கீரிப்பிள்ளை எதுவித பயமோ தயக்கமோ இல்லாமல் உறுமிய வண்ணம், மயிர் சிலிர்த்தபடி பாம்பை நோக்கி முன்னேறிச் சென்றது. அபாயகரமாக இருந்தபோதும், அவன் அவ்விடத்திலிருந்தும் தனது செல்லப் பிராணியை எடுத்துவிட நினைத்தான். அக் கணத்திலே பாம்பு கீரியின் மேற் பாய்ந்தது. பாம்பின் தாக்குதல் போலவே கீரியின் பாய்ச்சலும் அவ்வளவு துரிதமாக இருந்தது. கீரி தப்பித்துக் கொண்டது. பாம்பின் தலை தரையைக் கொத்தியது. அப் பாம்பு இரைந்த வண்ணம் திரும்பி மீண்டும் நிலத்தைக் கொத்தியது, கீரிப் பிள்ளை எதுவித அச்சமுமின்றிக் கோபத்துடன் உறுமியது. இச் சண்டையைப் பார்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாத நிலையில் அவன் நின்றான். என்ன செய்ய வேண்டும் என்பது கீரிக்குத் தெரியுமென்பதை அவன் கண்டுகொண்டான். எவ்வாறாயினும், பாம்பும் கீரியும் சண்டையிடுவதற்கு ஒன்றுக்கொன்று ஈடானவையல்ல. பாம்பு ஏறத்தாழ ஐந்து அடி நீளமான நச்சுப் பிராணியாகும். கீரிப்பிள்ளையோ ஓர் அடி நீளங்கூட இல்லாத சிறிய பிராணி.

இப்பொழுது ஒவ்வொரு வினாவுக்குக் கீழேயும் தரப்பட்டுள்ள விடைகளுள் மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. தனது அவயவங்களை நீட்டி என்பதன் கருத்து.

(1) முணு முணுத்தது (2) தனது கைகளையும் கால்களையும் நீட்டி
(3) செருமிக் கொண்டு (4) தனது உடைகளின் மடிப்புகளை விரித்துவிட்டு

2. 'டிக் டிக்' சத்தம் கேட்டது எங்கிருந்து?

(1) மரப்பொந்திலிருந்து (2) மனிதனுக்கு அண்மையிலிருந்து
(3) மரத்தின் இலைத் தொகுதியிலிருந்து (4) பாம்பின் வாயிலிருந்து

3. அவனுடைய காலடியில் ஊர்ந்த பிராணியின் நீளம் என்ன?

(1) சரியாக அதனைக் கூறமுடியாது (2) ஏறத்தாழ ஓர் அடி
(3) ஏறத்தாழ ஐந்து அடி (4) ஏறத்தாழ மூன்று அடி

4. பாம்புக்கும் கீரிக்கும் சண்டை மூண்டபின் அபாயகரமான செயலென அவனுக்குத் தோன்றியது எது?

(1) தடி ஒன்றை எடுத்துப்பாம்பை அடித்தல்
(2) பாம்புடன் சண்டையிடும் கீரியைப் பிரித்தெடுத்தல்
(3) சண்டை நிகழும்போது அங்குமிங்குமாக உலாவித் திரிதல்
(4) சண்டை நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் நிற்றல்

5. சண்டையைப் பார்ப்பதைத் தவிர அவனால் வேறொன்றும் செய்ய முடியவில்லை என்பதன் கருத்து:

(1) சண்டை எப்படி நடந்தது என்பதைப் பார்க்காமல் இருக்க அவனுக்கு முடியவில்லை என்பது.

(2) அவனுக்கு வேறு எதுவும் செய்ய முடியவில்லை என்பது.

(3) சண்டையைப் பார்க்க அவனுக்குப் பயமாக இருந்தமையால் வேறெங்கேயோ பார்த்த வண்ணம் நின்றான் என்பது.

(4) அதிக நேரம் அவனால் பார்க்க முடியவில்லை என்பது.

6. தாக்குவதற்குக் கீரி எந்த முறையைக் கையாண்டது?

(1) பாம்பு அஞ்சும்படியாக மயிர் சிலிர்த்தபடி உறுமுதல்

(2) உடனே பாம்பைத் தாக்குதல்

(3) பாம்பின் தாக்குதலைத் தவிர்த்து, தாக்குவதற்கு வாய்ப்பான தருணம் பார்த்திருத்தல்

(4) தன்னைத் தாக்கும் வேளைகளிலெல்லாம் பாம்பைத் தாக்குதல்

7. முதன் முதலில் அவன் பாம்பைக் கண்டதும் அது யாரைத் தாக்கத் தயாராக இருந்தது?

(1) மனிதனையேனும் கீரியையேனும் (2) மனிதனை

(3) கீரியை (4) மனிதனையும் கீரியையும்

8. பின்வரும் எந்தக் கூற்று பாம்பு—கீரிச் சண்டை விரைவாக முடியவில்லை எனபதைக் காட்டுகின்றது?

(1) கீரிப்பிள்ளை கோபத்துடன் உறுமிய வண்ணம் அச்சமின்றி நின்றது

(2) பாம்பு தாக்கியது போலவே கீரியின் பாய்ச்சலும் அவ்வளவு துரிதமாக இருந்தது.

(3) கீரிப்பிள்ளை எதுவித பயமோ தயக்கமோ இல்லாமல் உறுமிய வண்ணம் மயிர் சிலிர்த்தபடி பாம்பை நோக்கி முன்னேறிச் சென்றது.

(4) கீரிக்கு என்ன செய்ய வேண்டுமென்பது தெரியுமென்பதை அவன் கண்டு கொண்டான்.

## II

கீழேயுள்ள ஒவ்வொரு வரியிலும் ஐந்து சொற்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு ஒத்த கருத்துடையவை; இரண்டு எதிர்க் கருத்துடையவை. மிகுதியாக உள்ள சொல்லைத் தெரிவு செய்து அந்தச் சொல்லின் கீழ் கோடிடுக.

*இந்த உதாரணத்தைப் பார்க்க;*

*(1) கருமை (2) கர்வம் (3) வெண்மை (4) ஒளி (5) பிரகாசம்.*

இங்கு கருமை, வெண்மை ஆகியன எதிர்க் கருத்துடைய சொற்கள் ஒளி, பிரகாசம் ஆகியன ஒத்த கருத்துடைய சொற்கள். மிகுதியாக உள்ள கர்வம் என்ற சொல்லின் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

9. (1) இருள் (2) ஒளி (3) மரம் (4) கொடி (5) விருட்சம்
10. (1) அழகற்ற (2) ஆடம்பரமான (3) செல்வமுள்ள (4) வறுமையான (5) கர்வமுள்ள
11. (1) பலமற்ற (2) விரைவான (3) வெளிறிய (4) துரிதமான (5) பலமான
12. (1) சூடு (2) ஒளி (3) குளிர்ச்சி (4) பாரம் (5) வெளிச்சம்
13. (1) பிரியம் (2) வெட்கம் (3) அன்பு (4) புகழ்ச்சி (5) இகழ்ச்சி
14. (1) துணிவு (2) வெற்றி (3) அவமானம் (4) தோல்வி (5) தைரியம்
15. (1) முதிர்ந்த (2) கடினம் (3) பழுத்த (4) இளமை (5) மென்மை
16. (1) கோமளம் (2) கரடு முரடு (3) சோம்பல் (4) இளமை (5) சுறுசுறுப்பு
17. (1) புராதன (2) எதிர்காலம் (3) வருங்காலம் (4) ஆரம்பம் (5) நவீன

## III

கீழே ஒவ்வொரு வரியிலும் நான்கு சொற்கள் இருத்தல் வேண்டும். மூன்றும், நான்காம் சொற்கள் எவ்வகையில் தொடர்புடையனவாக இருக்கின்றனவோ அவ்வாறே முதலாம் இரண்டாம் சொற்கள் இருக்கும்படியாக அமையும் சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக. சரியான சொல்லின் கீழ் கோடிடுக.

இந்த உதாரணத்தைக் கவனிக்க:

நீர்......... ; சோறு : உண்ணுதல்

(1) ஊட்டுதல் (2) பானம் (3) ஓடுதல் (4) <u>பருகுதல்</u> (5) போதல்

சோறு நாம் உண்ணும் உணவாகும். நீர் நாம் பருகும் பானமாகும். இங்கு சரியான விடை பருகுதல் என்பதாகும்.

18. பறவை............ : விலங்கு ; எருது
(1) இறக்கை (2) மயில் (3) பாம்பு (4) நாய் (5) முட்டை

19. ............ ; சோறு ; ; பலகை ; பெட்டி
(1) நெல் (2) வயல் (3) அரிசி (4) வேர் (5) தானியம்

20. மூக்கு ; ; மணம் ; ; நாக்கு ; ............
(1) புளிப்பு (2) சுவை (3) அமிலம் (4) கசப்பு (5) இனிமை

21. நரி ; குள்ளநரி ; : ............ ; வறிய
(1) பிச்சைக்காரன் (2) செல்வமான (3) வறியவன் (4) சோம்பல்
(5) பணமில்லாத

22. குரக்கன் ; தானியம் ; ; மாம்பழம் ............
(1) கனிவகை (2) தோடம்பழம் (3) வித்து (4) மரம் (5) இனிமை

23. பறவை ; கூட்டம் ; ; மாடு ; ............
(1) பண்ணை (2) மந்தை (3) இலாயம் (4) சோடி (5) வண்டி

24. 9785 ; 5879 ; ; வசுமதி : ............
(1) திசுமவ (2) சுமீவதி (3) மசுவதி (4) திமசுவ (5) வமசுதி

25. 3 : 9 : : ............ ; புரட்டாதி
(1) பங்குனி (2) தை (3) மாசி (4) சித்திரை (5) மார்கழி

26. தாகம் ; ............ : : பசி ; உணவு
(1) களைப்பு (2) திரவம் (3) நீர் (4) இரசம் (5) தோடம்பழம்

27. போட்டி ; வெற்றி : பரீட்சை : ...........

(1) பள்ளிக்கூடம் (2) சித்தியின்மை (3) சித்தி (4) மாணவர் (5) பெறுபேறு

## IV

கீழே ஒவ்வொரு தொடரிலும் தரப்பட்டுள்ள எண்கள் ஏதோ ஒரு முறைமையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இடைவெளியில் வரவேண்டிய எண்ணைக் கோட்டில் எழுதுக.

இந்த உதாரணத்தைக் கவனிக்க.

1, 2, 3, 4, —— 6. 7, 8, 9. 10

இங்கு எந்த ஓர் எண்ணும் அதற்கு முன்னுள்ள எண்ணைக் காட்டிலும் ஒன்று கூடியதாக உள்ளது. எனவே 4 க்கும் 6 க்கும் இடையே வரவேண்டிய எண் 5 ஆகும்.

28. 2, 4, 6, 8 ——, 12, 14, 16

29. 3, —— 9, 12 15 18, 21, 24

30. 2, 4, 8, 16, 32, ——, 128, 256

31. 3, 6, ——, 24, 48, 96, 192

32 3, 4, 6, 9, 13, 18 ——, 31

33. ——, 22, 16, 11, 7, 4, 2, 1

34. 5, 10, ——, 23, 31, 40, 50, 61

35. ——, 6, 18, 54, 162

## V

சரியான விடையின் கீழ்க் கோடிடுக

36. எனது சகோதரன் என்னிலும் பார்க்க அதிக பணம் வைத்திருக்கின்றான். எனது சகோதரி எனது சகோதரனிலும் பார்க்கக் குறைவாக வைத்திருக்கிறாள். எவரிடம் மிகக் குறைவான பணம் இருக்கின்றது.

(1) என்னிடம் (2) சகோதரனிடம் (3) சகோதரியிடம்

(4) சொல்ல முடியாது.

37. இராதாவைவிட மாலா 30/- ரூபா குறைவாக வைத்திருக்கிறாள். அவர்கள் இருவரிடமும் மொத்தம் 100/- ரூபா இருந்தால் மாலாவிடம் எத்தனை ரூபா இருக்கும்?

(1) 35 (2) 60 (3) 70 (4) 130 (5) 100

38. அருள் என்பவன் 60 யார் தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் தீசன் என்பவன் 100 யார் தூரத்தை ஓடுவான். தீசன் 50 யார் தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் இரஞ்சன் என்பவன் 40 யாரை ஓடுவான். இவர்களில் மிக மெல்ல ஓடுபவன் யார்?

(1) அருள் (2) இரஞ்சன் (3) தீசன்

ஒரு விளையாட்டு மைதானத்தில் விஜயன், குமரன், பரதன், அருணன் ஆகிய இல்லங்களுக்குச் சொந்தமான கூடாரங்கள் உள்ளன. ''விஜயனுக்கு''த் தெற்குப் பக்கமாக 25 யார் தூரத்தில் ''பரதன்'' அமைந்துள்ளது. ''பரதனுக்கு'' மேற்கே 20 யார் தூரத்தில் ''அருணன்'' உள்ளது. ''அருணனுக்கு'' வடக்கே 25 யார் தூரத்தில் ''குமரன்'' உள்ளது.

39. ''குமரனி''லிருந்து எத்திசையில் ''விஜயன்'' அமைந்திருக்கிறது?

(1) வடக்கே (2) மேற்கே (3) வடமேற்கே (4) கிழக்கே

40. ''குமரனுக்கும்'' ''விஜயனுக்கும்'' இடையேயுள்ள மிகக் குறைந்த தூரம் என்ன?

(1) கூறமுடியாது (2) 50 யார் (3) 45 யார் (4) 20 யார்

எனது தந்தையார் எனக்குச் சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறங்களில் வெசாக்கு விளக்குகளை வாங்கினார். எனது சகோதரன் தனக்கு நீலம், பச்சை, வெள்ளை ஆகிய நிறங்களில் விளக்குகளைப் பெற்றுக் கொண்டான். எனது சகோதரி ஊதா, நீலம், பச்சை நிறங்களில் பெற்றுக் கொண்டாள்.

41. நானோ எனது சகோதரனோ பெறாது எனது சகோதரி மாத்திரம் பெற்ற நிறம் யாது?

(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை (4) வெள்ளை (5) ஊதா

42. நானோ எனது சகோதரியோ பெறாது எனது சகோதரன் மாத்திரம் பெற்ற நிறம் யாது?

(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை (4) வெள்ளை (5) ஊதா

43. எனது சகோதரனோ எனது சகோதரியோ பெறுத நிறம் என்ன?

(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை (4) வெள்ளை (5) ஊதா

44. நாங்கள் மூவரும் பெற்ற நிறங்கள் எவை?

(1) சிவப்பும் ஊதாவும் (2) நீலமும் பச்சையும் (3) ஊதாவும் நீலமும்

(4) பச்சையும் வெள்ளையும் (5) வெள்ளையும் ஊதாவும்.

45. A, B, C ஆகிய மூவரும் உயரமான ஆண்கள். D, E ஆகிய இருவரும் உயரமற்ற பெண்கள். D, C ஆகிய இருவரும் இறைச்சி உண்பதில்லை. பின் வருபவர்களில் எவர் இறைச்சி உண்பவரும் உயரமற்றவருமாவர்?

(1) A (2) B (3) C (4) D (5) E

## VI

கீழே தரப்பட்டிருக்கும் ஒவ்வொரு வினாவிலும் உள்ள உருக்களில் நான்கு உருக்கள் ஏதோ ஒருவகையில் ஒத்திருக்கின்றன. வேறுபட்டிருக்கும் இரண்டு உருக்களின் கீழும் கோடிடுக.

உதாரணத்தைக் கவனிக்க;




இங்கே 1, 2, 4, 6 எனும் உருக்கள் ஒரே மாதிரியான 2 கோடுகளைக் கொண்ட தொகுதிகளை இணைப்பதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. 3, 5 ஆகிய உருக்கள் இவ்வகையில் அமையவில்லை. ஆகவே அவை கோடிடப்பட்டுள்ளன.

1 2 3 4 5 6

46. 

47. 

48. 

49. 

50. 

51. 

52. 

1 2 3 4 5 6

53.



54.


55.


56.


57.


58.


59.


60.


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

புலமைப் பரிசிற் பரீட்சை 1978

(ஐந்தாம் தரம்)

உளச்சார்புச் சோதனை 1½ மணி

சுட்டெண்..................

சோதனை—I

1. ஒரு கடிதத்தின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வோர் இடைவெளியிலும் எழுத வேண்டிய மிகப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

அன்புள்ள தங்காய், தம்பீ.

நத்தார் விடுமுறைக்குப் பின்...... (சோகமான/இருள் மயமான/உற்சாகமான) ஒரு நிலைமை இருப்பதுபோலத் தோன்றுகிறது. கடந்த சில நாட்களில் நாங்கள்...... (அழப் / அதிசயிக்கப் / பார்க்கப்) போன இடங்களில் எல்லாம் பெரிய...... (சனக் கூட்டங்கள்/மரங்கள்/மிருகங்கள்) காணப்பட்டன. இந்த இடங்களை எல்லாம்........ (போயடைவதற்கு / பராமரிப்பதற்கு / நிறந் தீட்டுவதற்கு) அவற்றை...... (காட்ட/தேட / பார்க்க) வரும் மக்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களே உபயோகிக்கப்படுகின்றன. பாரிஸ் ஒரு பெரிய நகரம். அங்கே பார்க்க வேண்டிய பொருள்களும்...... (பார்க்கப்பட வேண்டும்/எண்ணற்றவை/அற்பமானவை). வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பொருள்களே அல்லாமல்...... (பெரிய/புராதன/நவீன) கலைப் படைப்புப் பொருள்களையும் உல்லாசப் பிரயாணிகள் அங்கே பார்க்கலாம். அந்த நகரத்தைப் பற்றி அதிகம்...... (சொல்லக் கூடிய/அறியாத/அறிந்த) மக்களுக்குத் தகவல் தருவதற்கு அங்கே ஒரு...... (கடையும்/நிலையமும்/வெளியிடமும்) உண்டு. பாரிஸில் இத்தகைய அழகிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள் பல இருந்தபோதும், நகரத்துக்கு வெளியேயும் பார்க்கத்தக்க இடங்கள் எத்தனையோ...... (இல்லை/பலவாகும்/உண்டு).

சோதனை—II

கீழே உள்ள ஒவ்வொரு வினவுக்கும் விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

இந்த உதாரணத்தைப் பார்க்க:

38. 34, 58, 19, 29, என்னும் எண்களில் மிகச் சிறிய எண்ணை எழுதுக. 19

இதற்கு விடை 19 ஆகும். அது புள்ளிக் கோட்டில் எழுதப்பட்டுள்ளது. .........

இப்போது கீழே உள்ளவற்றிற்கு விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக;

2. யார், பாகம், சங்கிலி, அங்குலம், அடி என்பவற்றுள் மிகக் கூடிய நீளத்தைக் குறிக்கும் சொல்லின் இரண்டாம் எழுத்தை எழுதுக. .........

3. பின்வரும் எழுத்து வரிசையில் "த" என்னும் எழுத்துத் தவிர, வேறு எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
த, த, ஙு, ட, ம,க், க, த, ல, ன, வ, க, ச, ண, ப. .........
த, ஞ, ய, ல, ழ, ற, ன

4. 73 இற்கும் 85 இற்கும் உள்ள வித்தியாசம், 38 இற்கும் 50 இற்கும் உள்ள வித்தியாசத்திலும் சிறியதாயின், புள்ளிக் கோட்டில் 25 என்று எழுதுக; பெரியதாயின் 43 என்று எழுதுக; சமமாயின் 34 என்று எழுதுக. .........

5. இந்த எண்களைப் பார்க்க.
254, 317, 249, 202, 232. இவற்றை மிகச் சிறிய எண்ணிலிருந்து தொடங்கி ஏறு வரிசையில் எழுதினல், அத்தொடரில் நடுவில் வரும் எண்ணின் நடு இலக்கத்தை எழுதுக. .........

6. 29, 33 என்னும் எண்கள் இரண்டினதும் கூட்டுத்தொகை 428, 491 என்னும் எண்களின் வித்தியாசத்துக்குச் சமமாயின் புள்ளிக் கோட்டில் 13 என்று எழுதுக; குறைந்ததாயின் 17 என்று எழுதுக; கூடியதாயின் 31 என்று எழுதுக. .........

7. இந்தச் சொற்களைக் கவனிக்க.

மதுரகவி, நளினநடை, ரசிகமணி, துரககதி

இந்தச் சொற்களுள்ளே, ஒரு சொல்லில் உள்ள ஓர் எழுத்தாயினும் மற்றச் சொற்களில் காணப்படவில்லை. அந்தச் சொல்லின் இரண்டாம் எழுத்துக்குப் பின்வரும் இரண்டாம் எழுத்து என்ன?

## சோதனை—III

பின்வரும் வினாக்களில், ஒவ்வொரு நிரையிலும் தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்கு மிகவும் ஒத்த கருத்துள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.

இந்த உதாரணத்தைப் பார்க்க:

மரம்: நீர், <u>விருட்சம்</u>, காடு, கொடி, வனம்.

மரம் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் விருட்சம் என்பதாகும். ஆகவே, அதன் கீழ் கோடு இடப்பட்டுள்ளது.

8. **நேர்மையான:** அன்பான, நட்பான, கபடமற்ற, கொடிய, விசுவாசமான
9. **நூதனம்:** கோணல், முதன்மை, முற்போக்கு, புதுமை, விநோதம்
10. **முதிய:** வளர்ந்த, மூத்த, கூனிய, வயோதிப, முதிர்ந்த
11. **ஒளிப்பு:** உறை, திரை, மூடி, மறைப்பு, இறப்பு
12. **இடைக்கிடை:** நித்தம், அடிக்கடி, தினந்தோறும், இருந்தாற்போல், ஊடேயூடே
13. **சூக்குமம்:** சிறுமை, மென்மை, நுண்மை, அற்பம், சூழ்ச்சி
14. **தொல்லை:** அலைக்கழிவு, தொந்தரவு, நச்சரிப்பு, பொல்லாப்பு, சச்சரவு
15. **எழுத்தாளர்:** பதிப்பாளர், கவிஞர், நூலாசிரியர், இலிகிதர், செயலாளர்
16. **வந்தனை:** வணக்கம், பலியிடல், காணிக்கை, கௌரவித்தல், வாழ்த்துதல்
17: **முயற்சி:** வெறுப்பு, ஊக்கம், இளைப்பு, ஆசை, அசட்டை

## சோதனை—IV

பின்வரும் வினுக்களில், ஒவ்வொரு நிரையிலும் உள்ள சொற்களுள் ஒன்று ஏனைய வற்றிலும் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமானது. அச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக:

பின்வரும் உதாரணத்தைப் பார்க்க;

நாய், ஆடு, மாடு, பூனை, <u>கரடி</u>.

இங்கே கரடி தவிர, ஏனைய எல்லாம் வீட்டு மிருகங்களாகும். கரடி காட்டு மிருகமாகும். ஆகவே, அதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

இப்போது கீழே உள்ள வினுக்களுக்கு விடை தருக.

18. கத்தி, உலக்கை, துருவலகு, கரண்டி, வாள்.

19. கோயில், பலிபீடம், கோபுரம், பூசகர், கொடிக் கம்பம்.

20. வெள்ளை, கறுப்பு, கபிலை, உயரம், சிவலை,

21. நதி, குளம், வாய்க்கால், அருவி, ஓடை.

22. கிளை, இலை, பட்டை, முளை, பழம்.

23. மரம், விருட்சம், தரு, நிழல், செடி.

24. அண்மையான, சமீபமான, கிட்டிய, உடனடியான, அருகான.

25. அவா, நட்பு, தயை, கருணை, அன்பு,

26. கனக, சகச, வலவ, தகத, ககன

## சோதனை—V

பின்வரும் வினுக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சொற்கள் அல்லது எண்கள் குறித்த ஒரு விதிப்படி எழுதப்பட்டுள்ளன. அந்த விதியைக் கண்டு, அடுத்து வரவேண்டிய சொல்லை அல்லது எண்ணைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

27. செக்கன், நிமிடம், மணி, நாள், கிழமை, மாதம், .........

28. முழுகு, குழுமு, திருகு, குருதி, வரகு, .........

29. வடகு, குவடு, தலைவி, விதலை, மலிக, .........

30. விசுவபதி, சுவபதிவி, வபதிவிசு, பதிவிசுவ, .........

31. விடுதலை, தலைமுடி, முடிமணி, மணிமலை, ......... நாடு.

32. 9873, 8739, 7398, 3987 .........

## சோதனை—VI

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதல் இரு சொற்களும் ஒரு வகையான தொடர்பு உடையன. மூன்றாவது சொல்லுக்கு அதே தொடர்பு உடைய மற்றச் சொல்லை அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

**பின்வரும் உதாரணத்தைப் பார்க்க:**

இனிமை: சீனி : : புளிப்பு : (கைப்பு, பாண், உப்பு, எலுமிச்சம்பழம்)
சீனி, இனிமையான பொருள், அதுபோல கொடுக்கப்பட்டுள்ள சொற்களுள் புளிப்பான பொருள் எலுமிச்சம் பழமாகும். ஆகவே அதன் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

இவ்வாறே பின்வரும் வினாக்களுக்கும் விடைதருக:

33. தண்ணீர் : பனிக்கட்டி : : பால் : (மோர், தயிர், நெய், பாற்கட்டி, வெண்ணெய்)

34. அடிக்கோல் : நீளம் : : தராசு : (படி, இறுத்தல், கிராம், நிறை, அகலம்)

35. அந்தகாரம் : இருள் : : சுலபம் : (கடை, அருமை, பொருள், எளிது, இலாபம்)

36. மண்வெட்டி : வயல் : : உளி : (பலகை, கம்மாலை, தச்சுக்களம், தட்டுப்பொல்லு, செதுக்கல்)

37. வீடு : கூரை : : பேனை : (எழுதுதல், மை, கூர், பார்க்கர், மூடி)

38. குமுதபதி : திபதமுகு : : திமிராரிபு : (புரிரமிதி, மிரபுரிதி, ரிபுதிமிர, புரதிமிரி, ரமிதிபுரி)

39. கட்டணம் : விலை : : நாற்கால் விலங்கு : (செந்து, மாடு, பிராணி, மிருகம், உயிர்)

### சோதனை—VII

''அக்காவின் திருமணம் புதன்கிழமை—தம்பி''

என்ற தந்தியொன்று எனக்குக் கிடைத்தது. இதிலிருந்து பின்வருவனவற்றுள் நிச்சயமான நிகழ்ச்சி எது என்பதைக் கீழ் கோடிட்டுக் காட்டுக.

40. (i) அக்காவுக்குத் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பது.

(ii) அக்காவின் திருமணச் சடங்கு புதன்கிழமை நடைபெறும் என்பது.

(iii) நான் எனது ஊரிலிருந்து தொலைவிலே வேலை செய்கிறேன் என்பது.

(iv) என் தம்பி அக்காவுடன் ஒரு வீட்டிலே வசிக்கிறான் என்பது.

(v) எனக்குத் தந்தி செவ்வாய்க்கிழமை கிடைத்தது என்பது.

### சோதனை—VIII

இந்த உதாரணத்தைப் பார்க்க:

3, 6, 9, 12, 15, 18, 21, 24.

இந்த உதாரணத்தில் எண்கள் ஒவ்வொன்றும் 3 ஆல் அதிகரித்து வருகின்றன. ஆகவே, அடுத்து வரும் இரு எண்களான 21, 24 என்பன புள்ளிக் கோட்டில் எழுதப்பட்டுள்ளன.

இப்போது, பின்வரும் ஒவ்வொரு எண்தொடரின் அமைப்பு மாதிரியையும் கவனித்து, அடுத்து வரவேண்டிய இருஎண்களையும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

41. 10, 10, 8, 8, 6, 6, 4, 4, ...... ......

42. 9, 2, 7, 2, 5, 2, 3, 2, ...... ......

43. 2, 5, 6, 9, 10, 13, 14, 17, 18, ...... ......

44. 6, 10, 14, 18, 22, 26, 30, ...... ......

45. 45, 15, 40, 14, 35, 13, 30, 12, ...... ......

46. 8, 12, 10, 14, 12, 16, 14, 18, 16. ...... ......

47. 16, 8, 4, 2, 1. $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$, ...... ......

48. 1, 4, 9, 16, 25, 36, 49, ...... ......

49. 4, 6, 9. 10, 12, 15, 16, 18, 21, 22, ...... ......

50. 1, 8, 14, 19, 23, 26, ...... ......

## சோதனை—IX

*பின்வரும் வினக்களில் +, —, ×, ÷ என்னும் அடையாளங்களுள் பொருத்தமானவற்றைத் தெரிந்து புள்ளிக் கோடுகளில் இடுக.*

இந்த உதாரணத்தைப் பார்க்க:

$5 \times 2 = 10$

விடை 10 ஆக வருவதற்கு 5 இற்கும் 2 இற்கும் இடையில் வரவேண்டிய அடையாளம் "×" ஆகும். ஆகவே, புள்ளிக் கோட்டில் × அடையாளம் இடப்பட்டுள்ளது.

51. 11......8= 19

52. 36......6= 30

53. 64......16= 48

54. 72......6= 12

55. 14......2......9 = 16

56. 1......1......18 = 18

57. 6......6......6 = 30

58. 15......5......2 = 150

59. 8......4......3 = 15

60. 18......3......4......2 = 48

## சோதனை—X

பின்வரும் பயிற்சிகளிலே, இடப்பக்கத்திலுள்ள 1, 2 என இலக்கமிடப்பட்ட உருவங்கள் ஏதோ ஒருவகையில் தொடர்புடையவை. வலப் பக்கத்திலுள்ள 4, 5, 6, 7, 8 என இலக்கமிடப்பட்ட உருவங்களில் ஒன்று, இடபக்கத்திலுள்ள 3 என இலக்கமிடப்பட்ட உருவத்துடன் அதேமாதிரியான தொடர்பு கொண்டுள்ளது. அந்த உருவத்தைத் தெரிவு செய்க. விடை நிரலில், நீர் தெரிவு செய்த உருவத்திற்குரிய இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

இந்த உதாரணத்தைப் பார்க்க:

1 2 3 4 5 6 7 8



4 5 6 (7) 8

இங்கே முதலாவது உருவம் ஒரு பெரிய வெற்றுச் சதுரமாகும். இரண்டாவது உருவம் ஒரு சிறிய வெற்றுச் சதுரமாகும். மூன்றாவது உருவம் ஒரு பெரிய வெற்று வட்டமாகும். இவ்வகையில், அடுத்து வரவேண்டிய உருவம் ஒரு சிறிய வெற்று வட்டம் அல்லவா? அதற்குரிய இலக்கம் 7 ஆகும். ஆகவே, விடை நிரலில் 7 ஐச் சுற்றி வட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறே பின் வருவனவற்றுக்கு விடை தருக:

1 2 3 4 5 6 7 8 விடை நிரல்



| | விடை நிரல் |
|---|---|
| 61. | 4 5 6 7 8 |
| 62. | 4 5 6 7 8 |
| 63. | 4 5 6 7 8 |
| 64. | 4 5 6 7 8 |
| 65. | 4 5 6 7 8 |
| 66. | 4 5 6 7 8 |
| 67. | 4 5 6 7 8 |
| 68. | 4 5 6 7 8 |
| 69. | 4 5 6 7 8 |
| 70. | 4 5 6 7 8 |

1 2 3 4 5 6 7 8



விடை நிரல்

71. 4 5 6 7 8

72. 4 5 6 7 8

73. 4 5 6 7 8

74. 4 5 6 7 8

75. 4 5 6 7 8

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

புலமைப் பரிசிற் பரீட்சை—1979

(ஐந்தாந் தரம்)

உளச்சார்புச் சோதனை 1½ மணி

சுட்டெண்.........

சோதனை I

பின்வரும் பந்தியை வாசிக்க:

